
# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

ஊற்று 1
துளி 5

AMUDHU

අමුද
February '99






## பிடிபட்ட பெருமாள்

Digitized by Noolaham Foundation

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - பெப்ரவரி '99 30/-

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.



குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும் பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.

*ஷமீலா செனவிரத்ன*
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்* **Shell GAS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...



34 மலையக காந்தி

ஐயோ வேண்டாம் 18





எக்ஸ்ட்ரா அழகிகள் 46



யுத்தத் தேர்தல் 08

11 பெருமாளின் பேட்டி

ஃபாஷன் கவர்ச்சி 38

கண்ணீர் சிந்தும் கஸ்தூரி ....... 5
நெற்றிக்கண் ....... 6
Lion Airஉம், UTHRஉம் ....... 7
**அரசியல் அரங்கம்:**
தேர்தலை யுத்தமாக்கும் அரசியல் கலாச்சாரம் ....... 8
வரதரின் சூடான பேட்டி ....... 11
வெளிச்சத்துக்கு வரும் நிழல் உலகம். ....... 14
டின்டின் ....... 17
கசக்கப்படும் பிஞ்சு மலர்கள் ....... 18
**கவிதை:**
நீங்கள் தூவிய மலர்கள் ....... 21
**யாழ் கப்பல் பயணம்**
நாளெல்லாம் அலை மேலே ....... 22
**சிறுகதை:**
நாடற்ற பிராணி ....... 26
சமாதானத்திற்கு ஓர் ஆடு ....... 29
**குங்ஃபூ:**
நீண்ட தூர சண்டை முறை ....... 30
பொறாமை பிடித்த கிரிக்கட் ....... 32
**ஆளுமை:**
மலையகம் மறந்த மகாத்மா ....... 34
**மணிக்கதை:** பிடிப்பு ....... 37
தீராத ஃபாஷன் பித்து ....... 38
டாக்டர் ஆபரேஷ நாதர் ....... 41
**நோயற்ற:** குடல் கான்சரால் முடங்கி விடாதிருக்க ....... 43
**சினிமா:**
ஆடல் காணீரோ!. ....... 44
கிரக சஞ்சாரம் ....... 47
நூல் அறிமுகம் ....... 48

உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.

ஆசிரியர்,
'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி: 454283
ஃபக்ஸ்: 320677
E-Mail: webmgr@sri.lanka.net

Cover & Center Page desinged by: Rajitha Udawatta



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அசைவ'மாகத் தருகிறார்களே தவிர அசிங்கமாகத் தரவில்லையே!

அமுது நடுநிலையானது என்ற எண்ணத்தில் என் கருத்தை எழுதுகிறேன். கட்டாயமாகப் பிரசுரியுங்கள். மனித உரிமைக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழு (UTHR) என்பவர்கள் எப்போதோ யாழ். பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது இல்லை. எனவேஎப்படி அவர்கள் தங்களைUTHR என்றுஅழைத்துக் கொள்ளலாம்? அதை விட்டாலும், இவர்கள் உண்மையான மனித உரிமைகள் குழுவா? புலிகளின் மனித உரிமை மீறல்களை மட்டுமே கண்டிக்கிறார்கள். அரசினுடையதைக் கண்டிக்கவில்லை. கிருஷாந்தி கொலை, செம்மணிப் புதைகுழிகள், நவாலி தேவாலயம் மீதான குண்டுத் தாக்குதல் ஒன்றையும் கண்டிக்கவில்லை. ஆனால் லயன் எயார் அனர்த்தத்தின்போது இறந்த 52 பொதுமக்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு புலிகள் மீது குற்றப்பத்திரிகை வாசிக்கிறார்கள். UTHR என்று அழைப்பதன் மூலம் எமது பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் இவர்கள் பற்றி என்ன நினைப்பது...?

**யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சார்பாக...**
**ச. பிரபாகர், 1ம் வருடம், முகாமைத்துவம்.**

உண்மைக்கு அஞ்சாமை, உள்ளதை உள்ளபடியே புட்டுப்புட்டு வைக்கும் திறமையும் வீரமும் தங்களைத் தவிர இலங்கையிலிருந்து வெளிவரும் எந்தவொரு தமிழ்ச் சஞ்சிகைக்கும் கிடையாது. ஏனையவை ஒரு பக்கச் சார்பாகவே விமர்சிக்கின்றன. அமுது இவர்களுக்குப் பலத்த அடியாகவும் எடுத்துக்காட்டாயும் அமைந்துள்ளது.

**தமிழ் வாணன், யாழ்ப்பாணம்.**

இலங்கையில் ஜாதி, மத பேதமின்றி பலவித அம்சங்களுடன் சஞ்சிகையொன்று வெளிவருவதானால் அது அமுதேதான். ஆனால் மதுவிளம்பரங்களைக்கண்டு கவலைகொண்டநான் நான்காவது துளியில் அவை இல்லாதது கண்டு மகிழ்ந்து போனேன்.

**எம். இம்டியாஸ், மஹியாவத்தை.**

போரின்குழந்தைசிந்தனைக்குரியது. அமைச்சர் தொண்டமானின் பேட்டியில் சமாதானம் இப்போதைக்கு வராது என்று சொன்னது யதார்த்தம் போல் தெரிகிறது. வண்டியோடு தேய்ந்துவிடும் வாழ்க்கை - பெருமூச்சுவிட வைத்துவிட்டது. சிறுகதைகள் யாவும் நன்று.

**கே. எம். வாசகர், கன்னன்குடா.**

தித்திக்கும் செய்திகள், தரமான ஆக்கங்கள், அட்டைப் படமோ அர்த்தமுள்ள நர்த்தனம். 'இந்தியா டுடே' தோற்றது போங்கள்.

**அப்துல் கயூம், பதுளை.**

அரசியல் பார்வைகள், சமூக விடயங்கள், மருத்துவம், சிறுகதைகள், காட்டூன் யாவும் என்னைக் கவர்ந்துள்ளன. சாராய விளம்பரம், அரைகுறை ஆடை நடிகைகள் போன்றவற்றைத் தவிர்த்தால் அமுதென்ற பெயர் அமுதம் போல் இருக்குமல்லவா?

**திருமதி. ரி. சோமா, யாழ்ப்பாணம்.**

அமுதுக்கு வரவேற்பளிக்கும் வாசகர்கள் ஏனோ அமுதினை "சைவமாக" மாற்றுவதற்குப் பெருமுயற்சிஎடுப்பது கண்டு வருத்தம். அமுதை எமக்கு "அசைவமாகத் தருகிறார்களே தவிர அசிங்கமாகத் தரவில்லையே! மதுபான விளம்பரம், சினிமா, அரைகுறை நிர்வாணப் படம் போன்றவத்தைத் தப்பான கண்கொண்டு நோக்குவதோடு அமுதில் நஞ்சு கலந்துள்ளதென்ற வார்த்தையை அடிக்கடி பாவிக்காதீர்கள். இருபத்தோராம் நூற்றாண்டில் இப்படியொரு மாற்றம் இலங்கைக்குத் தேவை. உணருங்கள்.

**ஏ. எச். ராஸீன் மொகமட், ஏத்தாழை.**

அமுது கண்ணுக்குக் கவர்ச்சியாகவும் கைக்கு அடக்கமாகவும் உள்ளதால், வாகனத்தில் துவங்கி தூங்கும் வரை வாசிக்கலாம். இன்னும் அறிவுப் போட்டிகளையும் சேருங்கள்.

**-எம். பௌஸான், சீனன்கோட்டை.**

இக்காலத்தில் தமிழுக்கு இருக்கும் தர்மசங்கடத்தில் அமுது உயிர் பெற்றிருப்பது, இருத்தலின் வெற்றியாகும். பிரயத்தனப்பட்டுப்போராடிஅமுதை, அமுதாகவேஅளிப்பதில் பரவசம். போகப் போகப் பார்க்கலாமே என்ற நம்பிக்கையற்றவர்களின் பேச்சை விடுத்து இன்றைய நிகழ்வை அர்த்தமுள்ளதாக்குங்கள்.

**அனார். மருதமுனை.**

அமுதே நீ இலங்கையிலா பிறந்தாய்?

**க. அருமைநாயகம், கொக்குவில்.**

கிண்ணியாவில் அமுது தாமதமாகக் கிடைப்பதற்கு லேக் ஹவுஸ்தான் பொறுப்பேற்க வேண்டும். இதைச் சீராக்கி பொதுமக்கள் அமுதுக்காக முகவர்களைக் குறை சொல்வதை நிவர்த்தி செய்யுங்கள்.

**என். எம். எம். பாருக், கிண்ணியா.**

மதவாக்குளத்தில் அமுது பெறுவது கஷ்டமாக உள்ளது. நிவர்த்தி செய்யவும்.

**மொஹமட் நஸீம், மதவாக்குளம்.**

கவிதை எழுத ஆவல். களம் தருவீர்களா?

**கு. சிறீகணேஷ், மட். தேசிய கல்விக் கல்லூரி.**

இதழ் நாலு, இதமான தென்றலின் இங்கிதம்.

**ம. நாகமணி, கோப்பாய் தெற்கு.**

அமுது ஊற்றின் ஒவ்வொரு துளியும் தேன்.

**எம். ரி. எம். அன்சார், ஏறாவூர்.**

அமுதில் வித்தியாசமான கவிதைகள் காண்கிறேன். என்னையும் எழுதத் தூண்டுகின்றன. அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

**லக்ஸ்மன், நெடுந்தீவு.**

அட! நம் நாட்டிலும் இப்படி ஒரு சஞ்சிகையா? பிரமிக்கிறேன். ஜோர்.

**து. வசந்தி, கோப்பாய்.**

சினிமாச் செய்திகள் பிரமாதம். ஆனால் ஆபாசப் படங்களைத் தவிருங்கள். கவிதைகள் எழுதுவோர் வேறு பத்திரிகைகளில் வந்தவற்றை அனுப்பாதிருப்பார்களாக.

**மகேஸ்வரி ராமதாஸ், வத்தேகம.**

அமுது துளி-4ல் டொல்பின்கள் சுமார் 50 வருடங்களுக்கு முன் நிலத்தை விட்டு நீருக்குள் புகுந்ததாக பிழையாக அச்சாகியிருக்கிறது. கவனியுங்கள்.

**சி. சிவராசா, துன்னாலை கிழக்கு.**

அமுது அழகாகவே இருக்கிறாள். அவள் வளர அபிப்பிராயங்களை உங்களுக்கு எழுதுவதே என்னாலானது. அட்டையை எல்லாவித படங்களையும் சேர்த்துப் போட்டுக் குழப்புவது அழகைக் கெடுப்பதாகவே நான் நினைக்கின்றேன். உள்ளே உள்ள செய்திகளை ஒரே பார்வையில் வெளிப்படுத்த நினைத்து அழகைக் குழப்புவதைவிட எளிமையாகவும் அழகாகவும் ஒருபடத்தைப் போடுவது நலலதுஎனநினைக்கின்றேன். அத்தோடு துளி 4ல் வருவது போல தலைவிரி கோலமாக நடிகை நிற்பது புது அழகாக இருந்தாலும் அசிங்கம். **SELECT SOMETING NEW AND PLAIN FOR THE COVER.**
வீணை நல்லதாகவே இருக்கிறது. புழுதியில் எறியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
நேருக்கு நேர் சபாஷ்! துளி 4ல் மூன்று கதைகள். குறைத்துக் கொள்ளுங்கள். விளையாட்டரங்கு ஒன்றைச் சேர்க்கலாம். விஞ்ஞானத்திற்கும் வைத்தியத்திற்கும் என இரண்டுபக்கங்கள் ஒதுக்குங்கள். இன்றும் தமிழினம் பயந்துகொண்டே சுதந்திரத்தைப் பற்றியும், ஜனநாயகத்தைப் பற்றியும், பத்திரிகை தர்மத்தைப் பற்றியும் கதைக்கிறது. கப்பம் கட்டி கட்டிக்கொண்டே எங்கள் வியர்வையை உறிஞ்சிக் குடிக்கிறஒருSetup க்குSupport பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எழுதுங்கள் அவர்கள் உணரட்டும்.

**பயந்தவன். யாதும் ஊரே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

**பிரதமஆசிரியர்:**
எஸ். மனோரஞ்சன்
**இணையாசிரியர்:**
து. பாஸ்கரன்
**கட்டுரையாசிரியர்:**
சி. சிவகுமார்
**ஏனைய ஆசிரிய பீடத்தினர்:**
டி. பீ. எஸ். ஜெயராஜ்
எம். எச். எம். ஷம்ஸ்
எம். எஸ். எம். ஹிஷாம்
**பிரதம வடிவமைப்பாளர்:**
சி. முரளிதரன்
**ஓவியர், கார்டூனிஸ்ட்:**
இ. ப்ரகீத்
**பக்க வடிவமைப்பு (கணனி):**
ஜெரால்ட் எஸ். நடேசன்
**எழுத்தமைப்பு (கணனி):**
எஸ். எம். பிரேம்குமார்
**விளம்பர முகாமையாளர்:**
வருண மல்லவஆராச்சி
**தயாரிப்பு முகாமையாளர்:**
அபய அமரதாஸ
**அச்சமைப்பு முகாமையாளர்:**
நவரட்ணம் சற்குணநாதன்
**விற்பனை முகாமையாளர்:**
அனுர அபேரத்ன
**அச்சிட்டு வெளியிடுவோர்:**
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒ:ப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
**Chief Editor:**
*S. Manoranjan*
**Associate Editor:**
*T. Baskaran*
**Features Editor:**
*S. Sivakumar*
**Other Editorial Staff:**
*D. B. S. Jeyaraj*
*M.H.M. Shums*
*M.S.M. Hisam*
**Chief Designer:**
*C. Muralitharan*
**Computer Graphic Artist/Cartoonist:**
*P.R.B.Ekkneligoda*
**Computer Page make-up:**
*Gerald S. Nadesan*
**Computer Typeset:**
*S.M. Premkumar*

# நல்லதோர் வீணை செய்தே....

நடுநிலைமை...!
வெகுஜன ஊடகங்களின் தாரக மந்திரம்!
அரசியலில், சமூகப் பொறுப்புகளில், யுத்தத்தில், ஏன் விளையாட்டிலும்கூட வெகுஜன ஊடகத் துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையும் இதுதான். கடைப்பிடிக்காதவர்கள்கூட கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்வதும் இதைத்தான்.
ஆனால், விருப்பு வெறுப்புகள் நிறைந்த தனித்தனி மனிதர்களின் பார்வைக் கோணத்தின் கணிப்பாகவே இம் மதிப்பீடுகள் வெளிப்படுகின்றன. இவற்றில் வர்க்க சார்பு இல்லாமல், அரசியல் சார்பு இல்லாமல், தம் சொந்த நிலைப்பாடுகளில்கூட ஒரு தற்சார்பு இல்லாமல் உண்மையான நடுநிலைத் தன்மை இருக்க முடியுமா... என்பது வினாவாக எழுகிறது.
ஒருபுறத்தில் அர்த்தபுஷ்டியாகவும் மறுபுறத்தில் அர்த்தமற்றதாகவும் தெரிந்தாலும் நடுநிலைமை என்பது இருந்தாக வேண்டிய ஒரு தேவை மட்டும் உள்ளது. அத்தகைய நடுநிலைமை எதுவென்பதுதான் கேள்வி. காகம் கறுப்பா வெள்ளையா என்ற கேள்வியில் நடுநிலைமை எது? வெள்ளைக்கும் கறுப்புக்கும் இடைநடுவிலான சாம்பல் நிறமா? காகம் வெள்ளையென்பது பொய்யானால், நடுநிலை என்றுரைக்கப்படும் இச் சாம்பலும் அதற்கு எள்ளளவும் குறையாத பொய்யாகவே அமையும். இங்கு காகம் கறுப்பென்பதைத் தவிர வேறொரு நடுநிலைமை இருக்க முடியுமா?
இதேவேளை கொக்கு வெள்ளையா கறுப்பா என்று இன்னொரு கேள்வி எழுகையில், இங்கும் நடுநிலைமை இரண்டிற்கும் இடைப்பட்ட சாம்பலென்று ஆக முடியாது. இத்தகைய நடுநிலைமையால் காகமும் கொக்கும் ஒரே நிறமாகிவிடும் வேடிக்கையன்றி வேறெதுவும் விளையாது. இங்கு கொக்கு வெள்ளையென்று உரைப்பதொன்றே உண்மை நடுநிலைமை.
எல்லாமே கறுப்பு என்பதும் எல்லாமே வெள்ளை என்பதுமே பக்கச் சார்புகள். காகத்தைக் கறுப்பென்றும் கொக்கை வெள்ளையென்றும் உரைப்பதே நடுநிலைமை. இரண்டுமே சாம்பலென்ற இடைநிலைச் சமரசம் போலிமை! நடுநிலைமை உண்மைக்கு மாறான ஒன்றாக இருக்க முடியாது.
'நடுநிலைமை' = உண்மை.

இது குறித்து விழிப்பாயிருப்போம்!

ஆ-ர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**11%**

**செமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK
பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லி மி ட் ட ட்
*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சிந்தும்... கஸ்தூரி மான்கள்



பெண்ணுக்கு உவமையாயும், பாடல் வரிகளில் அவள் நயம் விளம்பியும் பேர்பெறும் இயற்கையின் படைப்புக்களில் மான்களும் அடங்கும். 'இந்த மான் உந்தன் சொந்த மான் பக்கம் வந்துதான் சிந்து பாடும்' என்றும், 'கஸ்தூரி மானே கல்யாணத் தேனே' என்றும், 'கஸ்தூரி மானை கடன் கேட்டு வாங்கி நான் கொண்ட கண்கள் நாளாச்சு தூங்கி' என்றும், கஸ்தூரி மான்குட்டியாம் இன்று கண்ணீரை ஏன் சிந்துதாம்' என்றும் ஏராளம் பாடல்கள் மான்களை நம் மனதுக்கு உகந்தவையாக்கியுள்ளன....

ஆம், இன்று பாடல்களோடு மட்டும் சஞ்சரித்து பாலைவனங்களாக மாறும் காடுகளுக்குள்ளிருந்து வெளியேறி கண்ணீர் சிந்தும் ஜீவிகளாக மாறிவிட்டன இந்த மான் கூட்டங்கள்.

சுந்தர சுகந்தத்தைத் தரும் வாசனைப் பொருளை தன்னகத்தே தங்கத்திற்கு நிகராய் வைத்திருப்பது கஸ்தூரி மான்கள்தான். ஒருகாலத்தில் திரும்பும் திசையெல்லாம் திரிந்தோடிய இந்த மான் கூட்டம் விரல் விட்டெண்ணக் கூடியளவுக்கு குறைந்து விட்டதென்றால், 'கஸ்தூரி' என்ற அதனிடமிருந்து பெறப்படும் வாசனைத் திரவியத்துக்கு மவுசு கூடியதுதான் காரணம்.

பெருகிவரும் ஜனப்பெருக்கம், மனிதர் சுகபோக வாழ்வுக்கு இல்லம் அமைக்கும் நோக்கில் வெட்டும் காடுகள், மற்றும் அங்கு வளரும் மூங்கில்கள்தான் இவற்றின் புகலிடங்கள். காடுகளே இன்று ஏடுகளாய்ப் போய்க் கொண்டிருப்பதால் இந்த மான்களும் ஏட்டில் மட்டும் காணப்படும் ஒரு உயிரினமாக மாறிக் கொண்டு வருகிறது.

10 - 12 கிலோ கிராம் மட்டுமே எடை கொண்ட மென்மையான, அப்பாவியான இவற்றின் ஓய்விடங்களே மூங்கில் காடுகள்தான். பயந்தசுபாவம்கொண்டஇவை தனிமை விரும்பிகள். எதிரிகளைக் கண்டால் பெருஞ்சத்தத்துடன் தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள திரும்பிப் பார்க்காமலே 50 மீட்டர் தூரம் வரை ஓடும். எவ்வளவு தூரம் ஓடியும் என்ன பயன்? இவை போடும் சத்தமே இவற்றைக் காட்டிக் கொடுத்துவிடும்.

சாம்பலும் பழுப்பும் கலந்த நிற ரோமம், சிலவற்றில் குறுக் குக் கோடுகளும் இவற்றை ஏனைய மான்களிலிருந்து பிரித்துக் காட்டிவிடும்.

கஸ்தூரி மூக்கைப் பறிக்கும் மணமுடையது என்றாலும், இக்கஸ்தூரி மான்களின் இருப்பிடமோ துர்நாற்றம்தான்.

கஸ்தூரி அடங்கிய அந்தப் பொக்கிஷப் பைக்கு உரித்தாளன் ஆண் மான்கள்தான். ஆண் மான்களின் வயிற்றுப் பகுதியின் அடியில் அமைந்துள்ள **"மஸ்க்"** என்ற சுரப்பிகளே வாசனைத் திரவியத்தை அடக்கி வைத்திருக்கும் பெட்டகம். 30 - 40 கிராம் வரையிலான கஸ்தூரியை ஒரு கஸ்தூரி மான் சுரக்கிறது. மே மாதம் முதல் ஜுன் மாதம் எங்கும் ஒரே மணம். ஆண் மானின் சிறுநீரும்கூட சுகந்தமான கஸ்தூரிமணமென்றால்பாருங்களேன்....

உலக சந்தையில் கஸ்தூரிக்கு இருக்கும் மவுசைக் கேட்டால் அசந்து போவீர்கள். எவ்வளவு தெரியுமா? ஒரு கிலோவுக்கு 55,000 அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு மதிப்பின்படி 35 இலட்சத்துக்குமேல். அப்பாடா...! அதனால் தான் அவற்றின் உயிரும் இப் பூவுலகை விட்டு விடைபெற்றுக்கொண்டே செல்கிறது போலும்.

இன்று பாடல்களோடு மட்டும் பரிதாபமாய் வந்து போகும் இந்தக் கஸ்தூரி மான்களில் எஞ்சியுள்ள சிறிதளவையாவது பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் சினிமாப் பாடல்களில் கூட இவை அழிக்கப்பட்டு விடக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிடும். •

**- எச். எஸ். டீன்.**

## பசியும் வேகமும்



பசியோ பசியென அகோரப் பசியினையுடைய பறவைதான் **மரங்கொத்தி.** மரப்பட்டைகளுக்கடியிலும், மரங்களின் துளைகளுக்கடியினுள்ளும் ஒளிந்திருக்கும் வண்டுகளின் குடம்பிகளே இவை பசிக்குப் புசிக்கும் மிகப் பிரதான உணவுகள்.

அப்பா, என்ன திறமை.... ஒரு துளையிடும் இயந்திரத்தினாலும் மரங்கொத்தி துளையிடுகின்ற வேகத்தை வெல்ல முடியவில்லை. மரப் பட்டைகளை கொத்துவதற்கும் துளையிடுவதற்குமென்றே ஏற்றாற்போல அதன் உளி போன்ற அலகு இயற்கையால் படைக்கப்பட்டிருக்கிறது. 2 அல்லது 3 செக்கன்களில் தனது உணவுக்காக 18 தடவைகள் வரையில் ஒரு மரத்தைத் தன் சின்னச் சொண்டால் கொத்தி விடுகிறதென்றால் பாருங்களேன்....

'பசித்திரு புசித்திரு' என்பார்களே, அது மரங்கொத்திக்கும் பொருந்துவதாகவே உள்ளது. ஐரோப்பிய, ஆசியப் பிராந்திய மரங்கொத்திகள் ஒரு தடவையில் விழுங்கும் உணவின் அளவு எவ்வளவு தெரியுமா? 800 வரையிலான வண்டுகளின் புழுக்கள் அல்லது 1000 வண்டுகள்.

ஆலாயிருந்தாலென்ன..... வேலாயிருந்தாலென்ன..... எதுவாயிருந்தாலும் அதனைத் துளையிடும் மரங்கொத்தியின் வேகம் துப்பாக்கித் தோட்டாவின் வேகத்தை விட இரு மடங்காகும். அந்நேரத்தில் அது பிரயோகிக்கும் அழுத்தமோ 1000 மடங்கு புவியீர்ப்புக்குச் சமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக் கருத்தா...? நீ என் பரம எதிரி...!




**நக்கீரன்**

மீண்டும் ஒரு அவல நிகழ்வாக நடந்து முடிந்திருப்பது வேறொன்றுமல்ல ஒரு தேர்தல்! ஊழல் நடந்திருப்பின் அதனை ரத்துச் செய்யும்படி ஆணையிட்டிருப்பதும் வேறு யாருமல்ல ஜனாதிபதி அவர்கள்! போட்டியிட்ட எதிர்க்கட்சிகளும் அதனை ரத்துச் செய்யும்படி கூக்குரலிடுகின்றன. இருப்பினும் எம் கவனம் திரும்ப வேண்டியது இத்தேர்தலைப் பற்றி மட்டுமல்ல. இந்நாட்டின் பாராளுமன்ற அரசியலையும் அதன் ஜனநாயகத்தையும் பற்றியே யாகும்.

சுற்றிச் சுற்றி ஒரு சில கேள்விகளையேதான் நாம் இன்று கேட்க வேண்டியிருக்கிறது.

சுதந்திரமடைந்து 51 வருடங்களின் பின்பும் நமது நாட்டில் அபிவிருத்தியின்மையும் ஆயுத எழுச்சிகளும் நாட்டைப் பிளவுபடுத்துவதற்கென நீண்டு செல்லும் ஒரு சிவில் யுத்தமும் நிலவுவது ஏன்?

இவற்றுக்கான பதிலைத் தேடுவதற்கு இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துவோம். எமது நாட்டில் தேர்தல்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலே சிறு சிறு ஊழல்கள் நடைபெறத் தொடங்கின.

ஆனால் **எப்படியாயினும் மற்றவனைத் தோற்கடித்து நாம் வெற்றிபெற வேண்டும்** எனும் செயற்பாடு - போக்கு தலைவர்களிடேயும் கட்சித் தொண்டர்களிடையேயும் ஒரு கருத்துப்போக்காக வலுப்பெற ஆரம்பித்தது 1956களின் பின் எனக் கூறலாம்.

அது முதல் எமது நாட்டில் தேசியக் கொள்கைகளைத் திட்டமிடுதல், அவற்றைச் செயற்படுத்துதல் என்பவற்றிற்கு முதலிடம் கொடாமல் எப்படியாவது அதிகாரத்துக்கு வந்துவிட வேண்டும் எனச் செயற்படுவதே இரு பெரும் கட்சிகளின் பிரதான செயற்பாடாக இருந்தது.

இருக்கும் அதிகாரத்தைத் தொடர்ந்து கையில் வைத்திருப்பது எப்படி என்பதைச் சிந்திப்பதே ஆளும் கட்சியின் முக்கிய குறிக்கோளாக இருந்து வந்துள்ளது. இதன்படி 60ம் ஆண்டுகளில் இருந்து எதிர்க்கட்சியில் இருப்பவன் **எமது முதலாம் தர எதிரி** என்கின்ற கருத்துப் போக்குக்குள்ளேயே நாம் வாழப் பழகியிருக்கிறோம்.

அரசியல் தலைவர்களிடமிருந்து கீழ் மட்ட ஆதரவாளர்களிடையே புகுத்தப்பட்ட இக்கருத்து ஆதரவாளர்களின் மனதில் வேரூன்றி வளர்ந்து பரந்து மீண்டும் தலைவர்கள் மேல் பாதிப்பைச் செலுத்தி, அக்கருத்துக்குள் அவர்களையே அமிழ்த்தி, மீண்டும் தலைவர்கள் அதே கருத்தைத் தமது ஆதரவாளர்களுக்குள் தூண்டிவிட்டு அழிவை ஏற்படுத்துகின்ற நிலைக்கு இன்று வளர்க்கப்பட்டுள்ளது.

இறுதியில் எப்படியாயினும் தனது எதிரியானவனைத் தோற்கடிக்க வேண்டும் என்கின்ற பெரு வெறியில் பண பலம், ஆட் பலம் மற்றும் தொடர்பு சாதனங்கள் என்பவையும் போதாக்குறைக்குவன்முறைப்பயங்கரவாதமும் இன்று பாவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி அதிகாரத்துக்கு வந்தபின் எதிர்க்கட்சியாளனைத் தாக்குவதற்கும் அவனைப் பலவீனப்படுத்துவதற்கும் முடிந்தால் அழித்தொழிப்பதற்கும் தேவையான சகலதையும் செய்யும் அளவுக்கு விகாரப்பட்டுள்ளது.

இதுதான் எமது இன்றைய நிலை. எதிர்க் கருத்துள்ளவர்களையும் மதித்தல், அவர்களோடும் நட்பாக இருத்தல் என்கின்ற நிலை முற்றாக இல்லாதொழிந்து ஆளும் கட்சி, எதிர்க்கட்சியென இரு வேறு துருவங்களாகியதனால்தான் வடமேல் மாகாண சபைத் தேர்தலின்போது இம்மோசமான சிந்தனைப் போக்கின் உச்சக் கட்டத்தை கண்டோம்.

ஒருபுறம் கையிலிருக்கும் அதிகாரம் பறிபோய்விடுமே என்பதற்காக ஒரு சாரார் ஊழல் மயப்பட்டுச் செயற்படுகையில் மறுசாரார் பறிபோன அதிகாரத்தை கைப்பற்றுவதில் அதே விதமான செயற்பாட்டில் தாமும் இறங்கினர். ஆனால் தம்மைவிட மற்றவரே அதிகம் ஊழல் புரிகின்றார் என மேடைகளில் சொல்லிக் கொண்டதன் மூலம் தமது ஊழலை முற்று முழுதாக மறைக்க முடியாத அளவுக்கு இரு சாராரும் ஊழல்மயப்பட்டுப் போயிருந்தனர். பர்மாவின் ஜனநாயக அரசியல் தலைவி **ஓங் சாங் சூகி** ஒருமுறை கூறியதுபோல் கையிலிருக்கும் அதிகாரம் பறிபோய்விடும் என்ற பயத்தில் அரசியல்வாதிகள் ஊழல்மயப்படுகின்றனர்.

இந்தப் பயம் அவர்களுக்குள் இருப்பதனால் அதிகாரம் இருக்கின்ற காலத்தில் தமக்குத் தேவையான நில புலங்கள், பொருள் பண்டங்கள் போன்றவைற்ச் சேர்ப்பதற்கும், எதிராகக் குரல்கொடுப்போரின் குரல்வளையை நெரிப்பதற்கும் கையிலிருக்கும் அதிகாரத்தை மிக மோசமாகப் பாவிக்க இவ்வரசியல் தலைவர்கள் தவறுவதில்லை.

இவர்கள் மக்களின் வாக்குகளால் பெற்ற அதிகாரத்தைப் பாவித்து இறுதியில் அதே மக்களின் வாக்கு அதிகாரத்தை இல்லாமல் செய்து விடுகிறார்கள். கடந்த இரு தசாப்தங்களாக நாம் காண்பது இதுதான்.

இதன் பிரதிபலன் எவ்வாறு இருக்கும்?

பாராளுமன்றமென்பது மக்களில் இருந்து தூர விலகிய மக்களால் அருவருப்போடும் ஏளனமாகவும் பார்க்கப்படும் ஒரு நிறுவனமாக ஆகிவிடும். மக்கள், தாம் தேர்ந்தெடுத்த தலைவர்களைத் தாமே நம்பாத நிலை ஏற்படும்.

அதுமட்டுமன்றி அவ்வரசாங்கங்களால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குக் கூட மக்கள் எதுவித ஆதரவையும் வழங்காத நிலை ஏற்படும். அவற்றை ஆதரிப்பது தமது எதிரியின் செயற்பாட்டை ஆதரிப்பதாக எண்ண மக்கள் தலைப்படுவர். அரசாங்கக் காரியாலயங்களையும் அங்குள்ள அதிகாரிகளையும் மக்கள் கோமாளிகளாகப் பார்க்கத் தலைப்படுவர். இத் தேசத்தின் அபிவிருத்தி முன்னோக்கி நகராமைக்கான ஒரு ஊற்று மூலம் இதுவாகும்.

இதுவரை தெற்கில் ஏற்பட்ட இளைஞர் ஆயுத எழுச்சிகளுக்கு அடிப்படைக் காரணம் பாராளுமன்றமுறையின் மீது இருந்த நம்பிக்கை சிதறிப்போனதே. சகல அரசியல்வாதிகள் மீதும் ஏற்பட்ட தாங்க முடியாத கோபம் குரோதமாக மாறியதன் மூலம் அவ்விளைஞர்கள் பாரிய அழிவுப் பாதையில் சென்றார்கள் என்பது இன்றும் புரிந்து கொள்ளப்படவில்லை.

நாட்டின் முன்னேற்றகரமான அரசியல் செயற்பாட்டிற்குள் உள்வாங்கப்பட வேண்டிய இளைஞர் சமூகத்தை அதிலிருந்து ஒதுக்கி வைப்பதும், ஏனென்று கேள்வி கேட்டால் நசுக்குவதும் இதற்குத் தீர்வாகிவிட முடியாது.

கடந்த அரை நூற்றாண்டு கால எமது பாராளுமன்றக் கட்டமைப்பானது இன்னும் ஜனநாயகப்படுத்தப்படாமலும் சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த முடியாமல் இருப்பதிலும் குறிப்பான தேசியக் கொள்கைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த முடியாமல் இருப்பதிலும்தான் இன்று நடக்கும் இந்த அழிவுகர அரசியலின் அத்திவாரமே தங்கி இருக்கிறது.

இவ்வேளை இன்னுமொன்றினையும் கேட்டு வைக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களிடையே இருக்கும் வாக்குகளைப் பகிர்ந்துகொண்டு அரசியலுக்கு வரும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சிறிது காலத்திற்கும்கூட தாம் எதிர்க்கட்சியாகிவிடக் கூடாது என்கின்ற பதகளிப்பில் தேர்தல்களின் போது இவ்வளவு மோசமான வன்முறைகளில் ஈடுபடுகிறார்களே....

இந்த நாட்டின் கடந்த ஐம்பதாண்டு கால வரலாற்றில் சதாகாலமும் எதிர்க்கட்சியாகவே இருந்துவரும் தமிழ் மக்களினதும் அரசியல்வாதிகளினதும் மனங்களில் தமது எதிர்காலம் பற்றி எவ்வளவு ஆதங்கமும் பதகளிப்பும் புதைந்து கிடக்கும் என்பதை எப்போதாவது புரிந்துகொள்ள முயற்சித்துள்ளார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# LION AIR உம் UTHR உம்

UTHR வெளியிட்ட லயன் எயார் அறிக்கையை, தமிழில் **சொல்லாத இன்னொரு சேதி** என மொழிபெயர்த்து லண்டனில் உள்ள **மனித உரிமைகளுக்கான உலகத் தமிழர்கள்** அமைப்பு வெளியிட்டுள்ளது அவ்வமைப்பினால் அந்நூலில் எழுதப்பட்டிருக்கும் பின்னிணைப்பின் சில பகுதிகளையே மேலே தந்துள்ளோம். -- **ஆ.ர்.**

**செ**ய்தி நிறுவனங்களுக்கு என்றொரு அறநெறியுண்டு. இதனை பத்திரிகா தர்மம் என்பர். குறைந்த பட்சம், நடக்கும் சம்பவங்களைத் திரிக்காமல் கூறுவதும், அதிகாரத்திற்கு அஞ்சாமல் செய்திச் சுதந்திரத்தைக் காப்பதுவும் இந்த அறநெறியின் அடித்தளங்கள்.

...**லயன் எயார்** விமானம் வீழ்ந்த போது தமிழர் செய்தி நிறுவனங்கள் செய்தித் திரிப்பு செய்தது மட்டுமல்ல "துரதிர்ஷ்ட சம்பவம்", "காணாமல் போனது" போன்ற பொய்க் கதைகளையும் புனைந்து பூசி மெழுகியதும் நிகழ்ந்தது. லயன் எயார் விமானம் வீழ்ந்தது சம்பந்தமான இவர்களின் தகவல்கள் எவ்வளவு தூரம் உண்மைக்குப் புறம்பானதென்பதற்கு **மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின்** (UTHR) விவரணமான அறிக்கை சான்று. UTHRன் செய்திகள் எந்த அளவிற்கு உண்மையானவை என்ற கேள்வி எம்மில் பலருக்கு எழலாம். ஆனால் UTHRன் செய்தி வதந்திகளின் அடிப்படையில் எழுதப்படவில்லை......

...யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் செய்திகள், விமானம் வீழ்ந்த இரணைதீவுக்குச் சென்ற பாதிரியாரின் பேட்டி, இரணைதீவு மக்களின் வாக்குமூலம், யாழ்ப்பாணப் பகுதியில் விமானம் விழுமுன் நிகழ்ந்தவை தொடர்பான ஆய்வு, விமானியின் வான் வழிச் செய்தி போன்ற தகவல்களின் தொகுப்பும் ஆய்வுமே UTHR செய்தியின் பின்னணி.......

UTHR அரசியலானது மனித உரிமை, ஜனநாயகம் ஆகிய விழுமியங்களைக் கொண்டதென நாம் கூறலாம். இந்திய சமாதானப் படையினரின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து வெளிக் கொணர்ந்த காலம் தொட்டு இன்றுவரை மனித உரிமைகளுக்கெதிரான கைகள் எங்கிருந்தாலும் அதனைக் கண்டிக்க அவர்கள் தயங்கியதில்லை.....

...மனித உரிமைகளும் ஜனநாயகமும் விடுதலையின் பின் திறந்து விடப்படும் என்பது பொய்மை. மக்களின் விடுதலை என்பது அவர்களின் ஆன்ம பலத்தில் தங்கியுள்ளது என்பதிலும் UTHR நம்பிக்கை கொண்டுள்ளதை நாம் உணரலாம். மக்களின் ஆன்ம பலத்தை அழித்துவிட்டு, அவர்களின் அற்ப சொற்ப உரிமைகளையும் நசுக்கிக் கொண்டு விடுதலை பேசுவது அர்த்தமில்லையென UTHR கூறுகின்றது. அதனால் மக்களை நெரிக்கும் சகல சக்திகளையும் UTHR பாரபட்சமின்றிக் கண்டிக்கத் தயங்கவில்லை. இதற்கிடையே, எமது திண்ணைப் பேச்சு வீரர்கள் சிலர், UTHR யாழ்ப்பாணத்தில் மையம் கொள்ளாமல் தன்னை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என அழைப்பது கண்டனத்துக்கு உரியது, தவறு என வேதாந்த விளக்கங்கள் கொடுப்பதில் மட்டும் விற்பன்னராக விளங்குகின்றனர். UTHR வெளியிடும் செய்திகளை எதிர்கொள்ளவோ அதற்கு பதிலளிக்கவோ வக்கற்ற நிலையில் UTHR யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நிலைகொள்ள முடியாது ஏற்பட்ட நெருக்கடி சூழலை வேண்டுமென்றே மறைக்கவும் செய்கின்றனர்.........

....இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த போது நிகழ்ந்த அத்துமீறல்களுக்கு எதிராக, UTHR மட்டுமே ஓர் சுயாதீன அமைப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து கொண்டு குரல் கொடுத்த விடயம், சமாதான காலங்களில் மட்டும் விடுமுறைக்கு இலங்கைக்குச் செல்லும் இக்கனவான்களுக்கு சுலபமாக மறந்துவிடுகிறது. தமது முக்கிய உறுப்பினரான விரிவுரையாளர் ராஜனி திராணகம புலிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மற்றைய உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் யாழ். பல்கலைக்கழகத்தை விட்டு வெளிறேய வேண்டிய கட்டாயம் பற்றி பொதுமக்கள் இலகுவில் புரிந்து கொள்வர். UTHR இதை தெளிவாக பின்வருமாறு கூறுகிறது.

**"ஆயிரக்கணக்கான இளைஞர் தங்களை இந்த யுத்தத்தில் அர்ப்பணிக்கின்றனர். இந்த உண்மையான அர்ப்பணிப்பை நாம் மதிக்கும் அதே வேளை, இவ் இளைஞர்கள் தங்களை அறியாமல் எமது சமூகத்தை புதைகுழிக்குள் அழைத்துச் செல்வது மட்டுமல்ல, தங்களையும் அழித்துக் கொள்கின்றனர் என உணர்கிறோம். இதனை வெறுமனே பார்த்து நிற்பதன் மூலம் நாம் எமது பல்கலைக்கழக பதவிகளை மட்டும் தக்க வைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் எமது சமூகக் கடமையிலிருந்து நாம் தவறியவர்களாயிருந்திருப்போம். UTHR என அடையாளம் காணப்பட்டவர்கள் பல்கலைக்கழகத்தில் வழமைபோல் செயற்பட முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது, நிர்வாகம் இதை ஒரு தனித்துவமான பிரச்சினையாகப் பார்க்காமல், வெறுமனே சட்ட சம்பந்தமான பிரச்சினையாக அணுகி எமது பதவிகளைப் பறித்தது. ஆனாலும், பொதுமக்கள் மேல் சுமத்தப்பட்ட சொல்லொணாத் துயரங்களை கருத்திலெடுக்கையில், எமது பதவிகளுக்காக மௌனம் சாதித்து உண்மையை மறைக்க எமது மனச்சாட்சி இடம் தரவில்லை."......**

...எனவே, தமது வெளியேற்றம் நிர்வாகத்தின் தவறான முடிவென UTHR கருதும் வரையும், தாம் அங்கு செல்வது பாதுகாப்பானது என அவர்கள் உறுதி செய்யும் வரையும், தம்மை யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக கருதுவதில் தவறேதும் இல்லை. யாழ். வெளியேற்றத்தின் போது வன்னிக்குச் சென்ற பல்கலைக்கழக மாணவ, ஆசிரியர்கள் தம்மைத் தொடர்ந்தும் யாழ். பல்கலைக்கழகத்தின் அங்கமாக பிரகடனப்படுத்தியது எந்தளவுக்கு நியாயமானதோ, அதே அளவுக்கு UTHR தன்னை பல்கலைக்கழகத்தின் அங்கமாக கருதுவது நியாயமானதே.... ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களத்தை யுத்த களமாக்கும் அரசியற் கலாசாரம்



குருக்ஷேத்திரன்

**அரசியல் அரங்கம்**

***வாக்குப் பெட்டிகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன!
வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் வண்டிகள் வழிமறிக்கப்பட்டன!
வாக்காளர்கள் தாக்கப்பட்டனர்!
காவலர்கள் மிரட்டப்பட்டனர்!
கட்சிப் பிரதிநிதிகள் துரத்தப்பட்டனர்!
கட்சி வாகனங்களும் அரச வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன!
ஆள்மாறாட்டங்கள்!
கள்ள வாக்குகள்!
குண்டர்கள் அட்டகாசம்!
அச்சுறுத்தல்கள்!
கொலைகள்!
ஆம்! வயம்பா - வட மேல் மாகாணசபைத் - தேர்தல் நிகழ்ந்தேறியது!!!***

*தனியொரு மாகாணசபைத் தேர்தலில் 2 உயிர்க் கொலைகள் உட்பட 650ற்கு மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள். வரலாற்றில் இல்லாத சாதனை!*

வெகு தீவிரமாக, வெகு மூர்க்கமாக, வெகு வேட்கையுடன் நடந்த இந்தத் 'தேர்தல் அடிபிடி'யின் இறுதியில் வெற்றி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கே என அறிவிக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் -பிரதானமாக ஐக்கியதேசியக் கட்சி - அதை மறுத்துரைக்கின்றது. அதன் எதிர்ப்பை நீதிமன்றம் நிரகரித்தது. எனினும், தேர்தல் முடிவினை ரத்துச் செய்யும்படி வழக்குத் தொடர்ந்துள்ள ஐ.தே.க., தீர்ப்பு வழங்கப்படும்வரை மாகாண சபைக்குத் தெரியப்பட்ட தனது கட்சி உறுப்பினர்கள் எவரும் சத்தியப் பிரமாணம் எடுக்கக் கூடாதென அறிவித்துள்ளது. எடுத்தால் கட்சியை விட்டு நீக்கப்படுவர் என்கிறது.

எனவே.....

மழை ஓய்ந்தும்.... தூவானம்தான்.



இத்தேர்தலில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாக ஐ.தே.க. வும் குற்றஞ்சாட்டுகிறது. ஏனைய எதிர்க்கட்சிகளும் குற்றஞ் சாட்டுகின்றன. தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் குற்றஞ் சாட்டுகின்றன. ஏன், ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் குற்றஞ் சாட்டுகிறது. இவ் வன்முறைகளுக்கு எதிர்த் தரப்பார் தான் காரணமென ஒவ்வொன்றும் மற்றயவற்றைக் குற்றம் சாட்டுகின்றன. தேர்தல் ஆணையாளரும் இதை மறுக்கவில்லை. எனினும் தேர்தல் ஆணையாளருக்குள்ள அதிகாரங்களுக்குட்பட இத் தேர்தல் முடிவுகளை ரத்துச்செய்யமுடியாதென்ற நிலை.

ஆனால் மோசடிகள் நிகழ்ந்தாகத் தெரிவிக்கப்படும் வாக்குச்சாவடிகளின் வாக்குகளைத் தள்ளுபடி செய்து, நடந்த தேர்தலில் முடிந்தளவு நியாயத் தன்மையை நிலைநாட்ட முயன்றுள்ளதாகக் கூறுகிறார். இது பரிகாரமல்ல என்பது மறுதரப்பு வாதம்.

எனவே....

எல்லாத் தரப்பும் தத்தமது பங்குக்குச் செய்யக்கூடிய கைங்கரியங்களெல்லாவற்றையும் செய்து.....இறுதியாக......

ஜனநாயக மார்க்கமெனப் பொதுமக்களுக்கு எஞ்சியிருக்கும் நியாயமான வாக்குரிமையையும் கேள்விக்குறியாக்கிவிட்டன.

'வன்முறையை விடுத்து ஜனநாயகத்திற்கு வா வா' என்று வாய் ஓயாது கத்தும் இந்த ஜனநாயகவாதிகள் யாவரும் கேவலம் வெறும் மாகாண சபை ஆசனங்களுக்கே வன்முறையைத்தான் வழியாக நம்பியிருப்பதைக் கண்கூடாகக் காணுகின்ற போது..... பேசமுடியவில்லையே....!

வன்முறைக் கலாசாரம் எம் நாட்டை இந்தளவுகேவலமாகச் சீரழித்திருக்கின்றபோதும்....., இன்னும் சீரழித்துக் கொண்டிருக்கின்றபோதும், கடந்த ஆட்சிக்கால வன்முறைகளை அருவருக்கத்தக்க சாட்சியங்களாகப் புதைகுழிகளிலிருந்து என்புகளாகக் கிண்டியெடுத்துக் காட்சிப்பொருளாக்கி வருகின்றபோதும்.....

மாகாண சபைத் தேர்தல் போல் ஒரு அடிப்படை ஜனநாயகச் செயற்பாட்டை மேற்கொள்ளக்கூட இன்னும் இன்னும் வன்முறையா வேண்டிக் கிடக்கிறது...?

மக்களின் தீர்ப்புக்காக நிறுத்தப்பட வேண்டிய அரசியல்வாதிகள் மக்களுக்குத் தாமே தீர்ப்பு வழங்கும் நிலை.

நம் தேர்தல் வழிமுறையின் பலஹீனத்தையும் தேர்தல் சட்டங்களின் இயலாமையையும் பறைசாற்றியுள்ளது இத் தேர்தல். ஜனநாயகச் செயற்பாட்டின் அடிப்படை அம்சமான தேர்தல்களை துஷ்பிரயோகம் செய்ய முடியாதவாறு காப்பாற்றி நீதியின் கரங்களால் பாதுகாக்கக்கூடிய வலுவான, வினைத்திறன்மிக்க பொறிமுறை ஒன்றைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிவரும் தேர்களுக்கும் இதே கதி ஏற்படா தவாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா?

## தேர்தல் உள்ளோட்டம்

வயம்பதேர்தல்,பிரதானகட்சிகளான-பொது ஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.க. இரண்டுக்கும்- மிக முக்கியமான ஒன்றாக அமைந்திருந்தது. அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவடைய ஒருவருடமே இருக்கும் இவ் இறுதிக்கட்டத்தில் நிகழுகின்ற முதலாவது கருத்துக் கணிப்பு.... தமது ஆட்சி பற்றி மக்கள் ஏதும் அதிருப்தியை வெளிக்காட்டுவதாக அமைந்துவிடக்கூடாதென்ற அக்கறை ஆளும் கட்சிக்கு.

அதேவேளை, இந்த அரசாங்கம் நாட்டின் பிரதான பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை முக்கிய அம்சமாகக் கொண்டு முன் வைத்துள்ள தீர்வுத் திட்டங்களை நிராகரிப்பதாகவும் இத் தேர்தல் பெறுபேறுகள் பொருள்கொள்ளப்படக்கூடாதென்பதும் அரசாங்கத் தரப்பினரின் கவலை. அதேசமயம், அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மைபற்றி வெளிநாடுகளுக்கும் முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கையளிக்க இத் தேர்தல் வழிவகுக்க வேண்டுமென்பதும் அவர்களின் ஆதங்கம்.

மாகாணசபைகள் மக்களுக்கு மிக நெருக்கமான அரசியல் அதிகார சபைகளாக விளங்குவதால் அவற்றைத் தம் கைக்குள் வைத்திருப்பவர்களுக்கு அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றிக்கான செயற்பாடுகளைச் செய்ய வாய்ப்பு அதிகம்.

அதனால் பொதுத்தேர்தல் எதிர்நோக்கப்படும் இக்கட்டத்தில் இவ் அரசியல் அலகுகளைத் தம்வசப்படுத்திக் கொள்ள பிரதான கட்சிகள் இரண்டும் துடியாய்த் துடித்தபடியுள்ளன.

ஆனால் மத்திய ஆட்சியில் பொ.ஐ.மு. இருந்தாலும் வயம்பமாகாண ஆட்சிஐ.தே.க.விடமே இருந்து வந்தது. எனவே அடுத்த தடவையும் மாகாண ஆட்சி ஐ.தே.க. வின் கையில் சிக்கிவிடக்கூடாதென்பதுவும் ஆளும் கட்சியின் குறி.

இதேவேளை ஐ.தே.க. வுக்கு -

தனது பிடியிலிருந்த மாகாண ஆட்சியையாவது பறிகொடுத்து விடக்கூடாதென்பது மட்டுமன்றி அதை மேலும் வலுவாக்குவதற்கும் அக்கறை. அதற்கு வேறு புதிய தேவைகளும் இதில் உண்டு.

கடந்த பொதுத் தேர்தலில் பறிபோன அதன் கடந்தகால ஆட்சி பற்றிய நல்லபிப்பிராயம் புதிய தலைமையின்கீழ் மீள ஈட்டப்படவேண்டியுள்ளது. இதற்கு புதிய தலைமை பற்றிய அங்கீகாரமொன்றை எந்த வகையிலும் மக்கள் மத்தியிலிருந்து வெளிக்கொணர வேண்டிய தேவை அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய விடயமாக அமைந்துள்ளது.

எனவே ஏற்கெனவே அதிகாரத்திலிருந்த மாகாணமொன்றில் கூட மீள அதிகாரத்துக்கு வர முடியவில்லை என்ற பார்வை தம்மீது விழாதபடி பார்ப்பதற்கு அது பகீரதப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டதில் வியப்பிருக்க முடியாது.

ஒருவாறு தமக்கு மீண்டும் மக்கள் செல்வாக்கு உள்ளதாகக் காட்டிவிட்டால் கடந்த காலத் தவறுகளையெல்லாம் தமது கடந்த காலத் தலைவர்களின் மேலேயே பட்டும் படாமலும் சுமத்திக்கொண்டு புதிய தலைமை அப்பழுக்கற்றது என்ற பாட்டைப் பாடிக் கொண்டே அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கலாம் என்பது அதன் எண்ணம்.

எனவே பொதுத் தேர்தலுக்கான தமது நீளப் பாய்ச்சலுக்கு உந்தி மிதிக்கும் மிதிபலகையாகவே இக்கட்சிகள் இரண்டும் இந்த வயம்ப தேர்தலை எடுத்துக் கொண்டன.

அவை உந்திய கால்களில் நசிபட்டுச் சிதைந்தது நீளப் பாய்சலுக்கான பலகையல்ல ஜனநாயத்திற்கான பொதுமக்களின் வாக்குரிமையே என்பதுதான் எம் கவலை.

வடமேல் மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களிலும் சுமார் பதின்மூன்றரை லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் சிறுபான்மை இனத்தவரின் வாக்குகள் சுமார் ஒன்றரை லட்சமாகும். இவ் வாக்குகளைத் தம்பக்கம் சாய்க்க இரு தரப்பும் வெவ்வேறு உத்திகளுடன் களத்தில் இறங்கியிருந்தனர்.

மாகாண சபை ஐ.தே.க. கையில் இருந்த போதும் அது கலைக்கப்பட்டுவிட்டதால் ஆட்சியைக் கொண்டு செல்வாக்குச் செலுத்த முடியாத நிலை.

இதேவேளை பிரதேச சபைகள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கரங்களில் இருந்தன. இதனால் பகிரங்கக் கூட்டங்களில் பொ.ஐ.முன்னணியே அதிகம் களைகட்டியது. அதன் நீலக் கொடிகள் எங்கும் அலங்கரித்தபடியிருக்க, வேட்பாளர்களது போஸ்டர்கள் மின் கம்பங்கள் தோறும் ஒட்டப்பட்டிருந்தன. ஐ.தே.க.வின் கொடிகளும் சுவரொட்டிகளும் குறைவாகவே காணப்பட்டன. எனினும் களப் பிரசாரத்தின் பின்னடைவுகளை நிவர்த்திக்கு முகமாக ஐ.தே.க. இறுதி நேரத்தில் புதிய







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு திமர் உத்தியைக் கையாண்டது.

அதுதான் தனியார் வானொலி விளம்பரப் பிரசாரம். என்றுமே இல்லாதவாறு முதன்முறையாக இப்போதுதான் இப்படி ஒருவகைப் பிரசார முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் தனியார் வானொலியில் விளம்பரங்கள் என்ற கோதாவில் பொ.ஜ.மு. விற்கு எதிரான பிரசாரங்கள் நையாண்டிகளாகவும் அவதூறுகளாகவும் ஏவிவிடப்பட்டன.

இதுகண்டு பொ.ஜ.மு. திகைத்துச் சினம் கொண்டு அதைச் சட்டவிரோதமெனக் கூறி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் குரல் கொடுத்தாலும் இறுதிக் கட்டமாகிவிட்ட நிலையில் அதனால் எதுவுமே செய்ய இயலாது போய்விட்டது.

எனினும் பொ.ஜ.மு. கடந்தகால ஐ.தே.க. ஆட்சியின் பயங்கரங்களை நினைவூட்டும் வகையில் டயர் எரிப்பு பிரசாரத்தை மேற்கொண்டது.

இத் தேர்தல் பிரசாரத்தில் பொ.ஜ.மு. வின் கோரிக்கை "வயம்பவை எமது கையில் தாருங்கள். நாம் பாரிய கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவோம். பல லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்குவோம்" என்பதாக இருந்தது.

ஆனால் ஐ.தே.க. வோ, தாம் எதையும் செய்யப்போவதாக எதையும் ஸ்தூலமாகத் தெரிவிக்கவில்லை. "புது யுகத்தை நோக்கிய பயணத்துக்காக மக்கள் ஆதரவு தாருங்கள்...." என்ற வகையிலேயே அது அமைந்திருந்தது.

இதேவேளை எதிர்த் தரப்பினர் மீதான குறைகளையே இருதரப்பாரும் அதிகளவு பிரசாரப் படுத்தினர். அள்ளி வீசுவதற்குத் தேவையான சேறு வாளி வாளியாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வயம்பவிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

பொ.ஜ.மு. கடந்த அரசாங்க காலத்தின் பயங்கரங்களையும் மோசடிகளையும் ஊழல்களையும் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமையையும் குறை கூறி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமைக்கு ஐ.தே.க. ஒத்துழையாமையே காரணமெனக் குற்றஞ்சாட்டியது.

மறுதரப்பில் ஐ.தே.க. யுத்தத்தை விமர்சித்தும் பொருளாதார நெருக்கடிகளைச் சுட்டிக் காட்டியும் அரசாங்கத்தின் பொதுத்தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையெனக் குறை கூறியது.

பிரசார நடவடிக்கைகளில் பொ.ஜ.மு. மேடைகளில் பல அமைச்சர்களும்பாராளுமன்றஉறுப்பினர்களும் இரு மாவட்டங்களிலுமே குவிக்கப்பட்டிருந்தார்கள். ஜனாதிபதியே தனது உயிராபத்துக்கு மத்தியிலும் துணிச்சலோடு நேரடியாகப் பிரசாரத்தில் இறங்கியிருந்தமை இத் தேர்தலில் ஆளும் கட்சிக்கிருந்த அக்கறையைக் காட்டுகிறது. ஜனாதிபதியின் பொதுக்கூட்டங்களில் மக்கள் பெருந்திரளாக அணிதிரண்டும் வந்திருந்தனர்.




இதேவேளைஐ.தே.க. மேடைகளில் ஜே.வி.பி. அழிப்புப் படுகொலைகளுக்குப் பெயர்போன முன்னாள் பொலிஸ் அதிகாரிகளான உடுகம்பொல, முனி கோமஸ் உட்பட எதிர்பாராத பல முகங்கள் பிரசன்னமாயின. இவை அதன் இன்றைய தலைவர் ரணில் காண்பிக்க முனையும் 'சுத்தமான கைகள்' என்ற அபிப்பிராயத்தைக் கேள்விக்குறியாக்குவதாயும் அமைந்திருந்தன.



இத்தகைய பிரசார முனைப்புக்களில் ஒருவகை வன்முறைத் தன்மை தொனித்திருந்தது. பின்னர் தீவிரமடைந்த சூழ்நிலையுடன் அவை பெரும் தேர்தல் வன்செயல்களாக வெடித்தன. எதிர்த்தரப்பினர்மீது இருபுறமும் மாறிமாறி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல் கூட்டங்களில் பிரசாரப் பேச்சுக்களையடுத்துக்கைகலப்புகள் நிகழ்ந்தன. இவை உயிர்ச்சேதங்கள் வரை சென்றன. பல பிரமுகர்களின் இல்லங்கள் தாக்கப்பட்டுப் படுகொலைகளும் நிகழ்ந்தன.

இதனால் தேர்தலுக்கு முன்னரே ஒரு பயப் பீதி மகாணம் எங்கும் வியாபிக்கத் தொடங்கிவிட்டது. தேர்தலன்று இது உச்சக்கட்டத்தை அடைந்தது. நியாயமான தேர்தலொன்று நிகழுமா என்பது முன்கூட்டியே கேள்விக்கிடமாகிவிட்டது.

எப்படியோ வடமேல் மாகாண சபையைக் கைப்பற்றிவிட வேண்டும் என்ற வெறியில் சட்டம் ஒழுங்கைப் புறக்கணித்துவிட்டு மோசடிகளும் வன்முறைகளும் நிகழ்ந்தேறின. பிரதேசவாசிகளல்லாதவர்கள்கூட வாக்குச் சாவடிக்குள் காணப்பட்டார்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் அவர்கள் வாக்களித்தனர்.

சில வாக்குச் சாவடிகளுக்குள் சில கும்பல்கள் நுழைந்து அதிகாரிகளைப் பயமுறுத்தி, அவர்களைத் தாக்கி வாக்குப் பெட்டிகளைக் கைப்பற்றி அவ்விடத்திலேயே தீமூட்டிவிட்டுச் சென்றன. வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் செல்ல வந்த பஸ் வண்டிகளையும் தீவைக்கப் போவதாக எச்சரித்து மிரட்டி அனுப்பின.

சில பகுதிகளில் ஏற்பட்ட பதற்றத்தைப் பொலீஸாராலும் தடுக்க முடியவில்லை. ஆள் மாறாட்டங்கள் நிகழ்ந்தன. அத்து மீறல்கள் ஏராளமாக நிகழ்ந்தன. பதிலுக்குப் பதில் என்ற வகையில் இருதரப்பினரும் நிகழ்த்திய இந்த வாக்கு வேட்டையில் பலியானது பொதுமக்களின் நியாயமான வாக்குரிமையே.


இங்கே போடப்பட்ட வாக்குகள் எத்தகையவை என்பது ஒருபுறமிருக்க போடப்படாத வாக்குகள் குறித்தும் நாம் அக்கறை கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

இது ஒருபுறமிருக்க, தமிழ்க் கட்சிகளோ அமைப்புகளோ இந்த வயம்ப தேர்தல் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் இருக்கின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தவகை அனுபவத்தை 81ம் ஆண்டு யாழ். மாவட்ட சபைத் தேர்தலிலேயே கண்டுவிட்டார்கள். யாழ். மக்களுக்கும் அது முதல் இன்றுவரை தமது முழுமையான வாக்குரிமையைப்பயன்படுத்தசந்தர்ப்பம்கிடைக்கவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை நீதியான தேர்தல் என்பது ஒரு பிரச்சினையாக இருக்க, மறுபுறம் தாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் தொடர்ந்து உயிரோடு இருப்பார்களா என்பதே பாரியபிரச்சினையாகவுள்ளது. தம்மால் தெரிவு செய்யப்பட்டவர்கள் உயிர் வாழ்வதே நிராகரிக்கப்படும்போது தெரிவு சரியாக நடக்குமா என்று கவலைப்படுவதுகூட அர்த்தமற்றதாகத் தெரிகிறது. வயம்பா தேர்தல் குறித்த தமிழ்க் கட்சிகளின் மௌனத்தின் பூடக அர்த்தம் இது வாக இருக்குமோ? •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதரின் சூடான பேட்டி



**சமீபத்திய பரபரப்புகள் இரண்டு. ஒன்று வயம்பு, மற்றது வரதராஜப் பெருமாள்.**

**முன்னாள் வட-கிழக்கு மாகாண முதலமைச்சரான அண்ணாமலை வரதராஜப் பெருமாள் வந்திருக்கிறாரா என்பதை அரச தரப்போ ஈ. பி. ஆர். எல். எஃப் போ இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் எல்லாப் பத்திரிகைகளுமே அவர் வந்து நிற்கிறார் என்று செய்திகளையும், கட்டுரைகளையும், பல்வேறு ஊகங்களையும் வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. எட்டு வருடங்களின் பின் நாடு திரும்பியிருக்கும் வரதர் இதுவரை எந்தப் பத்திரிகையாளரையும் சந்திக்கவில்லை. அவர் எங்கு தங்கியிருக்கிறார் என்பதும் இரகசியமாகவே உள்ளது. இம்மாத "அமுது சிறப்புப் பேட்டி"க்காக கேள்விகளைத் தயார் பண்ணி வைத்துக்கொண்டு அவரைத் தேடியலைந்த அலைச்சலைச் சொல்லி மாளாது. காற்றுப் புகாத இடத்திலும் பத்திரிகைக்காரன் புகுந்துவிடுவான் என்பது அவருக்கும் தெரியாததல்ல.**

**என்னதானிருந்தாலும் இலங்கையின் முதலாவது தமிழ் முதலமைச்சரல்லவா? புகுந்து ஆளைப் பிடித்து விட்டோம். இதோ அவரது பேட்டி :**

**கேள்வி:** நீங்கள் வந்திருக்கும் நோக்கம் என்ன?

**வரதர்:** ஒருவர் தன்னுடையசொந்தநாட்டுக்கு வருவதற்கு தனியாக என்ன நோக்கமிருக்க வேண்டும்?

**கேள்வி:** இல்லை.... இந்தியப் படையோடு போனவர் எட்டு வருட அஞ்ஞாதவாசத்தின்பின் வந்திருக்கிறீர்களே...?

**வரதர்:** ஓமோம். மாகாண சபை வேண்டாம். புலிகள் சண்டை பிடித்து நாட்டைக் காப்பாற்றி விடுவார்கள் என்றார்கள். சரி, நாம் தடையாக இருப்பது நல்லதல்ல என்றுதான் விட்டுவிட்டுப் போனோம். எட்டு வருஷமாகியும் எந்தவிதமான முன்னேற்றமும் நடப்பதாகக் காணோம். நாங்கள் இருந்தபோது இருந்ததை விட நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன. இனியும் ஒதுங்கியிருப்பதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. முடிந்ததைச் செய்யலாமே என்றுதான் மீண்டும் வந்திருக்கிறேன்.

**கேள்வி:** உங்கள் வருகையில் இந்திய இலங்கை அரசாங்கங்களின் பங்கு என்ன?

**வரதர்:** 900 மில்லியன் மக்களைக் கொண்ட நாடு இந்தியா. 1 1/2 மில்லியன் மக்களைக் கொண்ட நாடு இலங்கை. இரண்டுமே என் பொக்கெற்றுக்குள் இல்லை. இருந்திருந்தால் இரண்டு நாட்டிலுமுள்ள எத்தனையோ பிரச்சினைகளை நான் தீர்த்திருப்பேன். மற்றபடி என் வருகையோடு இந்த அரசாங்கங்களைச் சம்பந்தப்படுத்துவது... மனித உரிமை, ஜனநாயகம் என்றெல்லாம் பேசிக்கொண்டு, புலிகளையும் ஆதரிப்பது போன்ற அர்த்தமில்லாத செயல்.

**கேள்வி:** வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் உங்களைத் தெரியாது என்று சொல்லியிருக்கிறாரே?

**வரதர்:** ஆமாம். எனக்கும் அவரைத் தெரியாது. நானும் அவரைக் கண்டதுமில்லை பேசியதுமில்லை.

**கேள்வி:** முன்னாள் அமைச்சர் ரஞ்ஜன் விஜேரத்தின உங்களை நல்ல நண்பர் என்று சொன்னாரே?

**வரதர்:** எனக்கும் அவர் நல்ல நண்பராகத்தான் இருந்தார். என்னை விட்டு வேறு நட்புகளைத் தேடிக் கொண்டதில்தான் அவர் இல்லாமலே போக நேரிட்டது.

**கேள்வி:** நீங்கள் முதலமைச்சராக இருந்த போதுதானே பிரேமதாசா - மாத்தயா பேச்சுவார்த்தை நடைபெற்றது. அவர்கள் பேசிக்கொண்டது என்ன?

**வரதர்:** கேட்பதற்கு அவர்கள் இரண்டு பேருமே இல்லாமல் போய்விட்டார்களே... அப்போதைய அரசாங்கம் மாகாண சபைக்குச் செய்ததை விட, புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியதே தமிழ் மக்களுக்காக அவர்கள் செய்த கைங்கரியம். அதன் பலனைத்தான் எல்லோரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோமே......

**கேள்வி:** சிங்கக் கொடியை ஏற்றினீர்களே?

**வரதர்:** ஈழக் கொடியும் ஏற்றமுடியாதுசிங்கக்கொடியும் ஏற்ற முடியாது என்றால் இந்தியக் கொடியையா ஏற்றுவது?

பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு இரு தரப்புமே தங்கள் நிலையிலிருந்துசில விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய வேண்டும் என்பதால் தான் ஈழக் கோரிக்கையிலிருந்து மாகாண சபைக்கே வந்தோம். எமது நல்லெண்ணத்தை உலகுக்குக் காட்டவே கொடியையும் ஏற்றினோம். அதைப் பயன்படுத்திக் கொண்டு பிரச்சினையைத் தீர்க்க முயலாதது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பிழையே தவிர, எம்முடையதல்லவே.

**கேள்வி:** மாகாண சபையால் சாதித்த முக்கியமான விஷயங்கள் எவை?

**வரதர்:** எல்லாவற்றையும் சொன்னால் உங்கள் அமுதில் இடம் போதாது. ஒரே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். அப்போது ஒட்டிய வடக்கு கிழக்கை மீண்டும் ஒட்ட முடியாமல்தானே இருக்கிறார்கள். அப்படியே விட்டிருந்தால் இப்போது பல பிரச்சினைகள் இருந்திருக்காது.

**கேள்வி:** அப்போதைய மத்திய அரசாங்கம் உங்களுக்கு என்னென்ன விதமான தடங்கல்களைத் தந்தது?

**வரதர்:** அதற்கும் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். ஊவா மாகாண சபையிலிருந்து எங்களுக்கு விசித்திரமான ஒரு கடிதம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் மாகாணத்திலிருந்து வரும் நதி எங்கள் மாகாணசபை பிரதேசத்தினூடாகப் பாய்வதாகவும், அதனால் தங்கள் நதி நீருக்கு வரியாக ஒரு தொகை ஊவா மாகாண சபைக்குச் செலுத்தவேண்டுமெனக் கேட்டிருந்தது. அதற்கு நாங்கள் பதில் எழுதினோம்: எங்களுக்கு நதி வேண்டியதில்லை. அந்த நதி எங்கள் விவசாய நிலத்தினூடாகச் செல்வதால், உங்கள் நதி பாவிக்கும் அந்த நிலத்துக்கான வரியை நீங்கள்தான் எங்களுக்குத் தர வேண்டும் என்று பதில் எழுதினோம். அவர்களிடமிருந்து அதன் பிறகு எந்தக் கடிதமும் இல்லை.



தூங்குவது போல் நடிக்கும் ஜே.ஆரை எழுப்ப முயற்சிக்கிறாரா பெருமாள். ஜே.ஆருடன் வரதர், மனைவி, மகள்.

**கேள்வி:** கடந்த காலத்தில் நடந்தவைகளில் நீங்கள் எதைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்?

**வரதர்:** அப்படித் தனியாக எனக்கென்று ஒரு கவலை கிடையாது. எமது சமூகநிலைமையைப்பார்க்கையில் கடந்த காலம், நிகழ்காலம் எதிர்காலம் என்று வித்தியாசங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாமே கஷ்டகாலங்கள்தான். கவலை தொடர்கிறது.

**கேள்வி:** மாகாண சபையை விட்டுப் போகும்போது ஈழப் பிரகடனம் செய்துவிட்டுப் போனீர்களே....?

**வரதர்:** ஈழத்துக்காகப் போராடியவர்கள் நாம். இடையில் இந்தியாவின் உறுதிமொழியோடு தீர்வு கிடைத்தபோது ஏற்றுக்கொண்டோம். ஸ்ரீலங்கா அரச தரப்பிலிருந்து கொடுத்த வாக்கை மீறியபோது, நாங்களும் மீண்டும் பழைய நிலைக்கே திரும்புவதுதான் இயல்பாக நடக்கக் கூடியது.



ஆனால், நாங்கள் அத்தகைய ஒரு பிரகடனத்துக்கு மாற்றாக 19 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தோம். சுதந்திர ஈழத்துக்கு மாற்றான கோரிக்கைகளைப் பரிசீலிக்காது விடும்போதெல்லாம் ஈழக் கோரிக்கை தலைதூக்குவதையும் தவிர்க்க முடியாது. நாங்கள் அப்போது கேட்டதைத்தான் இப்போது எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்களே. பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மாற்றான ஒரு தீர்வு வைக்கப்பட வேண்டும் என்பதையெல்லாம் இரண்டு பிரதான கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றதைதானே......

**கேள்வி:** இந்தியப் படை மீண்டும் வருமா?

**வரதர்:** புலிப்படை போதுமென்று இந்தியப் படையைத் திருப்பி அனுப்பினார்கள். இப்போது எப்படி வரும்? தமிழ் மக்களைப் பாதுகாக்கப் பிரபாகரன் உள்ளார், இந்தியப் படை திரும்பிப் போய்விடட்டும் என்றார்கள். தன் மனைவி, பிள்ளைகளையே பாதுகாக்க முடியாமல் வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கும் ஒருவர், தமிழ் மக்களைப் பாதுகாப்பார் என்று எப்படி நம்புகிறீர்கள்?

**எதுவோ ஒன்றுக்குப் போராடுவது. அதே விடயத்துக்காக மற்றவர்கள் போராடினால் அவர்களை எதிர்த்துப் போராடுவது. அதனால் ஏதாவது ஒன்று கிடைக்குமானால் அதையும் எதிர்த்துப் போராடுவது. கிடைத்ததை ஏற்பவர்களையும் எதிர்த்துப் போராடி கிடைத்ததையும் நாசம் செய்வது. இறுதியில் போராட்டம் என்ற ஒன்றை மட்டும்தான் மிச்சமாக வைத்திருப்பது.... இதுதானா விடாப்பிடியான போராட்டம்?**

**கேள்வி:** பிரபாகரன் இறந்துவிட்டதாக முன்னர் ஒரு கதைவிட்டீர்களே...?

**வரதர்:** அவர் அரசியல் ரீதியாக மரணித்துவிட்டதாகவல்லவா கூறினேன்... அதுசரி, பிரபாகரனும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற மாட்டேன் என்று ஒரு கதை விட்டிருந்தாரே, அதுகுறித்து அவரிடம் நீங்கள் ஏதும் கேட்டதாக நான் அறியவில்லையே.

**கேள்வி:** ஆனால் பிரபாகரன் முன்வந்தால் மாகாணசபை ஆட்சியை புலிகளுக்கு விட்டுக் கொடுக்கத் தயாரென்று தெரிவித்திருந்தீர்களே....?

**பதில்:** குழப்பிக்கொண்டிருப்பதைவிட எடுத்து நடத்துங்கள் என்றோம். ஆனால் அடித்துப் பறிக்கவே முனைந்தார்கள். சரி, பறித்து என்ன செய்தார்கள்? குரங்கின் கைப் பூமாலைபோல குலைத்தெறிந்ததுதான் மிச்சம். என்ன சொல்லுவது..? நந்தவனத்திலோர் ஆண்டியின் கதைதான்.

**கேள்வி:** இந்தியா மூன்றாம் தரப்பாக சமாதானப் பேச்சை நடத்த வருமா?

**வரதர்:** வராது. இந்தியாவைக் கடந்து இன்னொரு நாடும் வராது. அந்த எதிர்பார்ப்புக்களை விட்டுவிட்டு எங்கள் பிரச்சினைகளை எப்படித் தீர்த்துக் கொள்ளலாம் என்று பார்ப்பதே விவேகம்.

**கேள்வி:** புலிகள் விடாப்பிடியாகத்தானே போராடி வருகிறார்கள்?

**வரதர்:** எதுக்கு?... எதுவோ ஒன்றுக்குப் போராடுவது. அதே விடயத்துக்காக மற்றவர்கள் போராடினால் அவர்களைஎதிர்த்துப்போராடுவது. அதனால் ஏதாவது ஒன்று கிடைக்குமானால் அதையும் எதிர்த்துப் போராடுவது. கிடைத்ததை ஏற்பவர்களையும் எதிர்த்துப் போராடி கிடைத்ததையும் நாசம் செய்வது. இறுதியில் போராட்டம் என்ற ஒன்றை மட்டும்தான் மிச்சமாக வைத்திருப்பது. இதுதானா விடாப்பிடியான போராட்டம்?

**கேள்வி:** அப்படியானால் போராட்டத்தை அவர்கள் கைவிட வேண்டும் என்கிறீர்களா?

**வரதர்:** கைவிட முடியாதே அவர்களால்.... பாம்பின் கழுத்தைப் பிடித்திருக்கும் குரங்கைப் போலல்லவா அவர்கள் போராட்டத்தைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறார்கள். விட்டால் அது அவர்களுக்கே அழிவாகிவிடுமல்லவா? காட்டிலிருந்து வெளியே வந்தால் எதிரியால் மட்டுமல்ல சொந்த மக்களால் கூட ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று தெரிந்து வைத்திருக்கும் அவர்கள் இந்தச் சண்டையை எப்படி விடமுடியும்?

**கேள்வி:** தமிழகத் தலைவர்கள் தமிழீழத்தை ஆதரிக்கிறார்களே?

**வரதர்:** இப்போது பெரும்பாலானவர்கள் அப்படி இல்லை. சில தலைவர்கள் ஆதரித்து வருகிறார்கள்தான். அவர்களும் தங்களது நாட்டில் இப்படியொரு சண்டையை அனுமதிக்கக் கூடியவர்களல்ல. இங்கு நடப்பதன் பாரதூர விளைவுகளையும் பின்னணியையும் சரிவரப் புரிந்துகொள்ளாதவர்களாக, வெறும் தமிழாவேசத்தில் பேசுகிறவர்களாக இருக்கிறார்கள்.

**கேள்வி:** ஏன் அப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**வரதர்:** உலகிலேயே வருடத்திற்கு அதிக சினிமாப் படங்கள் எடுக்கப்படும் இடங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்ப் படங்களில் கதாநாயகன் வீரதீர சாகசங்கள் புரிவான், இறுதியில் வெல்வான். இதுவே அந்தப் படங்களை ரசித்து வரும் பலரது எதிர்பார்ப்பாகும். எதிரிகளைப் பழிவாங்க கதாநாயகன் புரியும் சண்டைகளில் சாதாரண மக்கள் பலர் அல்லோல கல்லோலப் படுவதையோ, அவர்களுக்கு உண்டாகும் வலிகள், இழப்புகள் பற்றியோ படத்தைப் பார்க்கும் யாரும் அக்கறைப்படுவதில்லை. எப்படியும் கதாநாயகன் வென்றுவிட வேண்டும். திருப்தியோடு தியேட்டரில் இருந்து வெளியே வந்தால் சரி என்ற மன நிலையே அவர்களுடையது. அது போலவேதான், தங்கள் நாட்டின் எல்லைக்கு வெளியே நடக்கும் இந்தச் சண்டையையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

**கேள்வி:** புலிகள் போராடிக் கொண்டிருப்பதற்கு ஆதரவாக சில வெளிநாட்டுப் பிரமுகர்களும் கருத்துக் கூறுகிறார்களே?

**வரதர்:** ஒன்றும் புரியாமல் குழப்பிக் கொண்டிருப்பவர்கள் உள்ளூரில் மட்டும்தான் இருப்பார்கள் என்று யாரும் சொல்லவில்லையே.

**கேள்வி:** வெளிநாட்டில் புலிகளின் போராட்டத்திற்கு நிதி வழங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களும் பலர் இருக்கிறார்களே...?

**வரதர்:** அவர்கள் அரசாங்கமும் வென்றுவிடக் கூடாது, புலிகளும் வென்றுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள்.



**இப்போது வந்திருக்கும் வரதர் எப்படி இருப்பார் என எமது கார்டூனிஸ்டின் கற்பனை**

**கேள்வி:** நீங்கள் இப்போது அரசாங்கத்தின் பாதுகாப்பில்தானே இருக்கிறீர்கள்?

**வரதர்:** என்னைப் போன்றவர்களைப் பாதுகாப்பதற்குத்தான் அவர்கள் அரசாங்கத்தில் இருக்கிறார்கள், பாதுகாப்புப் படைகளை வைத்திருக்கிறார்கள். நாட்டு மக்களைப் பாதுகாக்கத்தானே அரசாங்கம் இருக்கிறது. அதை அவர்கள் சரிவரச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதும் எனது கடமைகளில் ஒன்று.



**தோளோடு தோள் இணைந்து நிற்பவர்கள் தோழர்கள் பத்மநாபாவும், வரதரும்**

**கேள்வி:** எம். பி. பதவி, ஆளுநர் பதவி உங்களுக்குக் கிடைக்க விரும்புவதாகப் பேச்சுக்கள் அடிபடுகிறதே?

**வரதர்:** எல்லாவற்றையும் ஏன் அப்படியே நம்பிவிடுகிறீர்கள். சொந்த நாட்டுக்குத் திரும்பி வருகிறவர்கள் உள்நோக்கம் எதுவுமின்றி சும்மா வரக்கூடாதென்றா கருதுகிறீர்கள்.

**கேள்வி:** யாழ்ப்பாணம் போவீர்களா?

**வரதர்:** என் வீடு இன்னும் அங்கேதான் இருக்கிறது. நாட்டுக்கு வருவதையும் சொந்த வீட்டுக்குப் போவதையும் ஏன் புதினமாகப் பார்க்கிறீர்கள்?

**கேள்வி:** ஈ.பி.ஆர்.எல்.எ.ஃ.ப் கட்சிக்குள் பிளவு இருப்பதாகப் பத்திரிகைகள் எழுதுகின்றனவே?

**வரதர்:** எழுதிப் பிளந்துவிடலாம் என்றுதான் பார்க்கிறார்கள். ஒன்று தெரியுமா? தங்கள் பத்திரிகையில் எழுதப்படுவதெல்லாம் உண்மை என்று அவர்கள் எப்போதுமே சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டது கிடையாது.

**கேள்வி:** எட்டு வருடத்துக்குப் பிறகு வந்திருக்கும் நீங்கள் இங்கே பத்திரிகைகளில் என்ன வித்தியாசத்தைப் பார்க்கிறீர்கள்?

**வரதர்:** புதுசாய் சில பத்திரிகைகள் வந்திருக்கின்றனவே தவிர தொடர்ந்தும் அதேமாதிரிதான் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பரபரப்பு, உடனடிப் பிரதிபலிப்புகளுக்கே முக்கியத்துவம், உணர்ச்சிகரமான மேலோட்டமான எழுத்து... தமிழ் மக்களுக்கு அல்லது இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் உண்மையான நிம்மதி கிடைக்கக்கூடிய விதமாய் யாரும் எழுதுவதாகத் தெரியவில்லை. இப்போது நடந்து கொண்டிருக்கும் யுத்தம் நாட்டில் ஒரு பகுதியினருக்கு நல்ல லாபத்தைத் தந்து கொண்டிருக்கிறது என்பது உண்மைதானே...அதில்பத்திரிகையாளர்களும் ஒரு பங்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. •

**பேட்டியை சுவாரஷ்யமாகப் படித்து முடித்தவர்களுக்கு இனி உண்மையைச் சொல்லிவிடுகிறோம். 'வரதரா, யார் அவர்?' என்று கேட்கும் அரசாங்கம், வந்திருக்கிறாரா இல்லையா என்பதையே சொல்ல மறுக்கும் அவரது கட்சிக்காரர்கள்... இந்த இழுபறிக்குள் 'என்ன செய்வியோ யாரைப் பிடிப்பியோ இம்மாத இதழில் வரதரின் பேட்டி வந்தேயாக வேண்டும்' என்று அடம் பிடிக்கும் ஆசிரியர்... இவ்வாறான ஒரு நெருக்கடி நிலைமையில் ஆபத்துக்குப் பாவமில்லையென்று நம் கற்பனைக் குதிரையை அதன் இஷ்டத்துக்கு ஓடவிடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ஆனால் அதிகம் கற்பனை செய்ய வேண்டிய தேவையும் இருக்கவில்லை. ஏற்கனவே அவர் முதலமைச்சராக இருந்தபோது பத்திரிகைகள், தொலைக்காட்சிகளுக்கு அளித்த பேட்டிகளையும், அப்போதைய அரசாங்கத்திற்கு அவர் கொடுத்த தலையிடிகளையும் நினைவில் கொண்டு வந்தோம். தனது தடாலடியான பதில்கள் மூலம், அப்போதைய ஐ. தே. க. அமைச்சர்களால் "சண்டைக் கோழி" என வர்ணிக்கப்பட்டவர் வரதர். அவர் இப்போதைய எங்கள் கேள்விகளுக்கு எப்படி இடக்கு முடக்காகப் பதிலளிப்பார் என்பதை ஊகிப்பது சிரமமாக இருக்கவில்லை. ஆனால் அவரோ, பேட்டியைப் படித்த நீங்களோ கோபப்பட்டு விடாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் கவலையெல்லாம்.**

**-- மீடியா மேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சத்திற்கு வரும் நிழல் உலக ராஜ்யம்!

இந்தியாவின் மகாராஷ்டிரா அரசுக்குட்பட்ட வர்த்தக நகரம் பம்பாய்.... தற்போது மும்பாய்!

கொலை,கொள்ளை,குண்டுவெடிப்பு,கள்ளக் கடத்தல், விபசாரம், போதை மருந்தின் ஆதிக்கம் என்று ஒரு அநாகரிக நரகமாகிப் போன நகரம் இது.

பம்பாயின் ஆரம்ப காலம் தொட்டு - மும்பாய் ஆகியுள்ள இன்று வரை கொலை, கொள்ளை, குண்டு வெடிப்புக்கள் இங்கே அதிகமாகிவிட்டிருக்கின்றன. இவற்றில் 99சதவீதமான கொலைகள் பம்பாய் ஆகிய மும்பாயில் இன்றும் **'கப்பாரி கொலைகள்'** என்று செல்லமாக சங்கேத மொழியில் அழைக்கப்படும் கூலிக்காகச் செய்யப்படும் கொலைகள்தான்.

இந்த 'கான்ட்ராக்ட்' கொலைகளுக்கு ரூபா 15ஆயிரத்திலிருந்து 15 இலட்சம் வரை தரா தரம் பார்த்து விலை பேசப்படுவதும் உண்டு. பணம் வாங்கிவிட்டால் எந்தக் கொம்பன் ஆனாலும் சரியென்று இங்கே காரியம் கச்சிதமாக முடிக்கப்படுகிறது. அப்படியொரு தொழில் சுத்தமான - வாக்குத் தவறாத கொலை தர்மம் 'கூலிக்காரர்'களிடத்தில் இருக்கிறது.

தவிர-

இந்த கப்பாரிக் கொலைகளையும், கொள்ளைகளையும். குண்டு வெடிப்புக்களையும் நடத்துவதற்கென்றே நிழல் ரீதியான பல குழுக்கள் -மும்பாயிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் இயங்கி வருகின்றன. (இலங்கையின் சொத்தி உபாலி, கிறிஸ்டோபர் பெரிபோன்றோரின் நிழல் உலககோஷ்டிகளைப் போல) இக்கோஷ்டிகளின் பிரதான நோக்கம் பணம், பணம் மட்டுமே!

இக்குழுக்களின் தலைவர்கள் இந்தியாவில் 'தாதாக்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த தாதாக்களுக்குப் பொதுவான தொழில் கள்ளக்கடத்தல், கப்பாரிக் கொலைகள்.


தாவூத்

ஆக, இப்படியொரு தாதாதான் - ஆட்கொல்லிக் குழுவின் தலைவர் தாவூத் இப்ராஹீம்.

1990 - 96 காலப்பகுதியில் துபாயிலிருந்து 'கன்ட்ராக்ட்' நிழல் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தாவூத் இப்ராஹீம் (அப்போதைய) பம்பாயில் தனக்கென ஒரு ஆட்கொல்லிக் குழு வைத்திருந்தார்.

பம்பாயில் நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் துபாயில் எக்கச்சக்கமான சொத்துக்களுக்கு அதிபராயிருந்த இவர் உலகக் கோடீஸ்வரர்களில் ஒருவர்.

தவிர, தாவூத் இப்ராஹீம் கடத்தல், கொலைகள் மூலமாக தான் சம்பாதிக்கும் பணத்தை ஹிந்தி சினிமாவிலும் முதலீடு செய்து வந்தவர். ஏராளமான அழகிய பெண்களின் சிநேகம், நட்சத்திரங்களின் நட்பு, சமூகத்தில் உயரிய அந்தஸ்து கருதியே இப்ராஹீம் சினிமாவில் பணத்தை முதலீடு செய்தாரே தவிர, இலாபம் அவரது முதல் நோக்கமல்ல, தேவையுமல்ல.

இந்த சினிமாவுலகப் பிரவேசத்தின்போது தான் ஹிந்தி நடிகை மந்தாகினி ('தேஸாப்'பில் மாதுரியோடு நடித்தவர்.) இவருக்கு அறிமுகமாகி.... படுக்கையைப் பங்கு போட்டுக் கொண்டு.... இப்போது தாவூத் இப்ராஹீமோடு நிரந்தரமாகவே செட்டிலாகியும் விட்டிருக்கிறார்.

தாவூத் இப்ராஹிம் நடத்திய ஆட்கொல்லிக் குழு "D COMPANY" என்று அழைக்கப்பட்டது. (இது DAWOOD COMPANY என்பதன் சுருக்கம்) இவரைப் போல இன்னும் பெரிய தாதாக்களான சோட்டாராஜன், அருண்காலி என்போர் பம்பாயில் இருந்தும், குறுகிய காலத்தில் படுபிரசித்தமானது தாவூத் இப்ராஹீம்தான்.

1993ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பம்பாய் நகரில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இந்தியாவே, ஏன் உலகமே இதில் கதிகலங்கியது. அத்தோடு இந்த பம்பாய் குண்டு வெடிப்புக்கும் வன்முறைக்கும் பின்னணியில் இயங்கிய பிரதான நபர் தாவூத் இப்ராஹிமே என்றுதான் பரவலாகப் பேசப்பட்டது. பத்திரிகைகளும் அப்படித்தான் செய்திகளை வெளியிட்டன. உண்மையும் அது தான்.

தாவூத் இப்ராஹீம் தனது ஆட்கள் மூலமே இதில் ஈடுபட்டிருக்க, பொலிசார் விசாரிக்கத் துவங்கியபோது அவர்கள் சாமர்த்தியமாக வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட, யார் உடந்தை என்று உள்ளூர்வாசிகளை விசாரித்தபோது பிரதானமாகச் சிக்கியவர் அப்போதைய பாலிவூட்டின் நம்பர் வன் நட்சத்திரம் **சஞ்சய் தத்**. அப்போது கூட எதுவும் அறியாத நல்லபிள்ளைமாதிரி தாவூத் இப்ராஹீம் துபாயில்தான் தங்கியிருந்தார்.


சஞ்சய் தத்

ஆனால் அதே நேரம் பிரபல நடிகர் **சஞ்சய் தத்** மொரிசியஸ் தீவில் படப்பிடிப்பில் இருந்திருக்கிறார். தனக்கும் குண்டு வெடிப்புக்கும் சம்பந்தமில்லை யென்று மறுப்புத் தெரிவித்து பம்பாய் நகர பொலீஸ் கமிஷனரோடு தொலைபேசியிலேயே உரையாடினார்.

ஆனால் பொலீஸ் வேறு விதமாக நினைக்க, படப்பிடிப்பை பாதியில் நிறுத்தி விட்டு பம்பாய் திரும்பிய சஞ்சய்தத் விமான நிலையத்தில் வைத்தே அப்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்டமான "தடா" வின் கீழ் கைது செய்யப்பட்டார். (இப்போது தடா சட்டம் வழக்கிலில்லை. 1995 இலேயே 'தடா' தடை செய்யப்பட்டு விட்டது. சிறை மீண்டு சஞ்சய்தத் மீண்டும் சினிமாவில் நிம்மதியாக - சுதந்திரமாக நடிக்கவும் செய்கிறார்.)

அரசியல் அழுத்தங்கள் ஆயிரம் இருந்தாலும், ஒரு சில கைதுகளை அவசியம் செய்தே ஆக வேண்டும்... அதுதான் சமூக அமைதிக்கு நல்லது என்கிற அடிப்படையிலேயே சஞ்சய்தத் கைது செய்யப்பட்டதாக சீ.பி.ஐ. (CENTRAL BUREAU OF INVESTIGATION) காலம் தாமதித்து கருத்துச் சொன்னது. என்றாலும் துபாயில் இருந்த பிரதான நபர் தாவூத் இப்ராஹிமை மட்டும் கைது செய்ய முடியவில்லை.

இந்திய அரசு தாவூத் இப்ராஹிமைத் தீவிரமாகத் தேடிக்கொண்டிருந்த அதே நேரம், DAWOOD COMPANY யில் இருந்து பிரிந்து, தற்போது தாதாக்களாக மும்பாயைக் கலக்கும் சோட்டா ராஜன், அருண்காலி ஆகியோரும் 'மனித' வேட்டைக்காக தாவூதைத் தேடிக்கொண்டுதான் இருந்தனர்.



நீங்கள் இக்கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் இந்தநிமிடத்தில்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் நிழல் உலகப் பிரமுகர்களுக்கும் பம்பாய் வர்த்தக நகருக்குமிடையே நெருங்கிய பல தொடர்புகள் இருப்பதாலேயே இக்கட்டுரை பம்பாயில் ஆரம்பிக்கிறது.**





அவர்கள் வெறியோடுநல்லதொரு 'தருணம்' வரும் வரை காத்திருக்கின்றனர். தனது ஒன்று விட்ட சகோதரனைக் கதறக் கதறச் சுட்டுக் கொன்றதற்காக பழிவாங்கும் நோக்கில் சோட்டா ராஜனும், கோஷ்டி மோதல் சார்பான நம்பிக்கைத் துரோக அடிப்படையில் அருண்காலியும் தாவூதின் 'இரத்தம்' பார்க்கும் வெறியில் காத்திருக்கிறார்கள்.

ஆக, அதன் பிறகு தாவூத் இந்தியா (மும்பாய்) வராமல், துபாயிலேயே தங்கியிருப்பதாகவும் கூறும் ருசுவான செய்திகள் உண்டு.

அடுத்து இந்திய அரசு தாவூத் இப்ராஹிமுக்குப் பலமாக வலை வீசுவதற்கு இன்னொரு காரணம்: இந்தியாவையேகலக்கியபிரபலகேடி என்று கருதப்பட்ட (ஆன்மீக வேடம் பூண்ட) **சந்திரசுவாமிக்கும்,** தாவூத் இப்ராஹீமுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்ததாகக் கண்டறியப்பட்டதுதான்.

கொஞ்சம் விரிவாக நோக்கின்.....

**பப்லு ஸ்ரீவத்சஸவா.** (கொலை, கொள்ளை, குண்டுவெடிப்புகளுக்கு அஞ்சாதபயங்கரரவுடி) இவர் மேல் கொலை குற்றச்சாட்டுக்கள் உட்பட 40 வழக்குகள் இருக்கின்றன. வெளிநாட்டில் பதுங்கியிருந்த இவரை சிங்கப்பூர் அரசுதான் இந்தியாவிடம் ஒப்படைத்தது. இவரை சி. பி. ஐ. விசாரித்தபோது.... 1991 - 92ம் வருடங்களில் பொலீஸில் இருந்து தப்பி, தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட இவருக்கு சந்திர சுவாமிதான் அடைக்கலம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறார். (இத்தனைக்கும் பம்பாய் குண்டு வெடிப்பில் நேரிடையாகப் பங்கேற்ற இவன் தாவூதின் கையாள்) அத்தோடு சந்திரசுவாமி - தாவூத் இப்ராஹீமுக்கு இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்தியவரும் இவரே.

பாகிஸ்தானோடும் தொடர்புகள் வைத்திருந்த சந்திரசுவாமி, பம்பாய் குண்டு வெடிப்பில் தாவூதோடு இயங்கியதாகவும் கருத்து உண்டு. அதுவுண்மை என்கிறார்கள் சிலர்.

சந்திரசாமியின் சாமர்த்தியமும், கம்பீரமும், கிரிமினல்தனமான புத்தியும் கண்டு "இந்த ஆள் நினைத்தால் அமெரிக்காவின் கிளின்டனைக் கூட கவிழ்த்துவிடுவார்" என்று ஒரு பயமும் பேச்சும் அப்போது நிலவியதும் உண்மை.

இந்த சந்திரசுவாமி தனது இளம் வயதிலேயே செயின் கிட்டிஸ், போர்ஜரி, இரான் கேட், போ.ஃபர்ஸ், லண்டன் ஹரோட்ஸ் ஊழல்களில் இரண்டு மில்லியன் டொலர்கள் மோசடி செய்து கைதானவர். தன்னுடைய ஆசைநாயகி பமீலா போர்டஸைப் பயன்படுத்தி சவூதி அரேபிய பிரபல ஆயுத வியாபாரி **அத்னன் கசோகியை** வளைத்துப் போட்டு... ஆயுத வியாபாரத்தில் லாபம் சம்பாதித்தவர். முன்னாள் பிரதமர்கள் சந்திரசேகர், நரசிம்மராவ் கூட இவரது நெருங்கிய நண்பர்கள். சுவாமியின் ஆசிரமம் முடக்கப்பட்டபோது பல கோடி ரூபாய்கள் பறிமுதலானதாகவும் அரசதரப்புப் பத்திரிகைச் செய்திகள் உண்டு.

ஆக,

முதல் தர நிழல் உலகச் சக்கரவர்த்தியான சந்திரசுவாமியுடன் உள்ள தொடர்புகள் வெளிப்பட்டதும் கூட, தாவூத் இப்ராஹிம் இந்தியா வர அஞ்சியதற்கான ஒரு காரணமெனலாம்.

இந்நிலையில்,

படு ரகசியமாக காற்றோடு ஒரு 'திடுக்' செய்தி வெளியாகி பலரை அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது. அதாவது... பல காலம் துபாயில் இருந்த தாவூத் இப்ராஹிம், தற்போது இந்தியாவின் எல்லை மற்றும் விரோத நாடான பாகிஸ்தானுக்குள் வந்துள்ளதோடு, பாகிஸ்தான் அரசு தனது பாதுகாப்புத் துறையின் ஒரு உயர் பதவியில் அவரை அமர்த்தியும் இருக்கிறதாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, தாவூத் இப்ராஹிமோடு பாகிஸ்தானில் இருக்கும் அவரது ஒன்றுவிட்ட இளைய சகோதரர், அண்மையில் இலங்கைக்கும் 'சுற்றுலாப் பயணம்' வந்து, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கிப் போயுள்ளதாகவும் கூறப்படுகிறது.

உலகம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு தாவூத் இப்ராஹிமுக்கான பாகிஸ்தான் உயர் பதவி ஒரு நல்ல உதாரணம். 1993ம் ஆண்டின் பம்பாய் குண்டுவெடிப்புக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் கூட நேரான தொடர்புகள் இருந்து, குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான தாவூத் இப்ராஹிமை கௌரவிக்கும் முகமாக இவ்வுயர் பதவி கொடுக்கப்பட்டிருக்கலாம் என்கிற ஊகங்களும் தகவலறிந்த வட்டாரங்களில் எழும்பியுள்ளன.

இத்தருவாயில், பம்பாய் குண்டுவெடிப்புக்கும் பாகிஸ்தானுக்கும் முடிச்சுப் போடுவதுதான் கட்டுரையின் நோக்கமல்ல.

தாவூத் இப்ராஹிமின் இந்த-இன்றையநிலைமை, நமக்கு இலங்கையின் **சொத்தி உபாலி**யைத்தான் ஞாபகப்படுத்துவதாக இருக்கிறது.

கொழும்பை அண்டியபிரதேசத்தில் அண்மையில் இனந்தெரியாத மற்றொரு நிழல் உலகக் கோஷ்டியினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரபல தாதா **சொத்தி உபாலி** கூட பல கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வன்முறைகளுக்குக் காரணமாகப் பேசப்பட்டவர். பல முறை சிறைவாசம் அனுபவித்தவர். கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டவர்.



பிரேமதாசா

இலங்கையின் கடந்த ஐ. தே. க. காலத்தில் சொத்தி உபாலியின் பாதாள உலகக் கரம் மிகையாக நீண்டிருந்தும் கூட, அப்போதைய அரசு அதைப்பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அத்தோடு 'இதற்குக் காரணம் இவர்தான்' என்று உள்ளுக்குள் பலர் தெரிந்துவைத்திருந்தும் பகிரங்கமாக அதை வெளிப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டவில்லை,

இந்நிலையில், அரச-அதிகாரத் தடைகளையும் மீறி பாதாள உலகத்தின் செய்திகள் சில ஆங்காங்கே கசியும் தன்மையையும் இங்கு ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

**மகாத்மாக்களைப் புதைத்து விட்டு, கோட்சேக்கள் அதிகாரம் செலுத்தும் காலமிது என்கிற போது... இப்படியும் நடக்கிறதே என்பது ஒன்றும் வியப்பானதல்ல.**

அப்படிக் கசிந்த சில 'உத்தியோகபூர்வ' செய்திகளின் அடிப்படையில்..சிலஐ.தே.க.அரசியல் வாதிகள் தமது கருவியாக சொத்தி உபாலியைப் பயன்படுத்தி வந்ததாகவும் தெரியவந்திருக்கிறது.



சிறிசேன குரே

ஐ. தே. க. தலைமைப் பீடத்தைச் சேர்ந்த மறைந்த ஆர். பிரேமதாச அவர்களால் சொத்தி உபாலி பல காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார். அரசமட்டத்தில் தாவூத் இப்ராஹிமுக்குப்போன்று 'வெளிப்படையான' உயர் பதவி உபாலிக்குக் கிடைக்காது போயிருந்தாலும், மேற்படி தலைமைப் பீடத்தைச் சேர்ந்தவரால் 'பிரத்தியேக' உயர் பதவி நிழல் உலகு சார்பாக கொடுக்கப்பட்டிருந்ததாம்.

தவிர, கடந்த ஐ. தே. க. காலத்தில், பிரபல பத்திரிகையொன்றின் கேலிச்சித்திரக்காரரான முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த யூனுஸ், சொத்தி உபாலியின் மரண அச்சுறுத்தலுக்கு ஆளாகி... வெட்டுக் காயங்களுக்கு உள்ளானதன் சம்பவப் பின்னணியிலும் கூட குறித்த இந்த அரசியல்வாதி இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இலங்கையில் இதுபோன்ற பல நிழல் உலகச் சக்கரவர்த்திகள், அன்றைய ஐ.தே.க. காலத்தில் 'நிழல்' பதவிகள் வாயிலாக பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதும் இங்கு மறுக்க முடியாத ஒன்று. அதற்கு பல சம்பவங்கள் சாட்சி பகர்வதாய் இருக்கின்றன.

கடந்த கால மே தின ஊர்வலம் ஒன்றில் 'மனித வெடிகுண்டுக்கு'ப் பலியான முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச மற்றும் அவரது வலதுகர சகாவாகப் பெயர் பெற்றிருந்த முன்னாள் ஐ.தே.க. அமைச்சர் சிறிசேன குரே (தற்போது ஐ.தே.கவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்) ஆகியோர் அக்காலம் புரையோடிப் போயிருந்த "டயர்" கலாசாரத்தையும் தாண்டிய ஓர் பாதாள உலகுக்குள் கைகோர்த்திருந்தார்கள் என்பதும் இங்கு ஞாபகமூட்டப்படவேண்டியதே.


ஐ.தே.க. காலத்தில் இருந்த பிரபல சுங்க அதிகாரியான அமரபால கொலைக்குக் காரணம் எனப் பேசப்பட்ட கொழும்பு பிரதேச பிரபல வர்த்தகர் இக்பால் இஸ்மாயிலினது மறைவுக்குக்கூட இவர்கள்தான் காரணம் என்றும் ஒரு கதையுண்டு.

அக்காலம் பெயர்பெற்றிருந்த பல நிழல் உலகச் சக்கரவர்த்திகளோடு இவர்கள் பல இரகசியத் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பொதுஜனத்தாரின் பேச்சுக்களில் இந்த 'மாபெரும்' தலைவர்கள் 'கோட்ஃபாதர்க'ளாகச் சித்தரிக்கப்பட்டதுமுண்டு. (வரும் இதழ்களில் இவற்றை விரிவாக அலசுவோம்).

கலிகாலத்தையும் தாண்டி உலகம் எங்கேயோ போய்க்கொண்டுதான் இருக்கிறது. தவிர, மகாத்மாக்களைப் புதைத்துவிட்டு, கோட்சேக்கள் அதிகாரம் செலுத்தும் காலமிது என்கிற போது... இப்படியும் நடக்கிறதே என்பது ஒன்றும் வியப்பானதல்ல. அத்தோடு இக்கட்டுரையில் நிறைய 'ஆசை நாயகி'களும் வந்து போகிறார்கள். ஆஹா!!

**(அடுத்த அமுதிலும் தொடரும்)** •


**- மாஜிதா மைந்தன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும் வலம் வரும்
# 'டின்டின்'

தமிழ்வாணனின் 'சங்கர்லால்' துப்பறியும் அதிகாரி ஒரு காலத்தில் தமிழ் வாசகர்களிடம் வெகு பிரசித்தம். இதே போல் இன்று




உலகளாவிய எல்லா மொழி வாசகர்கள் மத்தியிலும் பிரபலயம் பெற்றவர்தான் மிஸ்டர் டின்டின்.

முழுமையாக மழித்த முகம். பிரமிட் போல உயர்ந்த நிற்கும் முன் தலைமுடி, இவர்தான் டின்டின். அவரோடு சகாவாக இருப்பவர்தான் கப்டன் ஹெடொக். கூடவே ஸ்னோவி என்ற நாய்க்குட்டி.

உலகு தழுவிய 50 மொழிகளில் இந்த 'டின்டின்'னின் சாகசம் இன்று அனைவராலும் பேசப்படுகிறது. ஏன், நமது நாட்டுத் தொலைக்காட்சியிலும் தற்போது டின்டின் கதையொன்று தொடராக ஒளிபரப்பாகி வருகிறது. ஏழு பளிங்கு உருண்டைகள் என்று அதற்குப் பெயர். மற்றது சூரியனின் கைதிகள் (*Prisoners of the Sun*) என்பது.

டின்டின்னின் சாகசங்கள் (*The Adventures of Tintin*) என்ற பெயரில் சிறுவர் கார்ட்டூன் படக் கதைகளாக வெளிவந்த இந்நூல்கள் எடுத்த எடுப்பிலேயே 40 ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன.



டின்டின் சாகசக் கதைகளின் படைப்பாளி ஹேர்ஜே (*Herge*) பிரேஸில் நாட்டைச் சேர்ந்தவர். அவர் படைத்த டின்டின், உலகளாவ வலம் வருவார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. சிரித்த முகமும் வெட்க சுபாவமும் கொண்ட ஹேர்ஜே இத்தகைய துணிகரமான பாத்திரமொன்றை உருவாக்குவார் என்றும் எவரும் எதிர்பார்க்கவில்லை.

டின்டின் உலகப்பாத்திரமாக வலம் வர மற்றுமொரு காரணமும் இருந்தது. உலகில் உள்ள எல்லா பண்பாட்டுப் பிரதேசங்களிலும் இந்த துப்பறியும் நிபுணர் சென்று வந்தார். *Tin Tin in America* என்ற கதைகளில் செவ்விந்தியக் கலாசாரச் சூழல் சித்திரிக்கப்படுகிறது. *Cigars of the Pharaoh* - இதில் எகிப்திய பிரமிட்கள் சம்பந்தப்படுகின்றன. ஹேர்ஜே திபெத்தின் பனிமுகடுகளையும் விட்டுவைக்கவில்லை. *Tin Tin in Tibet* என்ற நூலும் உண்டு. ஆழ் கடல்கள், வறண்ட பாலை நிலங்கள், அடர்ந்த காடுகள் மட்டுமன்றி விண் வெளியினையும் அவர் தனது கதைகளுக்குக் களங்களாக்கியுள்ளார்.

இராணுவத்தில் கொஞ்சக் காலம் கடமையாற்றிய ஹேர்ஜே கத்தோலிக்கப் பத்திரிகையொன்றில் "மூன்று சிறுவர்களும் பன்றிக்குட்டிகளும்" என்ற சிறுவர் கார்ட்டூன் தொடரைப் படைத்து வந்தார். இதன் பின்புதான் 'டின்டின்' தொடரை ஆரம்பித்தார்.

பெல்ஜியம் 'ரேமன்ட்' வெளியீட்டாளர்கள் ஹேர்ஜே 'டின்டின்'னை நூலாக வெளியிட முன் வந்தனர். ஹேர்ஜேக்கு இதன் பின்னர்தான் அதிர்ஷ்ட தேவதையின் கடாட்சம் கிடைத்தது. 1946இல் 'ஏழு பளிங்கு உருண்டைகள்', 'சூரியனின் கைதிகள்' என்பன வெளிவந்தன. ஒவ்வொன்றும் 60 ஆயிரம் பிரதிகள் விற்பனையாயிற்று. உற்சாகமடைந்த ஹேர்ஜே பிரத்தியேக ஸ்டூடியோ ஒன்றை உருவாக்கினார். பெரிய நகரங்கள், விமானங்கள், வாகனங்கள், பல்வேறு காட்சிகள் சார்ந்த படங்கள் சேகரிக்கப்பட்டு அங்கே தொங்கவிடப்பட்டன. ஏழு சிறந்த ஓவியர்கள் உதவிக்கு அமர்த்தப்பட்டனர். இதைத் தொடர்ந்து டின்டின் சம்பந்தமான ஏராளமான சாகச நூல்கள் உலகளாவப் பரவியுள்ளன.

'சுறாக்களின் ஏரி', 'நீலத்தாமரை', 'அமெரிக்காவில் டின்டின்' ஆகிய மூன்று நூல்களும் சிங்களத்தில் வெளிவந்துள்ளன. நமது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் இரண்டு தொடர்களையும் பிரபல திரைப்பட இயக்குநர் டைட்டஸ் தொட்டவத்தை மொழி மாற்றம் செய்துள்ளார்.

பூவுலகு சிறு கிராமமாக மாறி வருகிறது என்ற கூற்று டின்டின்னைப் பொறுத்தவரை உண்மையாகி வருகிறதல்லவா! ●

**மும்தாஸ் ஹபீன்**



## 'பொறுக்ஸ்'

ஒழுக்கத்தின் குணாம்சத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பொதுவான அர்த்தத்தில் ஒழுக்கம் ஒரு போராட்ட நிலையாகும். ராணுவக்காரனைப் போல ஒரு கட்டுத்திட்டத்திற்கு அடிபணிதல், ஒரு லட்சியத்திற்கு ஏற்றபடி கட்டுப்படல், திவ்ய நூல்களில் உள்ள சூத்திரம் ஒன்றுக்கு இசைய நடத்தல் - இவைதான் ஒழுக்கத்தின் பொது அர்த்தம். எங்கே கட்டுப்பாடு உண்டோ அங்கே மோதலும் சக்தி விரயமும் ஏற்பட்டே ஆகும். உள்ளமும் இதயமும் போராட்டத்தில் சிக்குமானால் அவற்றினால் கற்றுக்கொள்ள முடியாது....

கட்டுப்பட்டு, கீழ்ப்படிந்து , மற்றவனைப் போலி பண்ணி, திரும்பச் சொல்லி, ஆயிரமாயிரம் வருஷங்களாக நாம் போராட்டம் செய்து வந்திருக்கிறோம். அதன் விளைவாக நம் மனங்கள் அசாத்ய அளவுக்கு மந்தமாகி உள்ளன. மற்றவர் சொன்னதையோ, சொல்லாததையோ மேற்கோள் காட்டுகின்ற இரண்டாம்பட்ச மனிதர்களாகி விட்டோம். நம்முடைய செயல்களிலேயே இருந்து எதையும் கற்றுக்கொள்ளக்கூடிய திறனையும் சக்தியையும் இழந்து விட்டோம். நம்முடைய செயல்களுக்கு சமூகமோ, சூழலோ, அரசியல்வாதிகளோ காரணமில்லை - நாமேதான் முழுக் காரணகர்த்தாக்கள். நமது செயல்களுக்கு நாமேதான் பொறுப்பாளிகள் என்பதுடன் அச்செயல்களிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் நாமே பொறுப்பாளிகள்தாம். அத்தகைய கல்வியிலிருந்து நாம் ஏராளமாகவே கற்க முடியும்.

ஏனெனில் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுள்ளும், மனித வர்க்கத்தினது முழுக் கதையுமே புதைந்துள்ளது. மனித வாக்கத்தின் ஆதங்கம், பயங்கள், தனிமை, அனாதரவு, துயர், வேதனை எல்லாமே நம் ஒவ்வொருவரினுள்ளும் குடிகொண்டுள்ளன. இவற்றின் முழுச் சரித்திரப் பின்னல்களும் நம்முள் இருக்கின்றன. அந்தப் புத்தகத்தைப் படிப்பது எப்படி என்று நீங்கள் தெரிந்து கொண்டால் வேறு புத்தகம் எதையும் நீங்கள் படிக்க வேண்டிய அவசியம் இராது - தொழில் நுட்ப நூல்கள் போன்றவற்றைத் தவிர. ஆனால் நம்மிடமிருந்தே கற்றுக் கொள்வது பற்றி நமக்கு அசிரத்தை உண்டு. இதன் விளைவாக நமது செயல்களுக்கு நாமே பொறுப்பாளிகள் என்பதைக் காண்பதில்லை. உலகில் நடக்கிறவற்றுக்கும், இந்த துர்ப்பாக்கியமான தேசத்தில் நடக்கிறவற்றுக்கும் நாமேதான் பொறுப்பாளிகள் என்பதைக் காண்பதில்லை.

- ஜே. கிருஷ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியா, வேண்டாம்!

**மழைத்துளி பட்டாலே
உதிர்ந்துபோகும் ரோஜா இதழ்,
அமிலத் துளி பட்டால்
உருகிக் கருகிப் போகுமே.....
பாலியல் வக்கிரங்களினால் -
இன்றைய குழந்தை
மலர்களின் நிலையுமிதுதான்!**

1996ன் ஆரம்பம்!


ஸ்கொட்லாந்து நாட்டின் டன்பிளேன் எனும் சிற்றூர்.

வழமைபோல காலையில் பல எதிர்பார்ப்புகளோடு அமைதியாகக் கண்விழித்த அந்தச் சிற்றூர்வாசிகள், மதியத்துக்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னால் வெகுவாய்.... வெகு வெகு வெகுவாய் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனார்கள்.

காரணம்.....

அங்குள்ள சிறுவர் பாடசாலையில், பச்சிளம் சிறார்கள் 16 பேர் அன்றைய தினம் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டதுதான்.

43 வயது தோமஸ் எமில்டன் என்கிற வேலை பறி போன ஆசிரியரொருவரால், குழந்தைகள் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்ட இந்தச் சம்பவம் முழு உலகையுமே ஒரு கலக்கு கலக்கியது. ஒரு கொடுமையான கொலை முயற்சியென இது வர்ணிக்கப்பட்டது.



இந்தக் கொலைக்குப் பின்னணி என்னவென்று பொலீசார் ஆராய்ந்தபோது, தோமஸ் எமில்டன் என்கிற இந்தக் கொலைகாரன் பாலியல் ரீதியாக மனநிலை பாதிக்கப்பட்டவனாக இருந்தது மட்டுமல்லாமல், சிறுவர் விபசாரத்தில் ஈடுபட்டு - புத்தி பேதலித்து - வெறிகொண்டவனாகவும் இருந்திருக்கிறான். காம வேட்கையும் வெறியும் கட்டுக்கடங்காமல் போய்.... தனது இச்சைக்கு அடிபணிய மறுத்த சிறார்களை காலைப் பொழுதில் தனது கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு, தானும் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்து போனான்.

பரிதாபமாய் சுடப்பட்டு மரணமான அந்தப் பதினாறு குழந்தைகளின் மரணங்களும், அவர்களது பெற்றோர்களை சித்தப்பிரமை பிடித்தவர்களாக மாற்றிவிட்டன. இத்தனைக்கும் அந்தக் குழந்தைகள் செய்த குற்றம் எதுவுமேயில்லை.

அந்தத் தோமஸ் எமில்டனின் வக்கிரம் பிடித்த காமவெறிக்கு இணங்க மறுத்தது தான், சூழ்நிலைக் கைதிகளான அந்த அப்பாவிச் சிறார்கள் செய்த தவறென்றால்.... குற்றமென்றால்....

வெட்கங்கெட்ட பாலியல் வன்முறைச் செயலுக்கு இன்னும் விலங்கிடாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தேசமும், சமூகமும், சட்டங்களும் கூட இன்னும் குற்றவாளிகளாகத்தான் இருக்கின்றன என்பது புறக்கணிக்கப்பட முடியாதவொன்று.

அந்தளவுக்கு சிறுவர் விபசாரமும் பாலியல் வன்முறைகளும் இன்று சர்வதேச ரீதியாகக் கூறுகெட்டு வளர்ச்சியடைந்திருக்கின்றன.

குழந்தைகளின் உரிமைகளை 'மனித உரிமையாக' மதித்து ஏற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள், செயற்பாடுகளையும் மீறி - அபரிமிதமான வேகத்தில் சிறுவர் விபசாரம் உலகின் பல் திசைகளிலும் பரவிக்கொண்டிருப்பது என்பது கவலையையும், நினைத்தால் ஆத்திரத்தையும் தருவதாக இருக்கின்றது.

பாலியல்!

காதல், வயிற்றுப் பசி, உறக்கம் போன்று மனித வாழ்க்கையில் இதுவுமொரு தூய்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான் அதே நேரம் சுகமான சங்கதிதான். ஆனால், மலர்களுக்கு ஒப்பான பிஞ்சு மனச் சிறார்கள் பாலியல் பாலாத்காரங்களுக்குள் இழுக்கப்பட்டு - ஈர்க்கப்படுவதுதான் மிலேச்சத் தனமான கொடுமையாக இருக்கிறது.

ஆற்றோரம், வயலோரம், வைக்கோல் குவியலோரம் எல்லாம் கொஞ்சி விளையாட வேண்டிய பிஞ்சுமனச் சிறார்கள், பால்மணம்

கடற்கரைப் பிரதேசங்களில்தான் இன்று சிறுவர் விபசாரம் பெருக்கெடுத்திருக்கிறது. இலங்கையின் தென்பகுதிக் கடற்கரைகளும், இந்தியாவின் 'கோவா' கடற்கரையும் இதற்கு நல்ல உதாரணங்கள்.

சில பிரசித்தமான பத்திரிகைகள் கோவா கடற்கரையை "ஓரினச் சேர்க்கைமையம்" என்று காரசாரமாகக் குறிப்பிட்டும் கூட, "சிறுவர் விபசாரத்துக்கு கோவா தோதான இடம்" என்று 'இன்டபோல்' கூறியும் கூட, அந்நிய செலாவணி தேவையை முன்னிட்டு கோவா அரசு இந்த விடயத்தில் கண்டும் காணாதிருக்கிறது.

சுற்றுலாத் தொழில்களினால், 12 லட்சம் கோவா மக்களில் ஏறக்குறைய ஆறிலொரு பங்கினருக்கு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ வேலைவாய்ப்புக் கிடைக்கிறது. சுற்றுலாதான் கோவா மக்களுக்கு சோறு போடுவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்நிலையில் -

அங்கே செக்ஸ் டூரிஸம் நடப்பதைக் கண்டும் காணாதவர்களாகவே அரசியல்தலைவர்களும், அங்குள்ள சமூகசேவகர்களும் இருக்கின்றனர்.

1990 காலகட்டத்தில் கோவாவில் ஃப்ரெடி பீட்ஸ் என்பவர் நடத்திய அநாதை இல்லத்திலிருந்து, ஆறிலிருந்து பன்னிரண்டு வயதுச் சிறார்கள் 150 பேரைச் செக்ஸ்முறைகேட்டுக்குப்பயன் படுத்தியதற்காக மேற்படி ஃப்ரெடி பீட்ஸை பொலீசார் கைதுசெய்தனர். குழந்தைகள் நிர்வாணக் கோலத்தில் - செக்ஸ் போஸ்களில் இருந்த சுமார் 2000 புகைப்படங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. குழந்தைகள் கடத்தல், விபசாரம், வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் தகுந்த ஆதாரங்கள் இல்லையென்று நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

இந்தத் தீர்ப்பும் கூட -

சிறுவர் விபசாரத்தை கோவாவில் மறைமுகமாகத் தூண்டியதோடு....

இன்றும்கூட இதுபோன்ற பல சம்பவங்கள் தொடர்வதற்கும், "செக்ஸ் டூரிஸம்" கோவாவில் வளர்வதற்கும் காரணியாகியிருக்கின்றன.

கிட்டத்தட்ட ஐந்தரைக் கோடி குழந்தைத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாகக் கொண்டிருக்கும் இந்திய நாட்டில், கால்வாசிக்கும் மேற்பட்ட குழந்தைகள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் மட்டுமன்றி முழு தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் சிறுவர் விபசாரம் குறுகிய காலத்துக்குள் விசுவரூபமெடுத்திருப்பதற்கு அரசுகளின் அசிரத்தையான போக்கும் காரணமாகக் கூறப்படுகிறது.

பல காரணங்களுக்காகவும் வீட்டிலிருந்து வேறு பிரதேசங்களுக்கு ஓடிவரும் சிறார்கள் தான் சிறுவர் விபசாரத்தில் இலேசான முறையில் பெரிதும் பயன்படுத்தப்படுவதாகவும் தரவுகள் கூறுகின்றன. இலங்கையிலும் சிறுவர் விபசாரத்திற்கு இதுதான் அடிப்படை! மற்றும் வறுமை, பட்டினி, குடும்பக் கட்டமைப்பு பலவீனமடைதல், வெளிநாட்டுப் பொருள்களின் மீதான மோகம், வெள்ளையின வெளிநாட்டவர்களோடு நட்புக் கொள்ள நினைக்கின்ற மனப்போக்கு என்பனவும் சிறார்களை விபசாரத்தில் ஈடுபடத் தூண்டிவிட்டிருக்கின்றன.

இலங்கையின் தென்பகுதிக் கடற்கரைகளில் - மரத்தடுப்புக் குடிசைகளில் வறுமையோடு போராடி, அன்றாடச் சாப்பாட்டிற்கே கஷ்டப்படும் சிறார்கள், வெளிநாட்டுப் பரிசுப் பொருட்கள், வோக்மேன், மினி டிரான்சிஸ்டர் என்று பாவிப்பதை ஆராய்ந்தபோது.... இவையெல்லாம்



# கசக்கப்படும் பிஞ்சு மலர்கள்

மாறும் முன் பாலியலுக்குள் பாழ்படுத்தப்படுவது பெரும் துர்ப்பாக்கியமே!

மேற்கத்திய நாடுகளில் பெரும்பாலான ஆணும் பெண்ணும் திருமணத்துக்கு முன்னரே பாலியல் உறவில் அனுபவம் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். 16 வயதைத் தாண்டிய எவரும் இயல்பாகவே பாலியலில் ஈடுபடும் நிலைமை அங்கு காணப்படுகிறது. அவர்களது கலாசாரத்துக்கு கேடு விளைவிக்காதவரை இது நாகரிகமாகவும் கருதப்படுகிறது.

ஆனால் -

இந்த மேற்கத்திய பாலியல் கலாசாரம் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், மூன்றாம் மண்டல நாடுகளிலும் பழக்கமாகி புரையோடிப் போயிருப்பதுதான் இன்று ஒரு பாரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது.

மேற்கூறிய நாடுகளில் சிறுவர் விபசாரம் தொற்றியிருப்பதற்கு மேற்கத்திய பாலியல் கலாசாரமே அடிமட்டக் காரணமாயிருக்கிறது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி நாடுகளின் சுற்றுலாப் பிரயாணிகள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஊடுருவியதே இலங்கை, இந்தியா, மாலைதீவு, தாய்வான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் சிறுவர் விபசாரம் விஸ்வரூபமெடுத்ததற்குக் காரணமெனலாம்.

உல்லாசப் பயணிகள் மிகுந்து காணப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விபசாரத்தின் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்டவை என்று அறியவந்திருக்கிறது.

வருமான நோக்கம் கருதிய சில பெற்றோர், தங்கள் குழந்தைகளை தம்பாட்டுக்கு விட்டிருப்பது என்பது கண்றாவியாக இருக்கின்ற போதும், பெற்றோரின் இந்த இயலாமையையும்,



சிறார்களின் ஆசைகள், தேவைப்பாடுகளையும் மூலதனமாக வைத்து, உல்லாசப் பயணிகளுக்கும் சிறார்களுக்குமிடையே 'உறவு'ப் பாலமிடும் இடைப்பட்ட தரகர்கள் - 'மாமா'க்களின் சம்பாத்திய மோகமும் கொடுமையானதாக இருக்கிறது.

இலங்கைக் கடற்கரைகளில் கடலை, வடை போன்ற சின்னச் சின்ன வியாபாரங்களோடு, போர்டு மாட்டாமல் சிறார்களின் உடம்புகளும் சின்னத்தனமாய் விற்பனை செய்யப்படுவது தான் இன்றைய நடைமுறை யதார்த்தமாகும். ஏஜென்டுகளாகச் செயல்படும் 'மாமா'க்களுக்கு இரு பக்கத்திலும் நியாயமான தரகுக் கூலியும் கொடுக்கப்படுகிறதாம்.

ஆக... பச்சிளம் உடம்புகளின் வியாபாரம் இங்கே (ரகசியமாக) சூடு பறக்கத்தான் செய்கிறது.

வெள்ளையினத்தைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் ஆசிய நாட்டுச் சிறுவர்களை குறிப்பாக இலங்கை, இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளின் சிறார்களைத் தமது இச்சைகளுக்கு வடிகாலாகப் பயன்படுத்துவதன் ஒரு காரணம்.... பாலியல் சார்பாக வெள்ளையர்கள் கறுப்பு இனத்தவரை அதிகம் விரும்புவதுதான்.

அடுத்த பட்சமாக... ஓரினச் சேர்க்கையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட மேற்கத்தியர்கள், தமது நாடுகளில் அதற்கு வாய்ப்புக் குறைவு என்பதனாலும், எயிட்ஸ்போன்றமதனநோய்கள் அங்கே பரவலாகக் காணப்படுவதனாலும், தம் அந்தரங்க ஆசையை சுதந்திரமாக - சுகமாக அனுபவிப்பதற்காக அதிகம் ஆசிய நாடுகளை நோக்கிப் படையெடுக்கின்றார்கள்.

முன்னரெல்லாம் இப்படிக் கடற்கரைகளுக்கு உல்லாசப் பயணிகளாக வந்தவர்கள் யதேச்சையாக சிறுவர்களை தமது பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்திய அந்த நிலைமை தலைகீழாகமாறிப்போய்....சிறுவர்விபசாரத்தை நோக்காகக் கொண்டே உல்லாசப் பயணிகள் இதுபோன்ற கடற்கரைகளுக்கு இடம்பெயரும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

வறிய நாடுகளுக்கு அந்நியச் செலாவணியைப் பெரிதும் ஈட்டித்தரும் உல்லாசப் பயணிகளின் பெருக்கம், ஒரு வகையில் நாட்டின் பொருளாதாரச் செழிப்பை மேம்படுத்தினாலும், மறுபுறம் சிறுவர் விபசாரமும், பாலியல் வன்முறை அதிகரிப்பும் இவர்களால் உருவெடுத்திருப்பது துர்ப்பாக்கியமே!

இன்றைய தென்கிழக்காசிய நாடுகளின் - சூழ்நிலைக் கைதிகளான குழந்தைகளின் தலைவிதியும் இதுதான்.

ஆக-

இந்நிலைமை மாற்றப்படல் வேண்டும்.

வெறும் பணத்துக்காக சமூகத்தின் கலாசாரமும், ஒழுக்கமும் கெட்டுவிடுவதையும், ஆரோக்கியமற்றதொரு எதிர்கால சமூகம் உருவாவதையும் எவருமே எள்ளளவும் ஜீரணிக்க மாட்டார்கள். ஜீரணிக்கவும் முடியாது.

எனவே, இந்நிலைமையில் அவசியமான - அவசரமான மாற்றம் வேண்டும்.

குழந்தை மலர்களை அன்பு செலுத்தி அரவணைக்க வேண்டிய கரங்களுக்கு, இப்படியொரு கட்டுரை எழுத வேண்டிய நிலைமை இதன் பிறகும் உருவாகக் கூடாது.

அதன் பொறுப்பு -

தனியான ஒவ்வொரு தேசத்தையும், அரசையும் சார்ந்து நிற்கிறது. •

**- மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்**



ஒரு கணத்தினுடைய தவறு முழுவாழ்வினுடைய துன்பமாக இருக்கிறது

—சீனப் பழமொழி

முதல் தவறு இரண்டாம் தவறுக்கு இருக்கையைத் தயார் செய்கிறது

—செக் பழமொழி

ஒரு மயிர் இழை அகலமான தவறு இலட்சியத்திலிருந்து உன்னை நூறு மைல் தூரம் தள்ளிச் சென்று விடும்

—ஜெர்மன் பழமொழி

தன்னைத்தானே காண்கிற குருடனும் இல்லை, தவறுக்குள் இருந்து கொண்டு அதை திருத்தியவனும் இல்லை

—போர்த்துக்கல் பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் தூவிய மலர்கள்

## நியாயம்

மிக மிக ஆழத்தில்...
மிகத் தொலைவில்...
உன் நிஜ முகம்!
எடு வெளியே.

நாளை,
நிஜத்தின் அலறல்
உன் உள் எழும்!
வௌவால் எழுப்பும்
ஒலியைப் போல்.

யதார்த்தத்தைக் காட்டு...
நிஜமுகத்தை எடுத்து,
கழுத்தில் பொருத்து.
எதிர்கால,
வௌவால் அலறலை
விட...
இது ஒன்றும்
ஆபத்தானது அல்ல
எடு விரைவில்
பொருத்து!!

- சுடலையாண்டி

## யுத்தச் சூறாவளி

நாங்கள்
அசுத்தக்
காற்றையே
சுவாசிக்கிறோம்

நாளாந்தம்
வைகறைக்குள்
சோகச் செய்தி
காட்டுத் தீயாய்

நடக்கின்ற
நிகழ்வுகளால்
உயிர்
போவதும்
வருவதுமாய்

மழைக்கு
இருட்டிய
வானம்போல்
மனித
முகங்கள்

தெருக்களும்
பூப்பெய்திய
பூவை போல்

அராஜகம்
சிம்மாசனம்
ஏறிவிட்டது

நவீன ரக ஆயுதங்களின்
அக்கினித் துண்டுகளை
விழுங்கி
ஆயுட்காலத்தை
நாளும்
பிண மைதானத்தில்
கழிக்கின்றோம்.

- ஓட்டமாவடி இஸ்மாயில்

## மூத்த குடி

வள்ளுவனின் புதைகுழியைத்
தோண்டி - அவன்
என்ன சாதி....?
இரசாயனப் பரிசோதனை
செய்யுங்கள்.

காவி போர்த்திருந்தும்
பௌத்தன் இல்லை
தாடி வளர்த்திருந்தும்
முஸ்லிம் இல்லை
சடாமுடி இருந்தும்
சைவனாகவும் இல்லை....
ஆராய்ச்சி தொடரட்டும்.

பழம் பெருமைகளை
வேதமாக ஓதுங்கள்
மதங்களின் சின்னங்களை
இளைஞர்
மண்டைகளில் குத்துங்கள்
கனத்த கிரீடங்களை
அதன்மேல் ஏற்றுங்கள்.

ஆண்ட பரம்பரை
அதுவொன்றே போதாதா?
கறுப்புக் கவிதைகள்
சிவப்பு நாவல்கள்
எங்களுக் கெதற்கு?
முன்பு ஒருமுறை
அந்நிய நாய்கள் எமை
ஆண்டது போதும்
அறுத்தெறியுங்கள்
தகவல் தொடர்பு
வலைகளை எல்லாம்.

மீண்டும் ஒரு முறை
சொந்தச் சோழனின் வாள்
நம்மை ஆளட்டும்
கணனிப் பொறிகளோடு
களப்பிரர் வருகிறார்கள்
விரட்டுங்கள்.

எங்கள் மொழியில்
இல்லாதது எதுவுமில்லை...
அந்நியக் கருத்துக்களோடு
ஆள் வருகிறான் பிடித்து
உள்ளே அடையுங்கள்.

கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்து மூத்த குடி
"வால்க பள்ளாண்டு!"

- பௌ. பவுத்திரன்



## காதலைக் கைப்பற்று!

அது -
வாழ்க்கையில்
வெடித்த பூகம்பம்!

நான் என்ற தீவின் -
ஒவ்வொரு திசையையும்...
சுழற்றிப்போட்ட
சூறாவளி!

எதிலெதிலெல்லாம்....
உயிர் வைத்திருந்தேனோ,
அவற்றைச் சாகடிக்க
அவர்கள் தொடுத்த
யுத்தம்!

தளிர்களாய்த் துளிர்த்து,
பூக்களாய் மின்னிய...
என் கனவுகள்....
வெறி பிடித்த
கோடை ஒன்றில்
இலையுதிர்த்துச்...
சருகுகளாய்ச் சிந்தின!

அன்பினைப்
பின்னிப் பின்னி....
மலர் மாலை தொடுத்தது,
ஆசையுடன்
சூட்டி விடத்தான்,
மனஞ் சிதறி
மலர் வளையமாய்ச் சாத்தி....
அஞ்சலி செலுத்த அல்ல!!

கவலை -
கரங்களுக்குள் பிடிபடாதிருக்கும்
காற்றைப் போல்-
காதலும்
கைகூடாமல்
போய்விடுமோ... என்பதே!

நீ - நினைத்திராத அளவுக்கு
உன்னில்
நேசம் வைத்திருக்கிறேன்
அதனால்தான் -
நீ - நினைத்திராத அளவுக்கு....
அதிகம் - தண்டிக்கப்படுகிறேன்!

எந்த நிகழ்வினாலும்
நீங்கி விடாததுதான்
என் - நேசம்...!
இவர்தம்
நெருக்குதலைத் தவிர்க்க....
இன்னும் நீயென்னை....
நெருங்கியாக வேண்டும்!

யுத்தத்தை....
சூறாவளியை....
பூகம்பத்தைத்
தோன்றச் செய்து,
எப்படியாவது
அவர்கள் -
பறித்துச் செல்லமுன் -
என் அழகிய காதலை
அன்பே நீ
கைப்பற்றிக் கொள்!

- மருதூர் அனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளெல்லாம் அலைமேலே....

யாழ்ப்பாணத்துக்குரிய பொதுமக்கள் போக்குவரத்துக்கானதரைப்பாதை மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமாகியதுடன் துண்டறுந்து போனது. கடந்த செப்டம்பர் 29ம் திகதி லயன் எயார் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன் இடைநிறுத்தப்பட்ட விமானப் பாதையும் தற்போதுதான் இராணுவ விமான சேவையாக ஒருவாறு தற்காலிகமாக மீள ஆரம்பித்துள்ளது. அதுவரை மிஞ்சியிருந்தது திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவை மட்டும்தான்.

இந்தப் போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்டிருப்பது 'லங்கா முதிஸ' என்ற சரக்குக் கப்பல். கொழும்புக்கும் காங்கேசன்துறைக்குமிடையே சரக்குகளைஏற்றிச் செல்லப்பயன்படுத்தப்படும் இக்கப்பலையே இடையில் இரண்டொரு தடவை பொதுமக்களையும் ஏற்றிச் செல்லஏற்பாடுசெய்துள்ளார்கள்.

இந்தத் தொந்துபறி ஏற்பாட்டை நம்பித்தான் யாழ்ப்பாணத்திலிருக்கும் சுமார் 4 லட்சம் மக்களும் மற்றைய இடங்களிலிருந்து பல்வேறு காரணங்களுக்காகயாழ்ப்பாணம் செல்லவேண்டியிருக்கும் பயணிகளும் இன்று காத்திருக்கிறார்கள்.

இதில் பலர் மிக அவசரமாகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருப்பர். வைத்தியசிகிச்சைக்காக உடனடியாக அனுப்பப்பட வேண்டியநோயாளிகள், வெளிநாட்டுப் பயணத்திற்காக விமான நிலையம் செல்ல வேண்டியிருக்கும் பயணிகள், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் செத்த வீடு, திருமணம் போன்ற முக்கிய சமூக சடங்குகளில் பங்குபற்றவேண்டிப் பயணிப்பவர்கள்.... எனப் பலவிதப்பட்ட அவசரக் காரணங்களுடன் பயணிகள் இரு கரையிலும் காத்திருக்கின்றனர்.

**மனித குலத்தின் பயணம் 21ம் நூற்றாண்டில் காலடி வைக்கும் இத்தருணத்தில் இங்கே யாழ் மக்கள் சரக்குகளோடு சரக்குகள் போல, தம் உடலையும் தாம் சுமக்கும் ஒரு பொதியாகக் கருதியபடி கடலலை மீது பயணிக்க விதிக்கப்பட்டுள்ளார்கள்.**

'எனினும் இவர்களின் பயண மார்க்கமாக எஞ்சியிருக்கும் இந்தக் கப்பல் சேவை கூட ஒழுங்கான சேவையாகவோ, வசதியான சேவையாகவோ இல்லாத நிலையில் இப்பயணிகள் பரிதவிக்க விடப்பட்டுள்ளார்கள்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் 'மேர்கண்டைல் ஷிப்பிங் கொம்பனி' மூலம் லங்கா முதிஸவுடன், மேர்க்ஸ்ஹின்ரலா, மேர்க்ஸ்மாஹோ, மேர்க்ஸ் கண்டி, ஓஷன் ஸக்ஸஸ்...நான்கைந்துசரக்குக் கப்பல்களை சரக்குகளை ஏற்றிச் செல்வதற்காக ஒழுங்கு செய்துள்ள போதும் பொதுமக்களின் போக்குவரத்துப் பற்றி அக்கறையுடனான ஏற்பாடு இங்கு இல்லை. பொதுமக்களுக்காக ஒதுக்கப்பட்ட இந்த லங்கா முதிஸ சரக்குக் கப்பலின் சேவைகூட நிச்சயமற்றது. சிலவேளை

## யாழ் பயணத் துயர்

ஓடும், சிலவேளை ஓடாது. எப்போ ஓடும் எப்போ ஓடாதெனச் சொல்ல முடியாது. இந்நிலையில் எவ்வளவு பேரை அனுப்பமுடியுமென்பதும் நிச்சயமற்றது. தற்போது யாழ்ப்பாணத்துக்காக 6000 பேர் காத்திருக்கிறார்கள். கப்பலில் ஒரு தடவைக்கு ஆயிரம் பேரைத்தான் ஏற்ற முடியும். ஒரு மாதத்திற்கு மூன்று தடவைகள் கப்பல் ஓடினால் கூட இருப்பவர்களை அனுப்பி முடிக்க இரண்டுமாதம் செல்லும். ஆனால் ஒழுங்காக ஓடுவது நிச்சயமில்லை. கடந்த செப்டம்பர் மாதம் 5 தடவைகள் கப்பல் ஓடிற்று. ஆனால் ஒக்டோபரில் ஓடவே இல்லை. நவம்பரிலும் ஓடவில்லை. டிஸம்பரில் மூன்று தடவைகள் ஓடியுள்ளது.

இதை ஒழுங்கான சேவையாக்குவதற்கு எவ்வளவு முயன்றும் முன்னேற்றம் காணப்படவில்லை. விமான சேவை இருந்தபோது கூட அதற்கு அறவிடப்பட்ட ஐயாயிரம் ரூபா கட்டணத்துடன் ஒப்பிடும்போது சாதாரண குடிமக்களுக்கு ஓரளவு கட்டுப்படியாகக் கூடியதாக அமைந்திருந்தது 600 ரூபா கட்டணம் கொண்ட இந்தக் கப்பல் சேவையாகத்தான் இருந்த்து.

இந்தக் கப்பலில் யாழ்ப்பாணம் செல்வதற்காக இரு பகுதியினர் காத்திருக்கிறார்கள். ஒரு பகுதியினர் மன்னார், வவுனியாவிலிருந்து மீண்டும் யாழப்பாணம் சென்று குடியமர வருகின்ற வன்னிப்புற அகதிகள். இவர்கள் பயணிகள்



Photo by K. D. Jayasekara Trinco. gro. corrs.

தொகையில் மூன்றில் ஒரு பகுதியினராக இருக்கிறார்கள். இவர்கள் புனர்வாழ்வு அமைச்சின் மூலம்பராமரிக்கப்பட்டுக்கட்டணமின்றிஅனுப்பிவைக்கப்படுகிறார்கள். மற்றைய மூன்றில் இரண்டு பகுதியினர் சொந்த அலுவல்களுக்காகப் பயணிப்பவர்கள்.

கடந்தநாலரை வருடங்களாக இந்தக் கப்பல் போக்குவரத்து சேவை நடைபெறுகிறது.

- பா. துரைராஜா



பயணத்திற்கான உண்ணாவிரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற் பயணம்

காலை எட்டு மணிக்கு பயணிகள் யாவரும் ஜெட்டிக்கு வந்துவிட வேண்டும். அவர்களுக் கான பொதிகள் சோதனை, ரிக்கெட் சோதனை, யாவும் முடித்து கப்பலில் ஏற்றப்பட்டு, மாலை 4 மணிக்கே கப்பல் திருகோணமலையிலிருந்து புறப்படும். அது மறுநாள் மத்தியானம் 2 மணிபோல் காங்கேசன்துறை துறைமுகத்தை அடையும்.

இக்கடற் பயணத்துக்கான மூன்று வேளை உணவையும் பயணிகள் எடுத்துவர வேண்டும். காங்கேசன்துறையில் மதிய உணவு வழங்கப் படும். பின்னர் பயணிகள் வீடியோ படம் எடுக் கப்பட்டு, சோதிக்கப்பட்டு, பஸ் மூலம் யாழ்ப் பாண நகரத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

யாழ் நகருக்குச் செல்லும் பயணிகள் அன்று வீடுகளுக்குச் செல்லலாம். வடமராட்சி, தென்ம ராட்சி போன்ற தொலைவிடங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் மறுநாள்தான் செல்லக்கூடிய தாக இருக்கும். மொத்தத்தில் சுமார் 22 மணி நேரக் கடற் பயணத்திற்காக, இரண்டு அல்லது மூன்று நாட்களும் செலவழிக்க வேண்டி ஏற் படலாம்.

இதேவேளை இக்கப்பல் பயணத்தின்போ தான அவஸ்தை மிகக் கடுமையானது. பயணி களுக்கான வசதிகள் ஏதுமற்ற வெறும் சரக்குக் கப்பலான 'லங்கா முதிஸ'வில் உள்ள 26 அடி ஆழமான கிடங்கில்தான் மக்கள் பயணிக்க வேண்டும்.

இங்கு ஆசனங்கள் எதுவும் கிடையாது. வெறும் பாயை விரித்து விடுவார்கள். அதில் இருக்க வேண்டியதுதான். உள்ளே காற்றோட்ட மின்றி மிகப் புழுக்கமாக இருக்கும். இக்கிடங் குக்குள் இறங்கி ஏற அமைக்கப்பட்டிருப்பது ஒரு பழைய இரும்பு ஏணிதான். அதில் கால் பதிக்கக் கூட தட்டுகள் இல்லை. வெறும் இரும்பு உருளைகள் தான் உண்டு. அத்துடன் அதில் புற வளமாகத்தான் - முதுகுப் புறமாகத்தான் இறங்க முடியும். வயோதிபர்களுக்கு இதில் ஏறி இறங்குவதென்பது ஒரு பெரும் கண்டத்தைக் கடப்பது போல.

அடுத்த பிரச்சினை மலசலகூடம்.

இக்கப்பலின் மேல் டெக்கில் அமைக்கப்பட் டிருக்கும் மலசலகூடம் கடலை நோக்கி வெளித்தள்ளியபடியே பொருத்தப்பட்டுள்ளது. இங்குள்ள மொத்தம் ஆயிரம் பயணிகளுக்கும் இவ்வாறு இரண்டே இரண்டு மலசலகூடம்தான் உள்ளது. அதற்குச் செல்வதற்குக் கியூவில் தான்நிற்கவேண்டும். ஆனால்கடற்காற்றிற்கும் கப்பல் ஆட்டத்திற்கும் பயந்து பலர், குறிப்பாக முதியவர்கள் அதற்குச் செல்வதில்லை. பெரும் பாலான பயணிகள் இரவு பகலாக மலசலம் செல்லாது அடக்கி வைத்துக்கொண்டே பய ணிக்கின்றனர். மலசலம் செல்ல நேரிடும் என்ற பயத்தால் உணவையும் நீரையும்கூட அவர்கள் கூடியமட்டும் தவிர்க்கிறார்கள்.

மனித குலத்தின் பயணம் 21ம் நூற்றாண்டில் காலடி வைக்கும் இத்தருணத்தில் இங்கே யாழ் மக்கள் சரக்குகளோடு சரக்குகள் போல, தம் உடலையும் தாம் சுமக்கும் ஒரு பொதியாகக் கருதியபடி கடலலை மீது பயணிக்க விதிக்கப் பட்டுள்ளார்கள்.

**யாழ் - திருமலை கப்பல் பயணத் துக்கான வழிமுறை குறித்து அறிய, திருகோணமலை பிரதேச சபைச் செய லாளரும், அத்தியாவசிய சேவைகள் பிரதிஆணையாளர் நாயகமுமான திரு. 'வேலும்மயிலும் அவர்களை அமுது அணுகிய போது.....**

## கப்பல் பயணத்திற்கான வழிமுறை

பொதுமக்கள் திருகோணமலையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பெயர், அடையாள அட்டை, விலாசம் முதலி யவற்றை அதற்குரிய படிவத்தில் அல்லது வெள்ளைக் கடதா சியில் நிரப்பித் தர லாம். இதைத் தொடர்ந்து அவர்களைப் பதிவுசெய்து அவர்களுக்கு ஒரு இலக்கத்தை ஒதுக்குவோம்.

இந்த இலக்கத்தைப் பெற்றபின் எம்மிடம் கப்பல் பயணத்துக்கென book பண்ண வேண் டும். ஆசனப்பதிவுசெய்யவேண்டும். பெயர்ப் பதி வோடு மட் டும் நின் றுவிட்டால் ஆசனப் பதிவு கடைசிவரை கிடைக்காது. பெயர் கொடுப் பதும், ஆசனப் பதிவும் ஒன்று தான் என்கின்ற ஒரு தவறான விள க்கம் பொது மக்க ளிடம் உள்ளது. அது தவறு.



பிரயாணத்தை விரும் பும் எவரும் பெயர் தர லாம்.

உதாரணமாக, இன்று வரை 52 ஆயிரம் நம்பர் எம்மிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒரு முறை கப்பல் ஓடும்போது சுமார் 1000 பேர்தான் ஆசனப் பதிவு பெறுவார்கள். அவர்களே அக்கப்பலில் பயணிக்க முடியும். இதற்குப் பெயர் பதிந்தவர்கள் தமது பதிவு இலக்கத் துடனான துண்டை எம்மிடம் காட்டி அடுத் ததாகச் செல்லவிருக்கும் கப்பலுக்கு ஆசனப் பதிவு செய்ய வேண்டும்.

கப்பல் ஓடுவதற்கு சுமார் 5 முதல் 10 நாட்களுக்கு முன்னர் ஆசனப் பதிவை ஆரம் பிப்போம். இதுவரை காலமும் பயணிப்பவர் களுக்காக வேறு யாரும் ஆசனப் பதிவைச் செய்யலாமென்ற ஒரு சலுகை கொடுத்திருந் தோம். ஆனால் இப்போது, பயணத்துக்கு ஆச னப் பதிவு செய்பவர்கள் நேரடியாக வர வேண்டுமென்ற ஒரு புதிய நடைமுறையைக் கொண்டு வந்துள்ளோம்.

ஏனெனில் ஆசனப் பதிவு செய்பவர்களில் சுமார் 1/5 பகுதிப் பேர் கடைசி நேரத்தில் வராமல் விட்டுவிடுகிறார்கள்.

நாம் இங்கு பயணிக்க விண்ணபிப்பவர் களை ஆசனப் பதிவு செய்வது மட்டுமல்ல, அப்பெயர்களை 'நாஷெனல் இன்டெலிஜண்ட் பீரோ' என்னும் என். ஐ. பி. அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். அவர்களால் இப்பயணிகள்பற்றியபுலனாய்வுசெய்யப்பட்டு பயணிக்க அனுமதி வழங்கப்பட்டவர்களை - அதாவது என். ஐ. பி. கிளியரன்ஸ் ரிப்போட் பெறப்பட்ட வர்களை மட்டும்தான் கப்பலில் ஏற்றுவோம்.

பெயர் பதிவதற்கு நேரடியாக வரவேண்டிய அவசியமில்லை. கடிதம் மூலமும் பதி யலாம். நாம் அவர்களது இலக்கத்தை அவர் கள் விலாசத்திற்கு அனுப்பி வைப்போம். ஆனால் ஆசனப் பதிவிற்கு நேரடியாக வர வேண்டும். அவ்வாறு வருபவர்கள் திருகோ ணமலையில் அதிக நாள் தங்கி யிருக்க வேண்டி நேரிடாத வகை யில் துரிதமாக நாம் அவர்களுக்கான ஆசனப் பதிவை முடித்துக் கொடுக்கிறோம். கப்பலுக்கு ஆசனப் பதிவு கோரப்படுவதை நாம் முன்கூட்டியேபத்திரிகைகள் வாயிலாக அறிவிப்போம். முன்னைய கப்பல் புறப்பட்ட அன்று மாலையே மற்றைய கப்பலுக்கான ஆசனப் பதிவை ஆரம்பித்து விடுவோம். அதன்பின் பொதுமக்கள் இங்கு வந்து தமது ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

கப்பல் செல்லும் வரை அவர்கள் எம்மு டைய துண்டுடன் திருகோணமலையில் தரித் திருக்கலாம். அல்லது விரும்பியவர்கள் பிற இடங்களுக்குப் போய் வரலாம். நாம் ஒரு பயணத்திற்கு ஆயிரம் ஆசனங்களை ஒதுக்கி யுள்ளதோடு 100 ஆசனங்கள் றிசேர்வ் ஆக வைத்திருப்போம். எவரேனும் போகாவிடின் றிசேர்வில் உள்ளவர்களை அனுமதிப்போம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்களது பயண அனுமதியையும் ஆசனப் பதிவையும் இராணுவமே கையாள்கிறது. கப்பலுக்கு ஒரு வழிப் பயணத்துக்கே பயணச் சீட்டு வழங் கப்படுகிறது. வந்தவர்கள் திரும்பிப் போவ தற்கு மறுபடி பதிய வேண்டும். கப்பல் சேவை மத்திய அரசாங்கத்தாலேயே கையாளப்படு கிறது. மாகாண அரசாங்கத்துக்கு இதனுடன் எத்தொடர்பும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான

"சென்றல்"

இடம்

வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

## வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்

84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்

270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை

254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235


கிளை அலுவலகம்

அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

**செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெப்ரவரி - '99




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு பொழிவது
# அமுது

ஆவலைத் தூண்டுவது
# அமுது

திகைக்கவைப்பது
# அமுது

உண்மையைப் பகர்வது
# அமுது

சிரிக்கவைப்பது
# அமுது

அறிவூட்டுவது
# அமுது

அனைவருக்குமானது
# அமுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெறுமனே "எவ்வளவு"

# "எவ்வளவு காலத்திற்கு?"

## என்பதல்லக் கேள்வி

## எப்படி, எவ்வளவு சிறப்பாக, நாம் உதவ முடியுமென்பதுதான் கேள்வி

வீடமைபபுத தொடர்பான வழககமான மனப்பான்மை "எவ்வளவு" "எவ்வளவ காலத்திற்கு?" என்பதாகும்.

ஹற்றன் நஷனல் வங்கியின் ஷாந்தி கடன் திட்டம் இதறகப்பாலும் செயறபடுகிறது.

உங்கள் கருத்து, உங்கள் தேவைகள், உங்கள் முன்னுரிமைகள் மற்றும் எவ்வளவு சிறப்பாக நாம் உதவமுடியும் என்பவற்றின் அடிப்படையிலேயே நாம் இந்த விஷயத்தை அணு குகின்றோம்.

வசதிகள்- நாடு பூராவுமுள்ள எமது ஏதேனும் ஒரு கிளையூடாக நீங்கள் விரும்பும் கிளையில் சகல கொடுக்கல் வாங்கல் களையும் செய்யலாம்.

வாய்ப்புகள்-வெறும் காணியை வாங்குதல், வீடமைத்தல், பூர்த்தியான வீடொன்றைக் கொள்வனவு செய்தல் அல்லது புதுப்பித்தல், விரிவாக்கல் ஆகியவற்றுக்குக் கடன் கிடைக்கிறது.

விரைவான சேவை-வழமையான சூழ் நிலைகளில் கொடுக்கல் வாங்கல்களை 6-8 வாரங்களில் அல்லது அவசியமானால் இதற்கு முன்னரும் செய்து கொள்ளலாம்.

செய்திறன்மிக்க சேவை-உங்கள் தேவை களைப்புரிந்து அவற்றுக்கு அர்த்த பூர்வமாகச் செயற்படும் அனுபவமும் சிறப்புத் திறமையும் பெற்ற அலுவலர்களை ஒவ்வொரு கிளையும் கொண்டிருக்கிறது.

இசைவானது-நீங்கள் பெறும் கடன் தொகைக்கு உச்சவரம்பு இல்லை. ஆகக் கூடியது 20 வருட காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு ஹ.ந.வங்கியின் ஏதேனும் ஒரு கிளையுடன் அல்லது தலைமை அலுவலகத்தின் சந்தைப்படுத்தும் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன் நஷனல் வங்கி**

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

10, ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை,
கொழும்பு 03
தொ.பே: 421885-7 ஃபாக்ஸ்: 320745
ரெலெக்ஸ்: 22152 HATNBK CE,
http://www.hnb.net
Email: moreinfo@hnb.net

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD. 10758

**ஹற்றன் நஷனல் ஷாந்தி - ஆயுட்காலம் பூராவும் அமைதியும் சாந்தியும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்ற பிரஜை

## 'டித்வாள்' நாய்

இந்திய பாகிஸ்தானிய எல்லையில் உள்ள மலைப் பிரதேசம் டித்வாள். இங்கு இரு தரப்புப் படைகளும் ஆயத்த நிலையில் இருக்கும். எப்போதும் பரபரப்பு நிலவும் டித்வாள் பிரதேசமே கதை நிகழும் களமாகும். உருது மொழி எழுத்தாளர் ஸதாத் ஹஸன் மன்தோவின் *Kingdom End* சிறுகதைத் தொகுதியிலிருந்து இக்கதை மொழிபெயர்க்கப்பட்டது.

**தமிழில்: எம். எச். எம். ஷம்ஸ்**

ஒவ்வொரு நாளும் பழக்கப்பட்டபடி மாறி மாறி வைத்துக்கொண்ட வேட்டுக்கள் தவிர பல வாரங்களாக எந்தவித சண்டையிலும் ஈடுபடாத படையினர், முகாம்களுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். இதமான சுவாத்தியம் நிலவியது. சுற்றிவர காட்டு மலர்களின் வாசனை. கற்பாறைகளுக்குள்ளும் மலைச் சரிவின் பற்றைகளுக்குள்ளும் மறைந்திருந்த வீரர்களைக் கவனியாது இயற்கை தயக்கமின்றிப் பவனி வருவது போலிருந்தது. பட்சிகள் வழக்கம்போல பாடல் இசைத்தன. இதழ்விரித்திருந்த காட்டு மலர்களின் மேல் பறந்தமர்ந்த தேனீக்களின் சோம்பலான ரீங்காரமும் கூடவே.

இசைக் கலைஞன் தனது வாத்தியக் கருவியில் அபசுரம் எழுப்பினாற்போல வெடியோசை கிளம்பும் சமயங்களில் பட்சிகள் வானிலே எழுந்து பறந்தன. செப்டம்பர் மாத இறுதிப் பகுதி என்பதால் சுவாத்தியம் இதமாக இருந்தது. மாரி காலக் குளிர் வந்து சமரசம் செய்து கொண்டது போலிருந்தது. நீல வானில் பஞ்சு போன்ற வெண் முகில்கள் வாவியில் மிதந்த வள்ளங்கள் போல் தெரிந்தன.

எதுவும் நிகழாத இந்த முடிவற்ற யுத்தத்தினால் போர் வீரர்கள் களைத்தது போல் இருந்தார்கள். எவரும் ஆக்கிரமிக்கமுடியாதபடி அவர்கள் தங்கியிருந்த இடங்கள் அரண் போல அமைந்திருந்தன. இரு தரப்பினரும் முகாம் அமைத்திருந்த அந்த மலைகளும் கூட சமமான உயரத்தில் இருந்ததால் ஒருவர் மற்றவரை மிஞ்சிவிட வழியின்றியிருந்தது. கீழே பள்ளத்தாக்கு வழியாக வளைந்து சென்ற அருவிகள் நகரும் பாம்புகள் போல் தோன்றின.

இந்த யுத்தத்தில் விமானப்படை இடம்பெறவில்லை. பீரங்கி போன்ற பாரிய ஆயுதங்கள் இரு புறத்திலும் இருக்கவில்லை. இரவு நேரங்களில் நெருப்புக் கங்குகள் தீப்பிழம்பை எழுப்பின. இரு புறமும் எழும் ஆரவாரம் மலைப் பிரதேசத்தில் எதிரொலித்தது.

அன்றைய நாளுக்காக கடைசியாகப் பகிரப்படும் தேநீர் விநியோகம் முடிவுற்றது. நெருப்பு அணைந்திருந்தது. வானம் தெளிவாயிருந்தது. குளிர்காற்றில் தேவதாரு மரங்களில் தொங்கிய காய்களின் வாசம் ஊடுருவினாலும் அருவருப்பற்ற நறுமணம் கலந்திருந்தது.

இரவு காவலில் இருந்த ஜமாதார் ஹர்னாம் சிங்கைத் தவிர படையினர் எல்லாம் நித்திரையில் ஆழ்ந்துவிட்டனர். அவன் நடுச்சாமம் இரண்டு மணிக்கு காவல் பொறுப்பை ஒப்படைப்பதற்காக கந்தா சிங்கை எழுப்பினான். பின்னர் சாய்ந்துகொண்டு நித்திராதேவியை எதிர்பார்த்திருந்தாலும் வானில் கண்சிமிட்டிய தாரகைகள் போல தூக்கம் தொலைவிலேயே நின்றது. அவன் மெல்லிய குரலில் பஞ்சாபிப் பாடலொன்றை இசைத்தான்.

"காதலியே என் காதலியே
தாரகை பொறித்த
பாதணி சோடியொன்றை
கொண்டு தருவாயா? - உன்
எருதுகளை விற்றேனும்
தாரகை பொறித்த
பாதணி சோடியொன்றை
கொண்டு தருவாயா?"

அவனை அப்பாடல் கனவுலகுக்கே இழுத்துச் சென்றுவிட்டது. அவன் ஒவ்வொருவராக எழுப்பினான். அவர்களுக்குள் வயதில் இளையவனான பண்டாசிங், பஞ்சாபியில் பேர் பெற்ற காதலும் அவலமும் கொண்ட புராண காவியமான "ஹீர் அஞ்சா"வில் வரும் விரககீதமொன்றைப் பாடத் தொடங்கினான். ஆழ்ந்த சோக உணர்வு அவனை அணைத்துக் கொண்டது போலிருந்தது.

பாடலின் சோகத்தில் கட்டுண்டது போல கருநிற மலைத் தொடர் காணப்பட்டது.

ஒரு நாயின் குரைப்போடு, இந்த உணர்வுகள் எல்லாம் நொருங்கிச் சிதறின. "பற நாய்.... எங்கிருந்து வந்ததோ தெரியாது" ஹர்னாம் சிங் கத்தினான்.

நாய் மீண்டும் குரைத்தது. இதோ மிக நெருக்கமாக அந்தச் சத்தம் கேட்டது. இலைகளின் சலசலப்பும் கேட்டது. அத்திசையில் சென்ற பண்டாசிங் கட்டாக்காலி நாயொன்றோடு வந்தான். வலை ஆட்டியபடி அது சுற்று முற்றும் பார்த்தது.

"பற்றைக்குள்ளிருந்து நான் இதைக் கண்டு பிடித்தேன்.... அது சொல்லிச்சுது அதன் பெயர் ஜுன்ஜுனாம்" பண்டாசிங் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

தனது பேக்கிலிருந்து பிஸ்கட் ஒன்றை எடுத்த ஹர்னாம் சிங் நிலத்தில் போட்டான். நாய் அதனை மோந்து பார்த்து விழுங்கிவிட ஆயத்தமாகும்போது, ஹர்னாம் பிஸ்கட்டை மீண்டும் வெடுக்கென்று எடுத்துவிட்டான்.

"நில்லு....ஒருவேளை நீ பாகிஸ்தான் நாயாக இருக்கலாம்" இதைக் கேட்டு அனைவரும் சிரித்தார்கள். நாயை மெதுவாக தட்டிக் கொடுத்த பண்டாசிங், ஹர்னாம்சிங்கைப் பார்த்துச் சொன்னான்: "ஜமாதார் ஸாஹிப், ஜுன்ஜுன் ஒரு இந்திய நாய்"

"உன் இருப்பிடத்தைச் சொல்லு" ஹர்னாம் சிங் உத்தரவிட்டான். அது வாலை ஆட்டியது. "இது அப்பாவி அகதி நாய்" என்றவாறு அதன் வாலைத் தடவிக் கொடுத்தான் பண்டாசிங்.

ஹர்னாம்சிங் நாயை நோக்கி பிஸ்கட்டை வீச அது நிலத்தில் விழு முன்பே நாய் லபக்கென்று கௌவிக் கொண்டது. "இப்போ நாயைக் கூட இந்தியாவா பாகிஸ்தானா என்று பார்க்க வேண்டியிருக்கு" - ஒரு போர் வீரன் சொன்னான்.

"இன்னுமொரு பிஸ்கட்டை பேக்கிலிருந்து வெளியே எடுத்த ஹர்னாம்சிங், "நாய்கள் உட்பட பாகிஸ்தானிகள் எல்லோரையும் கொல்லுவேன்" சவால் விடுத்தான்.

"இந்தியா சிந்தாபாத்" ஒரு வீரன் குரல் எழுப்பினான்.

பிஸ்கட் சப்புவதை நிறுத்திக் கொண்ட நாய், வாலை அமுக்கிக் கொண்டு ஒரு புறம் ஒதுங்கி சுற்றும் முற்றும் பார்த்தது. "உனது நாட்டுக்கு ஏன் பயப்படுகிறாய். இதோ ஜுன்ஜுன்.... இன்னும் ஒன்று" என்றவாறு ஹர்னாம்சிங் சிரித்தான்.

0 0 0

இருட்டறைக்குள் விளக்கொளி பரவியது போல காலை புலர்ந்தது. டித்வாள் பகுதி மலைகள், பள்ளத்தாக்குகளிளெல்லாம் ஒளி பிரகாசித்தது.

மாதக் கணக்கில் யுத்தம் நடந்தபோதும் வெற்றி கிடைக்குமா என்பதில் எவருக்கும் நம்பிக்கையில்லை.

ஜமாதார் ஹர்னாம்சிங் தனது தொலை நோக்கியினால் சுற்றிவர பரிசீலித்தான். மலையின் மறு பக்கத்திலிருந்து புகை எழும்புவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் காண முடிந்தது. எதிரியும் காலை உணவு தயார் செய்வது புரிந்தது.

பாகிஸ்தான் படையில் சுபேதார் கான் தனது அடர்ந்த தாடியைக் கோதியவாறு டித்வாள் பிரதேச படத்தை பரிசோதித்தான். பக்கத்தில் வானொலியை இயக்கியவன், அடுத்த உத்தரவு என்னவென்று பிளட்டூன் கொமாண்டரிடமிருந்து அறிய முயற்சி செய்து கொண்டிருந்தான். சில அடி தூரத்துக்கப்பால் கல்லொன்றில் சாய்ந்திருந்த பஷீர் தனது ரை.ஃபிளை முன்னே வைத்துக்கொண்டுமெதுவாகபாடிக்கொண்டிருந்தான்.

"காதலியே என் வண்ணநிலவே
எங்கே இரவு தங்கினாய் நீ
எங்கே இரவு தங்கினாய் நீ..."

களிப்பிலே மிதந்தவன் மிக உற்சாகமாக உரத்துப் பாடினான். திடீரென சுபேதார் ஹிம்மத்கான், "எங்கே இரவு தங்கினாய் நீ" என்று கத்தியது காதில் விழுந்தது.

இது பஷீரிடம் கேட்ட கேள்வியல்ல. அங்கே வந்தநாயிடம் தான் அவ்வாறு கேட்டான் அவன். சில தினங்களுக்கு முன் எங்கிருந்தோ வந்த நாய், முகாமில் சந்தோஷமாக இருந்துவிட்டு நேற்றிரவு திடீரெனக் காணாமற் போயிற்று. செல்லாக் காசு போல எப்படியோ மறுபடி அது மீண்டும் வந்துள்ளது.

பஷீர் சிரித்தவாறு பாடத் தொடங்கினான்.
"எங்கே இரவு தங்கினாய் நீ
எங்கே இரவு தங்கினாய் நீ"
அது வாலை மட்டும் ஆட்டியது.

அதனை நோக்கி கல்லொன்றை எறிந்த ஹிம்மத்கான் "இந்த மட நாய்க்கு வாலாட்ட மட்டும்தான் தெரியும்" என்று புறுபுறுத்தான்.

"அட, அதன் கழுத்தில் என்ன அது?" பஷீர் கேட்டான்.

ஒரு போர் வீரன் நாயின் கழுத்தைச் சுற்றியிருந்த பட்டியைக் கழற்றினான். அதில் சிறிய காகித அட்டையொன்றுபொருத்தப்பட்டிருந்தது. அதிலுள்ள எழுத்தை வாசிக்கத் தெரியாத வீரன் "இதென்ன, என்னமோ எழுதியிருக்கு" என்று இழுத்துக் காட்டினான்.

அதனை வாங்கிய பஷீர் சிரமப்பட்டு வாசித்தான். "ஜுன்ஜுன் என்று இருக்கு"


பிரசித்தமான தனது தாடியைத் தடவிக் கொண்ட சுபேதார் ஹிம்மத்கான், "சிலவேளை இது ஒரு ரகசிய சங்கேதமாகவும் இருக்கலாம்.... அதில் வேறு என்ன இருக்கு பஷீர்?"

"இது ஒரு இந்திய நாய் என்றும் எழுதியிருக்குது"

"அதுக்கு என்ன அர்த்தம்" சுபேதார் ஹிம்மத்கான் கேட்டான்.

"ஒருவேளை அதுவும் ஒரு ரகசியக் குறிப்பாக இருக்கலாம்" பஷீரின் நெற்றியில்சிந்தனை ரேகைகள்.

"அந்த ஜுன்ஜுன் என்ற சொல்லில்தான் மர்மமிருக்கு" மற்றொரு போர் வீரனின் கருத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதில் என்னவோ இருக்கலாம்" சுபேதார் ஹிம்மத்கான் சிந்தனையில் ஆழ்ந்தார்.

பஷீர் மறுபடி மீட்டினான் "ஜுன்ஜுன்... இது இந்திய நாய்தான்"

தொடர்புக் கருவிகள் இடத்துக்கு விரைவாகச் சென்ற சுபேதார் ஹிம்மத்கான், தனது பிளட்டூன் கொமாண்டரை வயர்லெஸ்ஸில் அழைத்து, நாயின் திடீர் வருகை.... முன்தினமிரவு காணாமற்போனது....காலையில் மீண்டும் வந்ததுபற்றி விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?" குழம்பிப் போன பிளட்டூன் கொமாண்டரின் கேள்வி.

சுபேதார் ஹிம்மத் மீண்டும் தேசப்பட ஆராய்ச்சியில் இறங்கினார். நாய் எங்கிருந்து வந்தது அல்லது வந்திருக்கலாம் என்பதை கொமாண்டருக்கு விளக்க முனைந்தார். திடீரென ஒரு சிகரெட் பக்கெற்றின் துண்டைக் கிழித்தெடுத்த சுபேதார், "ஓகே... குர்முக்தியில் (சீக்கியர் பாஷையில்) எழுது" என்று கடதாசித் துண்டை பஷீரிடம் நீட்டினான்.

"என்ன எழுதுறது?"

"எதையாவது எழுது"

பஷீருக்கு யோசனை பிறந்தது. "ஓம்... 'ஷன் ஷன்'....அவங்களின் ஜுன்ஜுன்னுக்குப்பதிலாக நாங்கள் ஷன் ஷன் எழுதிவிடுவோம்"

"அதுதான் சரி" ஹிம்மத்கான் தலையசைத்தான்.

"அதுக்குக் கீழாகப் போடு...பாகிஸ்தான் நாய் என்று"

ஹிம்மத்கான் தன் கையாலேயே அந்தக் கடதாசியை நாயின் கழுத்தைச் சுற்றிக் கட்டினான்.

"இப்ப சரி, போ"

பின்னர் நாய்க்குச் சாப்பாடு கொடுத்தபடியே, "இங்க பார் நீ எங்கள் கூட்டாளி, துரோகியாகி விடாதே... துரோகத்துக்குத் தண்டனை மரணம் தான்" கண்டிப்பாகச் சொன்னான்.

வாலையாட்டிய நாய் உணவை விழுங்கியது. அதனைப் பிடித்து இந்தியப் படை இருந்த திக்கிலே விட்ட ஹிம்மத்கான் சொன்னான்:

"போய் இந்தச் செய்தியை நம்ம விரோதிக்குக் கொடுத்திட்டு வா.. இது உன் கப்டனின் உத்தரவு"

சிகரங்களுக்கிடையே மலைத் தொடர்களை ஊடறுத்து பள்ளத்தாக்கை நோக்கி நாய் ஓடியது.

தனது ரை∴பிளை கையில் எடுத்த ஹிம்மத்கான் வானத்தை நோக்கி வெடியொன்றைத் தீர்த்தான்.

அதிகாலையிலேயே வெடிச் சத்தம் கிளம்பியதனால் இந்தியப் படை சற்றே துணுக்குற்றது. சோம்பிப் போய்க் கிடந்த ஜமாதார் ஹர்னாம் சிங் திடீர் சுறுசுறுப்பாகி "சுடுங்கள்" என்று குரல் எழுப்பினான்.



**ஸதாத் ஹசன் மன்தோ** நாற்பத்தைந்து வயதாவதற்குள் இறந்த மற்றுமொரு இலக்கிய மேதை. இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் 1912ல் பிறந்தார். பாகிஸ்தானில் லாகூரில் 1955ல் இறந்தார்.

பள்ளிப் படிப்பில் உற்சாகமில்லாதவராக இருந்தார். பள்ளிப் பரீட்சைகளில் அவரால் தேர்ச்சி பெறவே முடியாமல் இருந்த பாடம் உருது. வேடிக்கை என்னவென்றால், அம்மொழியில் தான் சக்தி வாய்ந்த, சுயமான பல படைப்புக்களை அவர் தந்தார். அம்மொழியின் தேர்ந்த நடைச்சிற்பியாகவும் மிளிர்ந்தார்.

1940ல் மன்தோவின் முதல் கதைத் தொகுதி வெளிவந்தது. நிறைய நாடகங்களையும், கட்டுரைகளையும், மொழிபெயர்ப்பு நூல்களையும் தந்திருக்கிறார். சினிமாவுக்கும் எழுதுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

இந்தியாவின் திரைப்படத் தலைநகரமான பம்பாய் அவருக்கு மிகவும் பிடித்த வாழிடமாக இருந்தது. ஆனால், 1947 ஒகஸ்ட் 14ல் இந்தியா பிரிவினைக்குள்ளானதைத் தொடர்ந்து, மன்தோவும் தமது பெட்டி படுக்கைகளுடன் பாகிஸ்தானின் தலைநகரான கராச்சிக்கு கப்பலேற நேரிட்டது.

பிரிவினை அவரை வெகுவாகப் பாதித்தது. அனைத்து இந்திய, பாகிஸ்தானிய எழுத்தாளர்களையும் விட மன்தோ ஒருவருக்கே 1947ல் நிகழ்ந்த ரத்தம் தோய்ந்த சம்பவங்களை பேரிலக்கியமாக மாற்ற முடிந்தது. மதத்தின் பேரிலும் தேசபக்தியின் பேரிலும் அவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக் கொடுமைகள் பற்றி உணர்ச்சிவசப்படாமல் பக்கஞ் சாராமல் விலகி நின்று அவரால் எழுத முடிந்தது.

செதுக்கிவைத்த நம்பிக்கைகளுக்கு எதிராகவும், நியாயமற்ற சமூக மரபுகள், பொய்மைகளை மறுத்தும் போராடினார் மன்தோ. இறந்து நாற்பது வருடங்களுக்குப் பின்னும் அரச நிறுவனங்களுக்கும், பொது ஒழுக்கங்களின் காவலர்களுக்கும் அவர் இன்றும் தர்மசங்கடங்களை அளித்துக் கொண்டிருப்பவராக இருக்கிறார்.

இரு புறமிருந்தும் அரை மணித்தியாலத்திற்கு பரஸ்பர வெடிகள் தீர்க்கப்பட்டன. காலத்தை விரயமாக்கும் முயற்சி இது. கடைசியில் ஹர்னாம்சிங் "சரி, இனிப் போதும்" என்று உத்தரவிட்டான். தனது நீண்ட தலைமுடியைச் சீவியபடி கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்த வண்ணம், "ஜுன்ஜுன் நாய் எங்கே" என்று பண்டாசிங்கிடம் விசாரித்தான்.

"நாய்க்கு பட்டர் ஜீரணிப்பதில்லை என்றொரு பிரசித்தமான பொன்மொழி இருக்கு" பண்டாசிங் தத்துவார்த்தமாகச் சொன்னான்.

காவல் வேலையில் ஈடுபட்டிருந்த போர் வீரன் ஒருவன் "இதோ நாய் வருது" என்று கத்தினான்.

"என்ன?" ஜமாதார் ஹர்னாம்சிங் கேட்டான்.

"என்ன அதுக்குப் பேர்.... ஜு... ம்.. ஜுன் ஜுன் அதுதான் வருது" வீரன் மறுமொழி பகர்ந்தான்.

தொலைநோக்கிக் கருவியை அவனது கையிலிருந்து வாங்கிப் பார்த்த ஜமாதார் ஹர்னாம் சிங் "ஓம்... சரி... அதேதான்... அதன் கழுத்தில் என்னவோ தொங்குது.... ஆனா..... அது பாகிஸ்தான் மலைப் பகுதியிலிருந்துதான் வருகுது.... வேசி மகன்...." என்று உறுமியவாறு ரை∴பிளால் இலக்குப் பார்த்து வெடிவைத்தான். அது நாயின் அருகேயிருந்த பற்றையில் பட, நாய் ஸ்தம்பித்து நின்றது.

இந்த வெடிச் சத்தம் ஹிம்மத்கானின் காதிலும் விழுந்தது. அவன் தனது தொலைநோக்கியை எடுத்துப் பார்த்தான். நாய் திரும்பி ஓடி வருவது தெரிந்தது.

"வீரமுள்ள எவனும் சண்டையைக் கண்டு பயந்து ஓட மாட்டான். போ, முன்னேறு... காரியத்தை முடி" நாயைப் பார்த்துக் கத்தினான் அவன். பயமுறுத்துவதற்காக அது வரும் திசையை நோக்கி வெடியொன்று வைத்தான்.

அதே நேரம் ஹர்னாம் சிங்கின் வேட்டும் பறந்தது. அது நாயை உராய்ந்தவாறு சென்றது. செவிகளைக் குலுக்கியவாறு நாய் துள்ளிப் பாய்ந்தது. ஹிம்மத்கான் வைத்த வேட்டும் அத் திசையில் மோதியது.

இரண்டு போர் வீரர்களும் ஒரு நாயை அச்சமூட்டுவதற்காக தொடர்ந்து வெடி வைத்தார்கள். பயந்து நடுங்கிய நாய் சுற்றிச் சுழன்று வந்தது.

ஹிம்மத்கானும் ஹர்னாம்சிங்கும் கெக்கலித்துச் சிரித்தார்கள்.

நாய் ஹர்னாம்சிங்கை நோக்கி ஓட, அவன் தூஷண வார்த்தைகளைக் கொட்டியவாறு வேட்டு வைத்தான்.

ஒரு குண்டு நாயின் காலைப் பதம் பார்த்தது. நாய் வேதனையில் ஓலமிட்டபடியே ஹிம்மத்கான் பக்கமாக ஓடியது.

அவனும் நாயைப் பயமுறுத்துவதற்காக வேட்டுகளைத் தீர்த்தான். "பயப்படாதே காயமடைந்ததற்காக உன் பொறுப்பைக் கைவிடாதே போ... போ..." பாகிஸ்தானிய வீரன் கத்தினான்.

மறுபுறம் திரும்பிய நாய் காயமடைந்த காலை இழுத்தவாறு ஹர்னாம்சிங்கை நோக்கி ஓடியது.

ரை∴பிளைத் தூக்கிய ஹர்னாம்சிங் சரியான இலக்கில் சூடு வைக்க நாய் சுருண்டு விழுந்து செத்தது.

"அப்பாவி நாய், ஒரு வீரனாக இறந்து போச்சுது" சுபேதார் ஹிம்மத்கான் பெருமூச்சு விட்டான்.

"அது ஒரு நாய் போல செத்திட்டுது" இன்னும் சூடு தணியாத ரை∴பிளின் பிடியைத் தடவியவாறு ஜமாதார் சிங் முணுமுணுத்தான். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்திற்கு ஓர் ஆடு

ஒரு ஊரில் சற்று வசதியாக வாழ்ந்த ஒரு பெரியவருக்கு மூன்று மகன்மார்கள் இருந்தார்கள். அந்தப் பெரியவர் இறக்கும் தறுவாயில் தனக்குச் சொந்தமாக இருந்த 17 ஆடுகளை தன் மூன்று மகன்மாரிடமும் கொடுத்து நான் இறந்த பின்பு அந்தப் பதினேழு ஆடுகளையும் பிரித்துக்கொண்டு சண்டையிடாமல் வாழுங்கள் எனக் கூறினார். அத்தோடு அந்த ஆடுகளை என்ன அடிப்படையில் பிரித்துக் கொள்ளவேண்டும்என்றமுறையையும்எடுத்துச்சொல்லிவிட்டுகண்ணை மூடினார்.

அப்பா 17 ஆடுகளைப்பிரிப்பதற்கு அவர் கூறிய விதிமுறை இதுதான். மூத்தவனுக்கு மொத்த ஆடுகளில் 1/2 பங்கும், இரண்டாமவனுக்கு மொத்தஆடுகளில் 1/3 பங்கும், மூன்றாமவனுக்குமொத்தஆடுகளில் 1/9 பங்கும்எடுக்கும்படிகூறினார். தந்தையின் அறிவுறுத்தலின்படி 17 ஆடுகளைப் பகிரும் முயற்சியில் அண்ணனும் தம்பிமாரும் இறங்கினர். எவ்வளவு முயன்றும் மூவராலும் அவ்வாடுகளைப் பகிர்ந்துகொள்ள முடியவில்லை.



மூவரும் ஒருவரோடொருவர் சண்டையிடத் தொடங்கினார்கள். அவர்களுடைய சண்டை பின்னர் ஊர்ச் சண்டையாக மாறியது. ஊரிலுள்ளவர்கள் அண்ணன்தம்பிகளின்பின்னால்ஒவ்வொருகுழுக்களாகப்பிரிந்து ஊர் முழுவதுமே ஒரே கலவரம். உணவில்லாமல் ஆடுகளெல்லாம் குய்யோமுறையோ என்றுகத்தின. குழுச் சண்டையால் பலர் உயிரிழந்து பலருக்கு பலத்த காயங்களும் ஏற்பட்டன.

அவ்வூரிலே எவருமே கவனிக்காது ஒதுக்கிவிடப்பட்ட ஓர் ஏழைக் குடியானவன் ஒரு குடிசையிலே வாழ்ந்து வந்தான். அவனிடம் ஒரே ஒரு ஆடு மட்டும் இருந்தது. முழு ஊர்ச்சனங்களுமே அண்ணன் தம்பிமார்களுக்குப் பின்னால் இணைந்து ஒருவரோடொருவர் மோதி ஊரையே எரித்துக் கொண்டிருந்ததைக் கண்டு அக்குடியானவனும் மிகக் கவலையடைந்தான்.

அக்குடியானவன் தன் குடிசையைவிட்டுவெளியேவந்துதனதுஆட்டை இழுத்துக்கொண்டு அம்மூன்று அண்ணன் தம்பிமார்களைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தான். அக்குடியானவனைக் கண்ட ஊராரெல்லாம் "எங்கேடா போகிறாய்" எனக் கேட்டனர். அதற்கு அக்குடியானவன் இம்மூன்று அண்ணன் தம்பிமாரின் பிரச்சினையைத் தீர்த்து வைத்து ஊரிலே சமாதானத்தை ஏற்படுத்த என்னாலான உதவியைச் செய்யப்போகிறேன் எனக் கூறினான்.

இதைக் கேட்ட ஊர்ச் சனங்களெல்லாம் அவனைப் பார்த்து கைகொட்டிக் கேலி செய்தனர். சிலர் அவன் மீது கற்களை வீசி எறிந்து துன்புறுத்தவும் செய்தனர்.

"போடா நீயும் உன் ஆடும் உன் சமாதான முயற்சியும். போயுன் வேலையைப் பார்" எனத் துரத்தியடித்தனர். ஆனால் குடியானவனோ சற்றும் மனம் தளராமல் தன் திசையை நோக்கி நடந்தான்.

அம்மூன்று சகோதரர்களையும் சந்தித்த குடியானவன் என்னிடம் ஒரு ஆடு இருக்கின்றது. இந்த ஆட்டையும் உங்களுடைய 17 ஆடுகளுடன் சேர்த்துக் கொண்டு உங்கள் தந்தை சொன்னபடி பிரித்துக் கொண்டு சந்தோஷமாக இருங்கள். ஊரிலே கலவரம் ஓய்வதற்கு வகை செய்யுங்கள் எனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

இன்னொரு ஆடு அதிகமாகக் கிடைத்த சந்தோஷத்தில் மூன்று சகோதரர்களும் ஒரு கணம் தமது சண்டையை மறந்துவிட்டு தமது 17 ஆடுகளுடன் குடியானவனுடைய ஆட்டையும்சேர்த்து 18 ஆடுகளையும் தந்தையார் கூறியபடி பிரித்தனர்.

என்னே புதுமை! பிரச்சினையில்லாமல் ஆடுகளைப் பிரிக்கக்கூடியதாக இருந்தது. தந்தை கூறியபடி பிரித்ததில்....

முதலாமவனுக்கு 1/2 பங்கும், அதாவது 18 இன் 1/2 = 9 ஆடுகள்
இரண்டாமவனுக்கு 1/3 பங்கு, அதாவது 18 இன் 1/3 = 6 ஆடுகள்
மூன்றாமவனுக்கு 1/9 பங்கு, அதாவது 18 இன் 1/9 = 2 ஆடுகள்
--------
17 மொத்தம்
--------

என்ற வகையில் பிரச்சினையின்றிப் பிரிபட்டன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த குடியானவன் "தம்பிமார்களே இப்போது உங்கள் மொத்த ஆடுகளைக் கூட்டிப் பாருங்கள்" என்றான். என்ன புதுமை, அவர்களது மொத்த ஆடுகள் 17 ஆக இருந்தன. "அப்படியானால் எனது ஆட்டை என்னிடமே தாருங்கள்" என தனது ஆட்டை இழுத்த வண்ணம் எந்தச் சலனமும் இன்றி தனது குடிசையை நோக்கி நடையைக் கட்டினான். ஊர்ச் சனங்களும் அந்த அண்ணன் தம்பிகளும் வாயைப் பிளந்த வண்ணம் அந்தக் குடியானவன் சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்றனர். ●




இரண்டுபாம்புகள் ஒன்றையொன்றுவால்பகுதியிலிருந்து விழுங்கத் தொடங்கினால் - கடைசியில் எஞ்சுவது......?

**எதிலும் ஒரு வித்தியாசம் வேண்டும்...**
**விளம்பரத்திலும்தான்!.**
**வித்தியாசமாக விளம்பரம் செய்தால் வியாபாரத்தில் வித்தியாசம் தெரியும்**
**வித்தியாசத்தை விரும்பும் உலகம் இது.**
**விபரங்களுக்கு: 454283, 422828,**
**ஃபக்ஸ்: 320677**

அமுது

இல் விளம்பரம் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங் ஃபூ ஒரு வாழ்க்கை முறை 4



道功夫

# நீண்ட தூர சண்டை முறை சோலி:பா

நீண்ட தூரத் தாக்குதலுக்குப் புகழ் பெற்ற இந்த வன்மை வகைக் குங் ஃபூ கலை சுமார் 3000 வருடங்களுக்கு முன்னர் சோலீ ஃபா என்னும் அரசர் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டது. வன்மை முறைக்கு வலுவூட்டிப் புத்துயிர் கொடுக்கும் வகையில் இதர வன்மை முறைகள் பலவற்றின் சிறப்பம்சங்கள் பலவற்றை உள்வாங்கி உருவாக்கப்பட்டுள்ளது. இம்முறை மிகுந்த ஆற்றலைத் தருகிறது. இதனை அண்மைய காலத்தில் **லீ குவாங் ஹுங்** என்ற குரு மிகப் பிரபல்யமடைய வைத்தார்.

சோலீ ஃபா சண்டை நுட்பங்களை மட்டுமன்றி உடல் ஆரோக்கியத்தைப் பேணவும், மனதை வளப்படுத்தவும் கூடிய கலை.

இதில் சுழற்சி இயக்கங்கள் விசேடத் தன்மை வாய்ந்தவை. பாய்ச்சல்களும், உதைகளும் இங்கு சிறப்பானவை.

மேலுடம்பு, கீழுடம்பு ஆகிய இரு பகுதிகளுக்கும் தேர்ச்சி தருகின்ற இக்கலை மிக மூர்க்கமானதும் வேகமானதும் வீரியம் மிக்கதுமாகும்.

சோலீ ஃபா வெற்றுடம்புக்கான சண்டை முறையாக மட்டுமன்றி ஆயுதங்களுடனான சண்டை முறையாகவும் விளங்குகின்றது. சோலீ ஃபா ஆயுதங்கள் பல வடிவமைக்கப் பட்டுள்ளன. சோ லீ ஃபா ஸ்பின்னிங் ஸ்பியேர்ஸ் (இரு முனை கொண்ட சோலீ ஃபா ஈட்டி) இதில் சாதாரணமாகப் பாவிக்கப்படும் பிரசித்தி பெற்ற ஆயுதமாகும்.



## பெயர் மயக்கமும் பித்தலாட்டமும்

சுவாரசியமான சம்பவம் ஒன்றை இங்கே சொல்கிறேன். சுவாரசியமாக இருந்தாலும் வேதனைக்குரியது. எப்படி இங்கே குங்ஃபூவைச் சொல்லி ஏமாற்றுக்கள் நடக்கின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

பிரபல ஹோட்டல் ஒன்றில் குங் ஃபூ டெமன்ஸ்ரேஷன் ஒன்றை நான் செய்து காண்பித்தேன். பல ரசிகர்கள் ஒட்டோகிராப்பில் கையொப்பம் வாங்க நின்றார்கள். அவர்களில் ஒரு பெண்ணை நான் உடற்பயிற்சி செய்யும் ஜிம் உரிமையாளர் "இவளும் ஒரு குங் ஃபூ மாணவி" என எனக்கு அறிமுகப்படுத்தினார்.

அந்தப் பெண், தான் ஒரு நடிகையென்றும், உலகெங்கும் பரவிவரும் வூசூ, கௌசூ எனும் இரு புதிய குங்ஃபூ சண்டைக் கலைகளைக் கற்று வருவதாகவும் கூறினார். அத்துடன் இலங்கையின் நிஞ்ஜா படமொன்றில் தான் வூசூ மற்றும் கௌசூ முறைகளில் சண்டைக் காட்சிகள் செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் கூறியது சுவாரசியமாகப் படவே "நீங்கள் எங்கே பயில்கிறீர்கள்?" எனக் கேட்டேன். தான் இலங்கையிலுள்ள வூசூ, கௌசூ சர்வதேச குங்ஃபூ அஸோஸியேஷன் ஒன்றில் பயில்வதாகக் கூறினார்.

நல்லதென்று கூறி அவளுக்கு விடை கொடுத்தேன். ஆனால் விடயம் என்ன தெரியுமா? வூசூ, கௌசூ என்ற இரண்டு பதங்களதும் பொருள் ஒன்றேதான். (சம்சாரம் என்பதும் மனைவி என்பதும் ஒரே பொருள் போல). அவற்றின் பொருள் '**சீனத் தற்காப்புக் கலை**' என்பது தான். இரண்டும் இரு வேறு கலைகளல்ல. சீனத் தற்காப்புக் கலை என்பது ஒரு பொதுப் பெயர் - குங் ஃபூ ஒரு சீனத் தற்காப்புக் கலை. குங்ஃபூ என்றால் நிறைவான திறமை என்று அர்த்தம். குங்ஃபூவில் வூசூ என்றோ கௌசூ என்றோ புதிய முறை ஒன்று உள்ளடங்க முடியாது.

இப்போ இதன் வேடிக்கை புரிகிறதல்லவா? இலங்கையருக்கு இந்தச் சீனச் சொற்களின் பொருள் புரியாதென்பதால் கேள்விப்பட்ட சொற்களையெல்லாம் விருப்பப்படி எழுதி, குங் ஃபூ கற்பிக்கிறோம் என்கிறார்கள்.

இந்த நடிகை கூறியதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் தான் நிஞ்ஜா படத்தில் வூசூ, கௌசூ சண்டை புரிந்தாராம். நிஞ்ஜா என்பது ஜப்பானியக் கலை. மறைதல் (*Disappearance*) என்பது அதன் பொருள். ஜப்பானியக் கலை ஒன்றைச் சித்தரிப்பதாகக் கூறும் படத்தில் சீனக் கலைகளைப் புரிந்ததாகத் தான் கூறுவது நகைப்புக்குரியதென்பதே அப்பெண்ணுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவளது தவறல்ல அது. அப்படியேதான் அவளுக்கு நம்ப வைக்கப்பட்டிருக்கிறது.

## குங் ஃபூ பதங்கள்

இதனால் இத்தகைய பெயர் மயக்கங்களை நீக்கும் பொருட்டு சிறு விளக்கமொன்றை இம்முறை தருகிறேன்.

சீனத் தற்காப்புக் கலை என்பதை வூசூ அல்லது கௌசூ என்று நாம் சீன மொழியில் கூறுவோம். அத்தகைய ஒரு தற்காப்புக் கலை தான் குங் ஃபூ.

இக்கலையின் பிறப்பிடம் சீனாவின் சோலின் டெம்பிள் (*Chaolin Temple*) குங் ஃபூவில் இரண்டுவகைப் பள்ளிகள் உள்ளன. ஒன்று தென் சோலின் (*South Chaolin*) மற்றையது வட சோலின் (*North Chaolin*). தென் சோலின் பள்ளியானது மேல் உடம்பு (கை) நுட்பங்களை பிரத்தியேகமாகக் கொண்டது. வட சோலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி கீழ் உடம்பு (கால்) நுட்பங்களைப் பிரத்தியேகமாகக் கொண்டது. அதனால் தென் சோலின் பள்ளியின் கலைகளை 'நன் சென்த்' (*Southern Fist* - தென் முஷ்டி) எனவும், வட சோலின் பள்ளியின் கலைகளை 'பெய்துவாய்' (*Northern Kick* - வட உதை) எனவும் கூறுவர்.

தென் சோலின் பள்ளியைச் சார்ந்த குங் ∴பூ கலைகளுக்கு உதாரணமாக தாய் சீ, லோய் குங், பா குவா ஜங்க், ஷின் ஈ சென்த், சீ குங், ஈ ஜிம் போன்றவற்றைக் கூறலாம். வட சோலின் பள்ளியைச் சார்ந்த குங் ∴பூ கலைகளுக்கு சோ லீ ∴பா, வைட் கிறேன், லோ ஹப் கியூன், வின் சன் சென்த் போன்றவை உதாரணங்கள்.

இவ்விரு பள்ளிகள் ஒவ்வொன்றிலும் மென்மை, வன்மை என்ற பிரிவுகள் உண்டு.

அடிப்படையில் இவ்வாறான பிரிவுகள் இருந்தாலும் இவ்விரு நுட்பங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்தும், ஒத்துழைத்தும் செயற்படுவன.

இந்த விளக்கத்தை அறிந்து கொள்வது இச் சீனச் சொற் பதங்கள் தரும் மயக்கத்தை தெளிவிக்கவும், ஏமாற்று முயற்சிகளை அடையாளம் காணவும் உதவும்.


84ன் மிஸ் சிறீலங்கா சன்ராவிற்குப் பயிற்சி...




95ன் மிஸ் சிறீலங்கா சிவானி வாசகத்திற்குப் பயிற்சி...

## தேநீர் விளம்பரமும் குங் ஃபூவும்

இன்னொரு வேடிக்கையான உதாரணத்தைச் சொல்கிறேன். இலங்கையில் சுவரொன்றில் ஒட்டியிருந்த போஸ்டர் ஒன்று என் கவனத்தை ஈர்த்தது. அதில் புருஸ்லீயின் படம் ஒன்று போடப்பட்டிருந்தது. கீழே சீன வாக்கியமொன்று இருந்தது. இவ் வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு என்பது போல, **'புருஸ்லீயின் சீன குங் ∴பூ இங்கே கற்பிக்கப்படும்'** என எழுதப்பட்டிருந்தது. அதில் எழுதப்பட்டிருந்த சீன வாக்கியத்தை நான் வாசித்த போது வியப்படைந்தேன். 'லீ ஷாங் லொங் ஜொய் ஒய் த யெங் லிவ் ஹாய் சுங்கோசா' என்பதே அவ் வாக்கியம். இதன் பொருள் என்ன தெரியுமா? 'லீ ஷாங் லொங்' அதாவது 'புருஸ்லீ விரும்பிக் குடிக்கும் பானம் சைனீஸ் தேநீர்!' என்பதே. (லீ ஷாங் லொங் என்பது புருஸ்லீயின் சீனப் பெயர்) என்ன நடந்துள்ளதென்றால், சீனாவில் தேநீர் விளம்பரமொன்றுக்கு புருஸ்லீயின் படத்தைப் போட்டு அச்சடித்த போஸ்டரொன்றை எடுத்து கீழே ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தமது வசனங்களைப் போட்டுள்ளார்கள். சீன மொழி தெரியாத இலங்கையருக்கு உண்மையிலேயே இது புருஸ்லீயின் கலையைப் பயிற்றுவிக்கும் சீனத் தொடர்புடைய குங் ∴பூ பள்ளியே என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதற்காக.

ஹொங்கொங்கில் புருஸ்லீயை அறிந்தவர்கள் பலர் உள்ளார்கள் (நான் உட்பட). ஆனால் புருஸ்லீயிடம் நேரடியாகப் பயிலாத எவரும் புருஸ்லீயின் குங் ∴பூவை தாம் கற்பிப்பதாகக் கூறுவதில்லை. நாம் எவரிடமும் பயின்றோமோ அந்த குருவைத் தான் எப்போதும் குறிப்பிடுவோம். ஆனால் புருஸ்லீயைக் கண்டிருக்காத பலர் தாம் ஏதோ அவரைப் பின்பற்றுவதாகக் கூறி அவரது படங்களைத் தமது பிரசாரத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள். அத்துடன் பலர் கராட்டே கலைக்குக்கூட புருஸ்லீயின் படத்தைப் போடுகிறார்கள். உண்மையில் புருஸ்லீ பயின்றதும் பயிற்றுவித்ததும் படங்களில் நடித்துக் காண்பித்ததும் குங் ∴பூ கலை. எனவே நாம் சரியான ஒன்றைத்தான் பயில்கிறோமா என்பதில் அவதானமாக இருக்க வேண்டும்.

இவ்விடத்தில், இன்னும் சிலரது சந்தேகங்களையும் தீர்த்து வைப்பது பொருத்தமானது. சிலர் குங் ∴பூவையும் கராட்டேயையும் வைத்துக் குழம்புகிறார்கள். வேறு சிலர் கராட்டேயின் உயர்ந்த நிலைதான் குங் ∴பூ எனக் கருதுகிறார்கள். சிலர் குங் ∴பூ பழைய முறை கராட்டே புதிய முறை என நினைக்கிறார்கள். இன்னும் சிலர் குங் ∴பூ விலங்குகளின் செயற்பாட்டை ஒத்தது, கராட்டே மனிதர்களின் செயற்பாட்டை ஒத்தது எனக் கருதுகிறார்கள்.

உண்மை இதுதான்.... குங் ∴பூ சீனத் தற்காப்புக்கலை. கராட்டே ஜப்பானியதற்காப்புக்கலை. கராட்டே என்றால் "வெற்றுக் கை" என்று அர்த்தம். குங் ∴பூவிலிருந்துதான் கராட்டே உருவானது. குங் ∴பூவிற்கும் கராட்டேயிற்கும் பல வேறுபாடுகள் உண்டு.. முக்கியமாக குங் ∴பூ தாவோயிஸத்தை அடிப்படையாகக் கொண்டது. குங் ∴பூ புராதனமான சீனக் கலை. விலங்குகளது அசைவுகள் பலவற்றை மனித இயக்கத்துக்குப் பக்கபலமாக்கி உரமூட்டியுள்ளது.

குங் ∴பூ காலத்துக்குக் காலம் நவீனப்படுத்தப்பட்டு வளர்ந்து வருகிறது. புருஸ்லீ கூட புதிதாக ஜெய் சென் தோ (ஜப்பானிய உச்சரிப்பில் 'ஜெட் குண் டோ') எனும் ஒரு குங் ∴பூ முறையை பல்வேறு குங் ∴பூ முறைகளிலிருந்தும் வகுத்து அறிமுகப்படுத்தியிருந்தார். ●

அடுத்த இதழில் சந்திக்கும் வரை
அன்புடன் விடைபெறும் - **பீல்லீ வொங்**

## பொறுமையே முதற் பாடம்

### குங்ஃபூ பள்ளி அனுபவம்

எங்கள் குங் ∴பூ பள்ளிக்கூடத்தில் சேர ஒருவன் வருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனை அழைத்து எமது குரு கதைப்பார். கதைக்கும்போதே அவனது பண்பு, நடை, உடை, பாவனை, நோக்கங்கள், ஆர்வம், அவசரம் எல்லாவற்றையுமே எடைபோட்டுக் கொள்வார். குருவுக்கு மாணவனைப் பிடித்துக்கொண்டால் மறுநாள் வரும்படி கூறுவார். மறுநாள் அவன் வந்து காத்திருப்பான். குரு நீண்ட நேரத்தின் பின் வந்து, "ஆ! வந்து விட்டாயா?" என்பதுபோல் தலையாட்டிவிட்டு, ஏதேனும் ஒரு குங் ∴ பூ வீரர் பற்றிய புத்தகமொன்றை எடுத்து படிக்கும்படி கொடுத்துவிட்டுப் போய்விடுவார். பின்னர் வெகு நேரம் கழித்து திரும்பிவந்து பார்த்துவிட்டு, "சரிபோய் வா" என்று அனுப்பிவிடுவார். இவ்வாறே தினமும் வருவதும் 'பௌ' பண்ணிவிட்டுப் போவதுமாக இருக்கும்.

நாளடைவில் மாணவனுக்கு சலிப்பு ஏற்பட்டுவிடும். தனது நேரத்தை வீணடிப்பதாகக் கோபமும்கூட வரக்கூடும். எப்போது அவனுக்கு அந்தக் கோபம் வருகிறதோ அத்தோடு அவன் பயிற்சிக்கு லாயக்கற்றவனாகி விடுகிறான்.

உண்மையில் குரு சோதிப்பது அவனது பொறுமையையே. மிகப் பொறுப்பு வாய்ந்த, சக்தி மிக்க கலையொன்றைக் கற்பதற்குரிய அடிப்படைத் தகுதியான பொறுமை அவனுக்கு உள்ளதா என்பதையே குரு அவதானிப்பார். எவ்வளவு காலமானாலும் குருவின் நம்பிக்கையைப் பெற்று இக் கலையைத் தான் பயில வேண்டும் என்று எண்ணுகின்ற, நிதானமுடைய ஒருவனாலேயே இதை முறையாகக் கற்கவும், கற்றபின் சரியாகப் பின்பற்றவும் முடியும். ஆரம்பிப்பதற்கே அவசரப்படுபவனும், கோபப்படுபவனும் இக் கலையை பூரணமாகக் கற்கவும் மாட்டான், சிறு விடயத்திற்கே கோபப்பட்டு கற்றவற்றைக்கூட துஷ்பிரயோகம் செய்யவும் தயங்கமாட்டான்.

எனவேதான், குங் ∴பூ பள்ளியில் முதற் பாடம் பொறுமை. இதற்கு, மாணவனுக்கே தெரியாமல் குருவால் வைக்கப்படும் இச் சோதனையில் தேறுபவன்தான் மற்றைய பயிற்சிகளுக்குச் செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்காத பொறாமை கிரிக்கெட்

அந்தக்கசப்பான சம்பவத்தை எவரும் இலேசில் மறந்து விடுவதாக இல்லை.

கடந்த ஜனவரி 23ந் திகதி.

அடிலெய்டில் நடைபெற்ற இங்கிலாந்துக் கெதிரான carlton and united உலகத்தொடர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில்

CEAT கணிப்பீட்டின்படி இன்றைய கிரிக்கெட்டின் முதலாமிட நாயகன் முத்தையா முரளீதரனின் பந்து வீச்சு, விதிகளுக்கு முரணானது என (அவுஸ்திரேலிய) நடுவர் Rose Emorson குறை கண்டமை இலங்கை ரசிகர்களைமட்டுமல்லாது சர்வதேச குறிப்பாக ஆசிய ரசிகர்களை வெகுவாக அதிர வைத்திருக்கிறது.

முரளீதரன் நேராகப் பந்து வீசாமல்.... பந்தை எறிகிறார் (*Throw*) என்றே அவரது இரண்டாவது ஓவரின் இரண்டாவதுபந்துவீச்சில் எமர்ஸன் குறைகண்டார்.

இந்த அபாண்டமானபழியை- எமர்ஸனின் பலாத்கார ஏவுகணையின் உக்கிரத்தைப் பொறுக்க முடியாதஅணியின்த்லைவர் அர்ஜ"னரணதுங்க, எமர்ஸனுக்கு எதிராக கடும் ஆட்சேபம் தெரிவித்ததோடு, தனது அணியினரோடு களத்தை விட்டு வெளி யேறவும் முற்பட்டு, கடைசியில் *Match Refree* பீட்டர் வண்டர் மேர்வினது வேண்டுதலுக்கி ணங்க தொடர்ந்து போட்டியில் பங்கேற்கும் நிலை உருவானது.

நடுவர் ரோஸ் எமர்ஸனின் இந்த விதண்டாவாதப் போக்கினால் போட்டி 12 நிமிடங்கள் அளவு இடை நிறுத்தப்பட்டு ஆயிரக் கணக்கான அரங்கப் பார்வையாளர்களும் லட்சக்கணக்கான தொலைக்காட்சி ரசிகர்களும் நெஞ்சு பொறுக்காமல் கதி கலங்கிப் போயினர்....

இறுதியில் சர்ச்சைக்குரிய முரளியின் துடுப்பாட்டத்திலேயே இலங்கை குறித்த போட்டியில் இங்கிலாந்தை வெல்ல நேரிட்டது என்பது மனதுக்கு இதமாக இருந்த போதும்....

ஏனோ எமர்ஸனின் ஏவுகணை ரணம், ஒவ்வொரு ரசிகர்களுக்குள்ளும் முரளிதரன் உட்பட்ட அணியின் அனைத்து வீரர்களுக்கும் வலியை - வேதனையை மிச்சம் வைத்திருக்கத் தான் செய்தது, செய்கிறது.

இத்தனைக்கும் இது சர்வதேச ரீதியாக முரளியின் சுயபலம் மற்றும் மனோதிடத்தை பாதித்த இரணடாவது சம்பவமாகும். இதற்கு முன்னர் - 1995-96ல் இலங்கை அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த போது இதே ரோஸ் எமர்ஸன் மற்றும் டெரல் ஹெயார் ஆகியோர் முரளிதரனின் பந்துவீச்சில் குறை கண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இதுவே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்ட முதல் சர்ச்சை.

அதே நேரம்,

ஆரம்பத்தில் *Darrel Hair* டெஸ்ட் போட்டியொன்றில் பந்து வீசிய முரளியை பிழையான பந்து வீச்சாளர் என்று விமர்சித்து சர்வதேசப் புரளியை ஏற்படுத்தியதோடு, *Rose Emorson* ஒரு நாள் போட்டி சார்பாக முரளியின் பந்து வீச்சில பிழையிருப்பதாகச் சொன்னார்.

மேற்படி குற்றப் பிரேரணை விவகாரம் சூடு பிடித்து சர்வதேச கிரிக்கெட் பேரவை வரை சென்றதோடு, முரளிஜப்பானுக்கு அனுப்பப்பட்டு பிறப்பிலேயே இருக்கும் அவரது முழங்கை வளைவு பற்றிய அறிக்கை ஜப்பான் டொக்டர்களால் கிரிக்கெட் பேரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

முரளியின் பந்து வீச்சு அசைவுகள் ஒளிப்பதிவு நாடாவில் பல கோணங்களில ஆராயப்பட்டு...




தோழனுக்காக தலையைக் கொடுக்கும் தலைவன் அர்ஜ"னா

விபரங்கள் முன் வைக்கப்பட்டதோடு இந்தியாவின் பிரபல கிரிக்கட் விரர் சுனில் கவாஸ்கரும் முரளிக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்.,

கடைசியாக சர்வதேச கிரிக்கட் பேரவையின் விசேட குழு முரளியின் பந்து வீச்சு நேர்மையான தன்மை கொண்டது என்று சான்றிதழும் வழங்கி....

## பொறாமையின் உச்சத்தில் அவுஸ்திரேலியா

ஆக,

அந்த விகாரமான விவகாரம் தெளிவான உறுதியான ஒரு தீர்ப்புடன் அப்போதே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின் முரளிதரன் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகச்சிறந்த சுழல்பந்து வீச்சாளரானார்.

இப்போது என்னடா என்றால்.....

வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாய், மீண்டும்-

ரோஸ் எமர்ஸன் முரளியைக் குற்றம் கண்டிருக்கிறார்.

இது எந்த விதத்தில் நியாயம் ? எப்படிச் சரி? என்று சிந்திக்கும்போது,

முரளிமீதுகொண்டகுரோதம்,கறுப்புத்தோல் கொண்டவர்கள் மேல் வெள்ளையினத்தவர்கட்கு இயல்பாகவே உள்ள உச்சக்கட்டப் பொறாமை, அவுஸ்திரேலியாவின் சேர்ன் வோர்னை விடவும் முந்திச்சென்ற முரளியின் பந்து வீச்சுப் பலம் எல்லாம் ஒன்று சேர்ந்து ரோஸ் எமர்ஸனை முரளியின் மீது குற்றம் சுமத்தத் தூண்டியிருக்கிறது என்று கூறினால் தப்பில்லை

இது வெறுமனே ஆக்ரோசமான எழுத்து வரிகளல்ல.

சர்வதேச கிரிக்கெட் அவதானிகள்- ஆலோசகர்களின்- சுயமான- தெளிவான அபிப்பிராயம் இது.

முரளியின் சுழல்பந்து வீச்சுக்கு தாக்குப் பிடித்து முகம் கொடுக்கமுடியாத அவுஸ்திரேலியர்கள் இந்த சின்னத்தீவின் கறுப்புவீரர்களிடம் தொடர்ந்து தோற்றுப் போவதை சகிக்க முடியாததால் டெரல் ஹெயார் ,ரோஸ் எமர்ஸன் போன்றோரை முன்னுக்குத் தள்ளி முரளியை கிரிக்கெட் உலகிலிருந்தே புறம் தள்ளிவிட முயன்றதே மேற்படி 95- 96 சம்பவம் என்று இன்றும் சர்வதேச அவதானிகள் கூறுகின்றனர்.

இக்கருத்தை கிஞ்சித்தும் பிழை என்று கூற முடியாதளவுக்கு ரோஸ் எமர்ஸனின் கடந்த ஜனவரி மாதச் செயற்பாடு அமைந்திருக்கிறது.

தவிர பிரபல 40 சர்வதேச நடுவர்களுக்கு மத்தியில் பந்து வீசி விக்கட்டுகள் பலவற்றை சரித்துள்ள முரளிதரனின் பந்து வீச்சில் உலகின் தலைசிறந்த நடுவர்களான டிக்கி பேர்ட், டேவிட் ஷெப்பர்ட் போன்றோரே குறை காணாத விடத்து சுண்டைக்காய் ரோஸ் எமர்ஸன் குறை கண்டிருப்பது சில அவுஸ்திரேலிய முன்னணி வீரர்களின் சதி முயற்சி எனவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைப்போன்று இந்த துர்ச்செயலை சகிக்காது போன இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கட் தலைவர் *Ian Bothem* கூட மேற்படி ரோஸ் எமர்ஸனின் செயலானது முரளி மீது கொண்ட சுய கோபத்தினால் - பொறாமையினால் விளைந்தது என்று கூறியிருக்கிறார்.

அவர் தொடர்ந்தும்,

"உலகின் பிரதான 40 நடுவர்களையும் 95-96 ல் முரளி சார்பாக நீதி வழங்கிய சர்வதெச கிரிக்கெட் சபையின் விஷேட குழுவையும் கூட ரோஸ் எமர்ஸன் முட்டாளாக நினைத்து அவமானப்படுத்துகிறார்", என்றும் தெரிவித்தார்.

# சுழலவைக்கும் மாயச் சுழல் வீச்சு



சுழல் பந்து வீச்சு இரண்டு வகைப்படும் : (1) Off spin (2) Legg spin
கிரிக்கெட் அவதானிகள்/ அறிஞர்களின் கருத்துப்படி Off spin (உட்சுழல்) பந்து வீசும் போதுதான் பந்தை முறைகேடாக வீசியடிக்க முடியும். தவிர Leg spin (புறச்சுழல்) பந்து வீசும்போது வீசியடிக்க முடியாது. அப்படியிருக்கையில் 95-96ல் முரளி வீசிய மேற்படி இரு பந்துவீச்சுகளும் தவறானது - எறியப்படுவது என டெரல் ஹெயார் குறை கண்டிருந்தார். அதிலிருந்தே இது திட்டமிட்ட சதி எனத் தெளிவானதோடு இன்று அதே தவறைச் செய்து ரோஸ் எமர்ஸனும் சர்வதேச ரீதியாக விழி பிதுங்கி நிற்கிறார். எப்படியோ.... இதுவொரு சதிவலை எனப் பலரும் புரிந்து கொண்டிருப்பதே நமக்குப் போதுமான வெற்றியாகும்.

அத்தோடு மேற்படி துர்ப்பாக்கியச் சம்பவத்துக்கு மறுநாளே 24ம் திகதி பிரபல கிரிக்ககெட் வர்ணனையாளர் *Tony Greig* - முரளியோடு நடத்திய நேர்காணல் மூலம் முரளியின் பந்து வீச்சு குறையற்றது என உலகுக்குநிருபிப்பதற்காக தொலைக்காட்சி கமெராவுககு முன்னால் முரளியின் கைகளில்பிறப்பிலேயே அவருக்கு இருக்கும் வளைவை காண்பித்து விளக்கம் அளித்தார்.

இந்நிலையில் -

"ஐரோப்பியர் மற்றும் வெள்ளையினத்தவர்கள் பலர் கறுப்பு-ஆசிய கிரிக்கெட் நட்சத்திரங்களின் திறமையை ஏற்க மறுப்பதே.... இதுபோன்ற துரோக - வஞ்சகச் செயல்கள் நடப்பதற்குக் காரணம்" என்பது இலங்கை கிரிக்கெட் அணியின் முகாமையாளர் *Ranjith Fernando* வின் கருத்தாகும்.




கடைசியாக கிடைத்த செய்தியின்படி-

நடுவர் ரோஸ் எமர்ஸன் அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் குறித்த போட்டித் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு,

இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க மீது சர்வதேச கிரிக்கெட் சபை ஒழுக்காற்று விசாரணை நடத்தி, அவருக்கு ஒத்திவைக்கப்பட்ட 12 மாதகால தண்டனையும், சர்ச்சைக்குள்ளான குறித்த போட்டியில் அவருக்குக் கிடைக்கும் ஊதியத்தில் 75 சதவீதம் தண்டப் பணமாக வழங்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

குறித்த 12 மாதகாலத்துக்குள் அர்ஜுன மீண்டும் ஒழுக்கயீனமாக நடக்கும் பட்சத்தில் அவரை சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விலக்கி வைக்கும் நடவடிக்கை பற்றியும் சர்வதேச கிரிக்கெட் சபை யோசிக்கும் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

அவுஸ்திரேலிய நடுவரின் வஞ்சகமான நடவடிக்கைக்கு நீதி கேட்கப் போன அர்ஜுனவின் நிலைமை பரிதாபத்துக்குரியதாக மாறிவிட்டிருக்கிறதுதான் என்றாலும், இலங்கைரசிகர்களின் மனவுணர்வுகள் விளையாட்டை முன்வைத்து ஐக்கியப்பட்டிருப்பதும் நல்லதொரு அறிகுறியே.

வரும் மே மாதத்தில் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்குமுன்பதாக, கிரிக்கெட் ஜாம்பவானான நாடுகளையெல்லாம் கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் கலங்கடித்த இலங்கை வீரர்களது மனோதிடத்தைக் குலைக்கும் முயற்சியாகவும் இந்த *Carlton and United* கிரிக்கெட் தொடர் பயன்படுத்தப்படுகிறதோ என்ற ஐயங்களும் கிளம்பாமலில்லை.

இந்நிலையில்,

சும்மாகிடந்தசங்கை ஊதிக்கெடுத்தகதை மாதிரி....

விந்தைகள் புரியும் முரளியின் பந்துவீச்சில் குறைகண்டு அர்ஜுனவையும் அணியினரையும் உசுப்பேற்றி விட்டிருக்கும் பொறுப்பு அவுஸ்திரேலிய நடுவர்களுக்கே உரியது என்பதையும் சர்வதேச கிரிக்கெட் சபை கவனத்தில் எடுக்க வேண்டும்.




இவ்வாறான மனவுணர்வுகளின் பின்னணியில் -

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமான கிரிக்கெட் உறவு..... ஏன் அரசியல் உறவு கூட எவ்வாறு இருக்குமென்பது கூட இன்று கேள்விக்குறியாகி இருக்கிறது. ஏனெனில், கிரிக்கெட் ஒரு விளையாட்டு என்ற வரம்பையும் தாண்டி நாட்டிற்கான பெயர், புகழ், சுயகௌரவம், அரசியல் எனப் பல எல்லைகளைத் தொட்டு மக்களின் உணர்ச்சிகளோடு ஒன்றறக் கலந்திருக்கிறது என்பதே இன்றைய யதார்த்தம். •

---

**வெற்றியில் தன்னை அடக்கிக் கொண்டவன்**
**இரண்டாவது முறையாகவும் வெற்றி கொள்கிறான்**

-ஃப்ரென்சுப் பழமொழி

**வெற்றியை விட உனக்கு மிக அதிகமாகத் தோல்வி பாடம் புகட்டுகிறது.**

-யுக்கிரேனிய பழமொழி

**நேர்மை எப்போதும் வெற்றி பெறுவதில்லை.**
**ஆனால் வெற்றி எப்போதும் நேர்மையில் இருக்கிறது.**

-ஜெர்மனிய பழமொழி

**மிகப் பெரிய வெற்றி வீரன் என்பவன் ஒரு அடி கூட அடிக்காமல் எதிரியை வீழ்த்துபவன் தான்**

-சீனப் பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் மறந்த...

"சங்குவாரின்னா ராசலிங்கம் - ராசலிங்கம்னா சங்குவாரிங்க" அந்தளவுக்கு ஐயா பேர சொன்னா தெரியாதவங்க யாருமே இந்த டிஸ்ட்ரிக்கிலயே அந்த காலத்தில இருந்திருக்க மாட்டாங்க" என்று கரகரத்த குரலில் வாயிலிருந்த வெத்திலை எச்சிலை "பொளிச்" என்று துப்பி விட்டுச் சொன்னார் கந்தையா.

கம்பளை பஸ் நிலையத்தில் புசல்லாவைக்கூடாகப் போகும் பஸ்ஸிற்காக காத்திருந்தபோது அதே பஸ்ஸிற்காகக் காத்திருந்த **ரெட்டைப் பாதை** என்ற இடத்தைச் சேர்ந்த கந்தையா என்பவரிடம் சும்மா பேச்சுக் கொடுத்தபோது அவர் சொன்ன கருத்து இது.

இந்தக் காலத்தில் ராசலிங்கம் ஐயாவை எல்லோரும் மறந்துபோய் விட்டார்கள் என்பது அவருடைய பேச்சிலிருந்தே எனக்குப் புரிந்தது.

கம்பளையிலிருந்து புசல்லாவைக்குச் செல்லும் பஸ்ஸிலேறி **"சங்குவாரி"** என அப்பகுதித் தோட்டத்து மக்களால் எல்லாம் சுத்தத் தமிழில் உச்சரிக்கப்படும் **"செங்குவா"** (*Sanguhar*) என்னும் ஆங்கிலப் பெயரைக் கொண்ட அந்தத் தோட்டத்திற்குச் செல்லும் ஏழு கிலோ மீட்டர்களைக் கடந்து முடிப்பதற்குள் வயிற்றுக்குள் என்னவோ செய்தது. வேறொன்றுமல்ல பாம்பின் உடலைப் போல நெளிந்தும் சுளித்தும் இருந்த மலைப் பாதையும், அதில் அசுர வேகத்தில் போய்க் கொண்டிருந்த பஸ்ஸின் குலுக்கலும் தான்.



ராமன் கங்காணி

சங்குவாரித் தோட்டத்தை பஸ் அடைவதற்கு ஒரு ஒன்றரை கிலோமீட்டர் இருக்கும்பொழுதே கந்தையா என் கைகளில் தட்டி "அந்தா தெரியுதே பாருங்க - பங்களா! அதானுங்க ராசலிங்கம் ஐயாவோட வீடு" என்று ஒரு சிறிய மலைக் குன்றின் மீதிருந்த வீடொன்றைக் காண்பித்தார்.

சரியாக நான் இறங்க வேண்டிய இடத்தைக் காட்டி "இப்படியே நாலெட்டு போனீங்கன்னா ஐயா வுட்டு சமாதியையும் பாக்கலாம்" என்று கந்தையா சொன்னதும் என் காதில் கேட்டது.

அவர் சொன்னபடி சிறிது தூரம் போனதும் பாதைக்கு மேற்புறம் வெள்ளை வெளேரென்ற சுண்ணாம்பு பூசப்பட்டு ஒரு சிறிய கோபுர வடிவில் அமைதியாகவும் எளிமையாகவும் நான் தேடிச் சென்ற அந்த மகானின் சமாதி காட்சி தந்தது.



காளிமுத்து ஹெட் கங்காணியானார்.

1947ம் ஆண்டு இலங்கையில் நடந்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் மலையக மக்களின் வாக்குகளினால் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அந்த 9 பேர்களில் நாவலப்பிட்டித் தொகுதியில் திரு. ஐயதிலக்க என்பவரைத் தோல்வி காணச் செய்து ஆயிரக்கணக்கான பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டவர்தான் 'ராசலிங்கம் ஐயா' என அழைக்கப்படும் திரு. கே. ராஜலிங்கம் அவர்கள்.

இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - அன்று இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் என ஆரம்பிக்கப்பட்டபோது. அதன் ஆரம்ப உறுப்பினராகவும், முக்கிய ஸ்தாபகரும் பொதுக் காரியதரிசியாகவும், நிர்வாகியாகவும் திரு. ராஜலிங்கம் அவர்கள் பணியாற்றினார் என்பது நினைவுகூரப்பட வேண்டிய ஒன்று. இன்று மலையகத்தின் அரசியலைப் பற்றியும் அதன் வரலாற்றையும் சிலாகிப்பவர்களிடையே நினைவுகூரப்படாத ராஜலிங்கம் எனும் இந்த மனிதரின் மறக்கப்பட்ட வரலாற்று ஏடுகளைப் புரட்டியபோது வெளிக்கிளம்பிய தகவல்கள் பல எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

1830களில் இந்தியாவிலிருந்து மலையகத்திற்கு தொழிலாளர்களைக் கூலிக்கு ஏற்றி வந்த பொழுது தொழிலாளியோடு தொழிலாளியாக வந்த பதின்மூன்று வயதே நிரம்பிய **ராமன்** என்கின்ற ஒரு சிறுவன் இலங்கையின் மலையகக் காடுகளில் எங்கோ ஒரு இடத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டான். அந்தக் காலத்தில் பெருந்தோட்டத்துறை ஆரம்பிக்கப்பட்டதே கோப்பிச் செய்கையோடுதான். தொழிலாளர்கள் நிரந்தரமாக இங்கு தங்குவதில்லை. இந்தியாவிற்குச் செல்வதும், கோப்பிப் பழ அறுவடைக்கு வருவதுமே அப்போதைய நடைமுறை.

இப் பணியில் நன்கு பழக்கப்பட்ட ராமன் இளைஞனாகிய பொழுது இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலம். தேயிலைத் தோட்டங்களில் நிரந்தரமாகத் தங்கி வேலை செய்வதற்காக பெருவாரியான தொழிலாளர்களைக் கொண்டு வரும் பணியில் ராமனும் ஈடுபட்டான்.

தான் அழைத்து வந்த தொழிலாளர் கூட்டத்தோடு சங்குவாரித் தோட்டத்தில் தன் வரலாற்று அடிச்சுவட்டைப் பதித்த **ராமன் - ராமன் (பெரிய) ஹெட் கங்காணியானார்.**

அவரது மூத்த புதல்வராய்ப் பிறந்த திரு. காளிமுத்து பின்னர் சங்குவாரித் தோட்டத்தில் பெரிய கங்காணியானார். **காளிமுத்து பெரிய கங்காணியென்றால்,** அவரைக் கேட்காமல் வெள்ளைக்கார துரைமார் கூட தொழிலாளர்களைப் பற்றி எந்த முடிவும் எடுக்க மாட்டார்கள் என்னும் அளவுக்கு காளிமுத்து கங்காணி செல்வாக்கானவர். இருபுறமும் முறுக்கிவிட்ட கம்பீரமான மீசையோடு நெஞ்சை நிமிர்த்தி அவர் நிற்கும் தோற்றத்தைப் பார்க்கும் பொழுது அவரின் அத்திவாரப் பலத்தை ஒருகணம் புரிந்து கொள்ள முடியும்.

அந்த கம்பீரமான காளிமுத்துக் கங்காணிக்குப் பிறந்த 6 பிள்ளைகளில் மூத்த மகன்தான் இந்த நாலரை அடியே உயரமான மெலிந்த ஒற்றைநாடிச் சரீரம் கொண்ட திரு. ராஜலிங்கம்.

1909ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி பிறந்த ராஜலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியைச் சங்குவாரித் தோட்டப் பாடசாலையில் ஆரம்பித்து கண்டி புனித அந்தனீஸ் கல்லூரியில் முடித்தார். *London Matriculation* பரீட்சையிலும் சித்தியடைந்த அவர் பின்னர் பாடசாலையின் அழைப்பின் பேரில் புனித அந்தனீஸ் கல்லூரியின் தமிழ் மொழி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

ஆனால் தனது மூதாதையர் அழைத்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் ஒருபுறம் ஒதுக்கப்பட்டு உரிமையற்று தொழுவங்களில் அடைக்கப்பட்ட பிராணிகள் போல் வாழ்வது இவர் மனதை கடுமையாக உறுத்தியது.



தாயின் அரவணைப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இறுதியாக அவர் எடுத்த முடிவு தன் சொந்தத் தோட்டப் பாடசாலைக்கே மாற்றலாகிவந்து ஆசிரியராகக் கடமையாற்ற நினைத்தது தான்.

இதுநடந்தது1926 ஆம் ஆண்டு. 1927ம் ஆண்டில் ராஜலிங்கம் அவர்களுக்கு 18வயது. மகாத்மா காந்தி அவர்கள் இலங்கை விஜயத்தை மேற்கொண்ட போது திரு. ராஜலிங்கம் காந்திஜி அவர்களை நேரில் சந்தித்து பேசும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். அங்குதான் அவரின் வாழ்வின் திருப்புமுனை ஆரம்பமாகியது எனலாம். அன்றிலிருந்தே கதராடை உடுக்க ஆரம்பித்தார். தோட்டத் தொழிலாளிகளுக்காகத் தன்மை அர்ப்பணிப்பது என முடிவெடுத்துக் கொண்டார். சங்குவாரிதோட்டத்தில் இருந்தபடி இந்து வாலிபர் சங்கம் ஒன்றை உருவாக்கி பின்னர் அதை விஸ்தரித்து புஸல்லாவை இந்து வாலிபர் சமாஜம் என்பதை நிறுவினார்.

தனது இந்தச் சிறிய பணியால் மலையக மக்களுக்கு விடிவை வழங்க முடியாது. அவர்கள் கல்விக் கண்களைத் திறக்க வேண்டும் என்ற பரந்தஅவாஅவருள்தோன்றியிருக்கவேண்டும். அதனால்தான் புஸல்லாவை நகரில் இன்றும் அப்பிரதேச தோட்டத்து மக்களின் பிள்ளைகள் படிக்கும் **சரஸ்வதி**

# மகாத்மா

**மகா வித்தியாலயம்** 1932ம் ஆண்டில் அவரால் உருவாக்கப்பட்டது. அன்று இலங்கையில் இருந்த இந்திய அரசின் முகவரான திரு. கே.ஜி. எஸ். மேனன் அவர்களின் பாரியாருடைய பெயரான சரஸ்வதி என்பதையே இப்பாடசாலைக்குச் சூட்டி அதன் முதல் அதிபராகவும் 1934ம் ஆண்டு வரை அவரே கடமையாற்றினார்.




இப்பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காகஅந்தப்பிரதேசத் தோட்டம்தோட்டமாக கால்நடையாகவே சென்று பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு அரும்பாடுபட்டார்.

ஏனெனில் தோட்டப் பாடசாலைகள் என்பது அக்காலத்தில் வெறும் பெயரளவில் பிள்ளைகளை அடைத்து வைக்கும் தொழுவங்களாக இருந்ததை திரு. ராஜலிங்கம் அவர்கள் அறிந்திருந்தார். எனவே ஒரு நகரப் பாடசாலைக்குப் பிள்ளைகளைக் கொண்டுவந்து உண்மையான கல்விச் சூழலை உருவாக்கி அச்சமூகத்தை தலை நிமிர வைக்க வேண்டும் என்பது அவரின் நேர்மையான நோக்கமாக இருந்தது.

இன்று அப்பாடசாலையின் பெயரைக் கூட மாற்றுவதற்கும், அப்பாடசாலைக்கும் திரு. ராஜலிங்கத்துக்கும் இருக்கின்ற தொப்புள் கொடி உறவை மறைப்பதற்கும் எடுக்கப்படும் சில முயற்சிகளைக் கண்டுபலர் மனம் குமுறினாலும் அதை வெளியே சொல்ல முடியாத அளவுக்கு சங்குவாரி மக்கள் பலவீனப்பட்டு இருப்பது வேதனைக்குரியது.

1934ம் ஆண்டு இந்தியத் தலைவர் ஆசிய ஜோதி நேரு அவர்கள் இலங்கைக்கு வந்தார். இலங்கையில் மலையக தமிழ் மக்களின் தலைவர்களாக அந்நேரம் செயற்பட்ட கே. ராஜலிங்கம், எஸ். தொண்டமான், ஜனாப் ஏ. அஸீஸ் ஆகியோரைச் சந்தித்து சிதறிக் கிடந்த பல சங்கங்களை ஒன்றிணைத்து இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தை நிறுவினார்.

அதன் மிகப் பிரதானபதவியான பொதுக் காரியதரிசி (Secretary Genaral) பதவியும், அதன் நிர்வாகப் பதவியும் திரு. ராஜலிங்கம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. அக்குறிப்பிட்ட விழாவில் திரு. நேரு அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையை தோட்டத் தொழிலாளிகளின் தலைவர்களுக்குத் தமிழில் மொழிபெயர்த்தவரும் திரு. ராஜலிங்கம் அவர்களே.

1940களில் இருந்து 1947ம் ஆண்டு வரை திரு. ராஜலிங்கம் உட்பட இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்கள்மிகவும்ஊக்கமாகவும் ஆக்கமாகவும் மலையக மக்களுக்காகச் செயற்பட்ட காலம். அதன் பயனாக 1947ம் ஆண்டில் திரு. ராஜலிங்கத்தின் தலைமையில் இலங்கை இந்



திய காங்கிரஸ் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 9 பிரதிநிதிகளை வெற்றிபெறச் செய்தது. அதில் திரு. ராஜலிங்கமும் ஒருவர் என்பதை முன்னரே குறிப்பிட்டோம்.

மலையக மக்களுக்கு பாராளுமன்றத்தில் ஏற்பட்ட இப்பலத்தைக் கண்ட அன்றைய இலங்கை அரசாங்கம் உடனடியாக மலையக மக்களின் அரசியல் அதிகாரத்தின் தொப்புள் கொடியான அவர்களின் வாக்குரிமையைக் கத்தரித்து அவர்களை வெறும் மனிதர்களாக்கியது.

அடுத்து வந்த நாலாண்டுகளில் திரு. ராஜலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிய இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்கள் எவருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவணங்காமல் மலையக மக்களுக்கு நிகழ்ந்த இவ்அநியாயத்தை எடுத்துச் சொல்வதற்காக மகஜர் ஒன்றைத் தயாரித்து இந்தியாவிற்குச் சென்று டாக்டர் அம்பேத்கார் போன்றவர்களைச் சந்தித்து இந்திய அரசின் கண்களைத் திறக்கச் செய்தார்.

இவருடைய மனம் தளராத இந்தப் பணியையும் நேர்மையையும் காந்தீய கொள்கையின் இருந்த பற்றையும் கண்டு இந்தியாவின் பிரபல எழுத்தாளர் அமரர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கல்கி சஞ்சிகையில் 1950ம் ஆண்டு திரு. ராஜலிங்கம் அவர்களின் உருவப்படத்தை அட்டைப் படமாக வெளியிட்டு 'மலையக காந்தி, தீனர்களின் தொண்டன்' என கெளரவப்படுத்தினார்.

திரு. ராஜலிங்கம் அவர்கள் தான் உயிர் துறக்கும் வரை பிரம்மச்சாரியாகவும் புகைத்தல், மது, புலால் உண்ணல் என்னும் எந்தவித பழக்கத்துக்கும் அடிமையாகாமல் உண்மையான ஒரு காந்தியவாதியாகவே வாழ்ந்தார்.

கொள்கையிலே உறுதியாகவும் அரசியலிலே நேர்மையாகவும் தொலைநோக்குப் பார்வையுடனும் ஒரு உன்னதத் தலைவன் மலையக மக்களுக்கு அன்றே இருந்திருக்கிறான் என்பதைக் கேள்விப்படுகின்றபோது மனம் ஒரு முறை சிலிர்த்துக் கொள்ளத்தான் செய்கிறது. அவரிடம் இருந்த திறமை காரணமாக 1949ஆம் ஆண்டு சர்வதேச தொழில் ஸ்தாபனம் (ILO) ஆசிய விவசாயக் குழுவின் ஆலோசகராக அவரை நியமித்தது. 1956ம் ஆண்டு தனது கடுமையான உழைப்பின் காரணமாக அவர் சுகயீனமுற்றதால் வைத்தியர்களின் கண்டிப்பான உத்தரவுப்படி காங்கிரஸ் தலைமைப் பதவியை திரு. எஸ் தொண்டமானிடம் ஒப்படைத்துவிட்டு நேரடியான அரசியல் பணியிலிருந்து ஓய்வெடுக்க வேண்டியவரானார்.



அன்னார் வாழ்ந்த வீடு

இருந்தாலும் அவரின் சமூகச் செயற்பாடுகள் அத்தோடு நின்றுவிடவில்லை. சமய விடயங்கள், கலாசார விடயங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்களில் அவர் கவனமெடுத்துச் செயற்பட்டார். கொழும்பு விவேகானந்த சபையின் முக்கிய ஆலோசகராக இவர் கடமையாற்றி, 1962ம் ஆண்டில் திரு. குன்றக்குடி அடிகளார் இலங்கை விஜயத்தை மேற்கொள்ள வழிவகுத்தார்.

எவ்வளவுதான் கட்சி முரண்பாடுகள் இருந்தாலும் அன்றைய அரசாங்கம் 1958ம் ஆண்டில் இருந்து மூன்று ஆண்டுகள், தென்னங் கூட்டுத்தாபனத்தின் சம்பள நிர்ணய சபையின் பிரதிநிதியாக இவருக்கு ஒரு பதவியை வழங்கியது. அக்காலத்தில் தென்னந் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக பல கோரிக்கைகளை முன்வைத்து அதில் வெற்றி கண்டார்.

1963ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி தனது 54வது வயதில் சங்குவாரித் தோட்டத்தில் தனது மூன்று தலைமுறையினர் வாழ்ந்து மறைந்த அதே இல்லத்தில் மாரடைப்பினால் அந்த மாமனிதன் கண்களை மூடினார். அவருடைய மரணச் செய்தி கேட்டு அதிகமாக அதிர்ந்து போனவர்கள் அன்றும் இன்றும் அடிமைகளாகவே வாழும் மலையக தோட்ட மக்கள்தான்.

இலங்கையில் இருந்த பல அரசியல் தலைவர்களும் இந்தியாவில் பல அரசியல் தலைவர்களும் கூட ஒரு கணம் மனவேதனை அடையத்தான் செய்தார்கள். அவ்வேளை இந்திய ராஷ்டிரபதியாக இருந்த திரு. வி. வி. கிரி அவர்கள் திரு. ராஜலிங்கம் அவர்களின் சகோதரி கே. தவமணி அம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் *I do rememer your brother Rajalingam. He was indeed an affectionate friend of mine*" என குறிப்பிட்டிருந்தார்.



சமாதி






சரஸ்வதி பாடசாலை

திரு. ராஜலிங்கத்தோடு கூடவே தோளோடு தோள் நின்று தங்கள் வாழ்க்கையையும் மலையக சமூகத்துக்காகவே அர்ப்பணித்துவிட்ட அவரின் சகோதரி தவமணி அம்மாள் இத்தனை கதையையும் அமைதியாகக் கூறிவிட்டுநிமிர்ந்து என்னைப் பார்த்த பொழுது அவரின் கண்கள் பளபளத்தன.

அந்த மகான் வாழ்ந்த வீட்டுக்குள் ஒருமுறை காலாற நடந்துவிட்டு இறங்கி வெளியே வந்தேன்.

சங்குவாரித் தோட்டத்துலயங்களைக் கடந்து மலையேறி பிரதான வீதியை அடைந்து -

அவரின் சமாதியின் முன்னால் நின்ற பொழுது இப்படியொரு மகோன்னத மனிதனை மறந்து மறைத்து அரசியல் செய்வதாலோ என்னவோ தான் இன்றும் இந்த மலையக மக்களால் தங்கள் அடிமைத் தளையை உடைத்தெறிந்துவிட்டு நிமிர முடியவில்லையோ என்கின்ற கேள்வி அந்த மலை முகடுகளில் முட்டி மோதி எதிரொலித்துக் கேட்பதாக உணர்ந்தேன். ●

**- எஸ் மனோரஞ்சன்**

Photo by: G. Ramanayake Kandy Group

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிப்பு

"என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ஏய், இல்லாட்டில் இத்தனை நாளா கடிதங் கடிதமா இவ்வளவு பக்கங்கள் எழுதித் தொலைச்சிருப்பனா?"

"ஓம், இல்லை எண்டு நேரடியாச் சொல்லு குணா. உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?"

"ஓம்."

"சீ... போ, குணா... நீ சுவாரஷ்யமாயே சொல்ல மாட்டனெண்ட்றாய்"

"ஒற்றைச் சொல்லை எப்பிடியப்பா சுவாரஷ்யமாச் சொல்றது?"

"பிடிச்சிருக்கு எண்டு கொஞ்சம் ஆசையாய்த்தான் சொல்லேன்"

"ஓகே ஓகே, கொஞ்சமென்ன நிறைய ஆசையாவே சொல்லுறேன்... உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு, பிடிச்சிருக்கு."

"நான் அழகாயிருக்கிறனா?"

"போச்சுடா, தர்மசங்சடமான கேள்விக்கு வந்திட்டியா?"

"ஹ்ம்ம்... கிண்டல் பண்ணாதை அழுதிடுவன்... சொல்லு... நான் அழகாயிருக்கிறனா?"

"இப்பிடிப் பயமுறுத்திக் கேட்டால் நான் எப்பிடி உண்மையான அபிப்பிராயத்தைச் சொல்றது...?"

"போ... போ... நான் அழகாயில்லையா?"

"உண்மையா எனக்குப் பட்டதைச் சொல்லட்டுமா? போட்டோவில நல்ல வடிவாய் இருந்தாய்... இப்ப நேரில பார்க்கேக்க கொஞ்சம் வயசானவ மாதிரித் தெரியிறாய்..."

"ராத்திரி முழுக்க நித்திரையில்லாமல் பஸ் பயணமெல்லே... அதுதான் அப்பிடித் தெரியுது."

"சரி நாளைக்குப் பாத்திட்டு அபிப்பிராயத்தை மாத்திக்கொள்ளுறன்...."

"ஊஹு*ம், நாளைக்கு உன்னோட நிக்க முடியாது. இண்டைக்கு இலக்கியக் கூட்டமெண்டு கப்ஸா விட்டுட்டு உன்னைப் பாக்க வந்திருக்கிறன். நாளைக்கும் தனிய வெளிக்கிட்டா சித்தப்பாக்குச் சந்தேகம் வந்திடும்... தெரிஞ்சா ஊருக்குத் திரும்புறதுக்கு முன்னாலேயே கொலைதான் விழும்...."

"அப்ப, கொழும்பெல்லாம் நான் சுத்திக் காட்ட வேண்டாமா?"

"அதெல்லாம் நாளைக்குத் தம்பியோட சுத்திப் பார்த்துக்கொள்ளுவன்... இண்டைக்கு உன்னை மட்டுந்தான்...."

"சரி சரி, வடிவாப் பாத்துக்கொள். எதுக்கு அங்க தூரத்தில இருக்கிறாய்.... இதில இப்பிடி வாவன்..."

"இல்லை நான் இங்கயே இருக்கிறன்"

"அதில வெயில் வந்திட்டுதெல்லே..."

"ஆஹா, கரிசனத்தைப் பாரன்.... முதல்ல பக்கத்தில வரச் சொல்லுவாய்... பிறகு அங்க இங்க தொடுவாய்.... விரல் மோதிரத்தைப் பாக்கிறன் எண்டு கையைப் பிடிப்பாய்... எனக்குத் தெரியும். களவெடுக்கிறவையை நம்பினாலும் கவிதை எழுதிறவையை நம்பேலாது..."

".........."

**"கரட் கட்டிய கழுதையைப் போல**
**கலண்டரில் உன்**
**வருகை நாளைப் பார்த்தபடி...**
**விழிகளில் உன் முகத்தைஏந்திவிடவென்று**
**இமைத்தலை மறந்து என் கண்கள்....**
**விதை மீறி வரும் முதல் தளிருக்கான**
**இனிய படபடப்போடு காத்திருக்கிறேன்**
**நம் சந்திப்பிற்காக...** - இதுதானே உன்னட்டையிருந்து கடைசியா வந்த கடிதத்தில இருந்த வரிகள். இது என்ன கவிதையா குணா?"

"தெரியாது. உன்வரவை ஆவலோட எதிர் பார்த்திருந்ததில எழுதினது அது..."

"அவ்வளவு ஆவலா உனக்கு? வேற என்னெல்லாம் கற்பனைகள் பண்ணியிருந்தாய்?"

"அதைத்தான் எழுதியிருந்தன்..."

"இல்லை... கண்டதுக்குப் பிறகு என்ன எண்டு கண்டபடியெல்லாம் யோசிச்சிருந்திருப்பியே...?

"என்ன..."

"ம். சரி, இப்ப நான்தான் கண்முன்னால இருக்கிறனே... கடிதத்தில எழுதியிருந்த மாதிரி ஏதாவது சொல்லு கேட்பம்..."

"என்ன சொல்ல நித்யா?"



"எழுத்தில் தெரியும் அகத்தின் அழகை முகத்திலும் காண வரம் என்று தருவாய்... எண்டெல்லாம் போட்டோவை அனுப்பச் சொல்லிக் கேக்கிறதுக்கு எழுதினியே... அதுமாதிரி இப்ப நேரில பாக்கிறதைப் பற்றியும் ஏதாவது உன் கற்பனையை எடுத்து விடன்..."

"வந்தாத் தானே சொல்லலாம் "

"ஏ... புளுகாதை.... நேத்து ரா முழுக்க என்னைப் பற்றித்தானே உனக்குக் கவிதை கவிதையா வந்திருக்கும். அதையெல்லாம் சொல்ல என்ன கூச்சம்... போட்டோவைப் பாத்திட்டே என்னென்னமோல்லாம் எழுதியிருந்தாய்..."

"சித்தப்பா வீட்டில இலக்கியக் கூட்டம் எங்க நடந்ததெண்டு கேட்டால் என்ன சொல்லப் போறாய்?"

"அதெல்லாம் சமாளிப்பன் விடு.
**உன் கடிதத்திற்குக்**
**காத்திருக்கும் காலைகள்....**
**நெருப்புச் சொட்டுக்கள் சிந்தி**
**நிமிட முள்ளும்**
**வெடிகுண்டை ஏந்தி**
**வினாடி முள்ளும் நகர்வதை**
**எப்போதும் போல்**
**சைக்கிளை உருட்டிவரும்**
**தபால்காரனுக்கு**
**எப்படிப் புரிய வைப்பேன்?**
- ஞாபகமிருக்கா நீ எழுதினது.... புரியவைச்சியா தபால்காரனுக்கு?"

"ம்... நீ எப்ப ஊருக்குத் திரும்புறாய்... எத்தினை நாள் இங்க நிப்பாய்?"

"ஏன் அதுக்கிடையில சலிச்சுப் போச்சா? நீ எதிர்பார்த்த மாதிரி நான் அழகாயில்லையா?"

"சேச்சே, போட்டோவில பாத்தமாதிரித்தான் இருக்கிறாய்..."

"அப்ப, போட்டோவிலேயே நான் அழகாயில்லையா?"

"சனிக்கிழமை உண்மையிலேயே இலக்கியக் கருத்தரங்கம் ஒண்டிருக்கு, நிப்பியோ எண்டு கேட்டன்..."

"அதெல்லாம் வேண்டாம். என்னை உனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையா?"

"சொன்னனான்தானே...."

"இன்னொருக்காச் சொல்லு... நீ சுவாரஷ்யமாயே பேசுறாயில்லை. நீ போட்டோவில பாத்துக் கற்பனை பண்ணி வைச்சிருந்த அழகாய் நானில்லை... கிழவி மாதிரித் தெரியிறன். அப்பிடித்தானே?"

"ஏன் சும்மா ஏதேதோவெல்லாம் நினைச்சுக் குழம்புறாய்... ரதி மாதிரித்தான் இருக்கிறாய்..."

"ஸ்கூல் நாடகங்கள்ல சீதை, கிளியோபாட்ரா, சகுந்தலை வேஷமெல்லாம் நான்தான் போடுவன். இப்ப வேலை செய்யிற இடத்திலையும் நான் இருந்தால்தான் களைகட்டுதெண்டு சொல்லுவினம்..."

"பெண்கள்தான் உலகை அழகுபடுத்துகினம் எண்டுதான் நானும் நினைக்கிறன்"

"ம்ம்.. பட்டும் படாமல் பொதுவாய்த்தான் சொல்லிக்கொண்டிருக்கிறாயே தவிர, என்ர வடிவைப் பற்றிக் கதைக்கிறியே இல்லை."

"நித்யா, நேரமாகுது... வீட்டில உன்னைத் தேடுவினம். இன்னொரு நாளைக்கு சாவகாசமாய் உன் அழகுக்கு ஒரு காவியமே எழுதிறனே...?"

"ஐயையோ, நேரமாச்செல்லே.... வா வா நான் தொலைஞ்சன், போவம், குணா..."

---

"என்ன குணா, சும்மா வெறும் போஸ்ற் பொக்ஸையே காலமை பின்னேரம் திறந்து மூடிக்கொண்டிருப்பாய்... இங்க பார் நேற்று வந்த கடிதம். உனக்குத்தான். எடுக்காமல் விட்டிருக்கிறாய்..."

"ம்.. தா... எங்க வெளிக்கிடுறாய் சுரா..."

"நான் எக்ஸிபிஷன் ஒண்டுக்குப் போறன். உனக்குத்தான் நித்தியாட்டயிருந்து கடிதம் வந்திட்டுதே.. இண்டைக்குஒருஇடமும் அசையமாட்டாய்... நான் வாறன்."

"என்ன எக்ஸிபிஷன்டா?"

"கொம்பியூட்டர் - இன்ரநெற் சம்பந்தமாய் ஏதோ காட்டுறாங்கள்... நித்யா எப்ப திரும்பிப் போனது? சும்மா கடிதத்துக்குக் காத்து உருகிறதையும், பத்துத் தரம் திருப்பித் திருப்பிப் படிக்கிறதையும் இரவிரவாய் முழிச்சு எழுதிக் குவிக்கிறதையும் விட்டிட்டு, வந்திருந்த நேரத்தில ஏதும் பேசிமுடிவாக்கினியே... சும்மா சினேகிதம்தான் எண்டு பம்மாத்து விட்டுக்கொண்டிராமல் விஷயத்தை முற்றாக்கு மச்சான்..."

"நீ இப்ப உடன வெளிக்கிடப் போறியே..."

"ஓமோம்... இனி இங்க நான் நிண்டு மோட்டு வளையைப்பாக்கிறதே... நீகடிதத்தோட போய் மேசையில இருந்தா உன்ர கனவுகளைக் கலைக்கேலாது... கொஞ்சம் வெள்ளனத்தான் எண்டாலும் நான் வாறன்..."

"நில் மச்சான், நானும் வாறன்" ●

**- இடக்கரடக்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத ∴பாஷன் பித்து

"நடையா இது நடையா நாடக மன்றோ நடக்குது...." என்று அன்னைஇல்லம் படத்தில் சிவாஜி கணேசன் தேவிகாவைப் பார்த்துப் பாடியதை ரசித்தோம் அன்று. இன்று சட்டிலைட்களுக்கூடாக நம் நாட்டுத் தொலைக்காட்சிகளிலும் காண்பிக் கப்படும் '∴பாஷன் ஷோ'க்களைப் பார்க்கும் எவருக்கும் இந்தப் பாடல் மனசுக்குள் ஓடுவதைத் தவிர்க்க முடியாது.

ஒடிந்து விழுவது போல நெடுநெடுவென்று உயர்ந்திருக்கும் நாரீமணிகள், வண்டு தன் அஞ்சிறகால் வீசும் சிறு காற்றுக்கு ஆற்றாது தேய்ந்துவிடும் இடையை ஒயிலாக ஒடித்து நெளித்து நடந்து வருகையில்....

பார்க்கிறவர்கள் கண்களுக்கு - அது நடையல்ல நடனம்தான்.

மேனியின் பாரம் தாங்காமல் முனகும் மெல்லிடையின் வருத்தத்தைப் புரிந்துதான் ஆடையின் பாரத்தைக் குறைத்துக் கொள்கிறார்களோ என்றுகூடத் தோன்றும்.

∴பாஷன்! அதற்கு என்ன தமிழ்? நாகரீகம்...? நவநாகரீகம்....?மெருகு...?பாணி...?ஒப்பனை....? ஒயில்....? ஊஹு"ம், ஒன்றுமே சரியாகப் பொருந்துவதாக இல்லை. சரி நாம் அதைப் ∴பாஷன் என்றே கூறிக் கொள்வோம்.

தமிழிலே சொல் இல்லை என்பதற்காக இந்த ∴பாஷன் பித்து எம்மைப் பிடித்து ஆட்டுவதிலிருந்து எம்மால் தப்பிக் கொள்ள இயலாது. எங்குமே எப்போதுமே எவருக்குமே ∴பாஷன் பற்றி ஏதோ ஒரு நாட்டம் இருக்கத் தான் செய்கிறது.

இந்த ∴பாஷன் பித்து ஆண், பெண் என்ற பேதமின்றி எம் எல்லோரையும் தான் பிடித்து ஆட்டுகிறது.

அடேயப்பா! உலகெங்கும் இன்று மேடையேற்றப்பட்டுவரும் ∴பாஷன் ஷோக்களைப் பாருங்களேன். தலைமுடி காட்டும் கோலங்கள் என்ன! உடைகள் காட்டும் ஜாலங்கள் என்ன! உடையற்ற உடலில்கூட ∴பாஷனின் கைவண்ணம் பளிச்சிடுகிறதே! மேனிக்கு வெறும் வர்ணங்களாலேயே ஆடை வரைந்து விடுகிறார்கள். ஆடை விலக்கிப் பார்க்க நினைப்பவர்களுக்கு ஏமாற்றம்தான் மிச்சம்!



ஆனால், புதிது புதிதாக வடிவமைக்கப்படும் ஆடைகளை அறிமுகப்படுத்துவதற்காக மேடையில் வந்து அழகு காட்டி விட்டுப் போகும் இந்தப் பெண்கள் இதற்காகத் தங்களை எப்படியெப்படி எல்லாம் வருத்திக் கொள்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டால், தென்றல் நடந்த மேடையைப் பார்த்த கண்களில் குளுமை மறைந்து நீர் திரளும்.

அழகிப் போட்டிகளும், ∴பாஷன் ஷோக்களும் பெண்ணுடலைக் காட்சிப்படுத்திக் காசு சம்பாதிக்கும் தொழிலாகவும், பெண்ணின் உடலழகு பற்றிய அளவுப் பிரமாணங்களை உலகெங்கும் உள்ள பெண்களுக்கு புது நாகரீகமாக எடுத்துச் செல்வதாகவும் அமைந்திருக்கிறது.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஒல்லியாக வரிச்சுத் தடிகளைப் போல் உடலை மெலிய வைத்துக் கொள்ளுதல், அங்கங்களை எவ்வளவு கவர்ச்சியாகப் பிறர் பார்வைக்குத் தர முடியுமோ அதற்கேற்ற வகையில் ஆடைகளை தயாரித்துக் கொள்ளுதல்,

இவற்றைத்தான் இந்தப் போட்டிகளும் ∴பாஷன் ஷோக்களும் உலகப் பெண்களுக்கு நாகரிகமாகச் சொல்லித் தருகின்றன.







**இவ்வாறு மேலைத்தேய நாடுகள் தங்கள் கலாசாரத்தையும் பண்பாட்டையும் காட்சி உருவங்களாக உலகமெங்கும் விநியோகிப்பதன் வாயிலாக உலகின் ஏனைய நாட்டு மக்களின் மனங்களைத் தமக்கு அடிமையாக்கிக் கொள்வதை 'காட்சி ஏகாதிபத்தியம்' *(Visual imperialism)* என்று சொல்லலாமா?**

பாரிஸில் எங்கோ ஒரு தொண்ணூற்றெட்டாவது மாடியில் தன் நான்காவது கணவனுடன் வசிக்கும் பெண்ணின் அல்லது லொஸ் ஏஞ்செல்ஸில் ஹொலிவூட் கனவுகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் பெண்ணின் உள்ளாடைத் தெரிவுகளும், ஒயில் அலங்காரங்களுமே நமது சுந்தரவதனி, சுகுணலட்சுமிகளுக்கும் நவநாகரிக அலங்காரப் பொருட்களாகின்றன. உலகம் முழுவதையும் நம் உள்ளங் கைக்குள் இருக்கும் ரிமோட் கொண்ட்ரோலருக்குள் கொண்டுவந்துவிட்ட தொலைக்காட்சிச் சேவைகளின் கைங்கரியம் இது.

அழகு என்பதற்கு நாங்கள் சொந்தமாக வைத்திருந்த அபிப்பிராயங்களெல்லாம் மறக் கடிக்கப்பட்டு, இந்த ஷோக்களும் போட்டிகளும் தொடர்புச் சாதனங்களினூடாக நமக்குள் அழுத்தமாகப் பதித்துவிடும் தோற்றங்களையே நாமும் அழகுகளாகக் கொண்டாடத் தொடங் கிவிடுகிறோம்.





குண்டாக இருப்பது படு அசிங்கமான விஷய மாக இப்போது நம் பெண்களும் நினைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஒல்லிக்குச்சிகளாக உடம்பை ஆக்கிக் கொள்ளும் முயற்சியில் எலும்போடு தசை வற்றி தோல் சுருங்கி மிக ஆபத்தான நோய்களுக்கும் ஆளாகி வருகிறார் கள்.

இந்த ஃபாஷன் ஷோக்களுக்கான தரகர் களிடம் இப்பெண்கள் படும் பாடுகளும் வெளிச் சத்துக்கு வராத துன்பங்களாக ஷோக்களின் பின்னணியில் நடந்தேறுகின்றன.

பெண்களைக் காட்சிப்படுத்துவது என்பது ஆண் சமூகத்தின் தேவையாகவும், அவள் அழ காக இருக்க வேண்டிய தேவை ஒன்றையே இந்த சமூகம் வலியுறுத்துவதாகவும் இருக்கி றது. ஆணை மையமாகவும் பெண்ணை அவ னுக்குரியவளாகவுமே ஆக்கிவைக்கப்பட்டிருக் கிறது. பெண்கள் ஆண் களுக்கானவர்கள், ஆண் களுக்கு அடிபணிய வேண்டியவர்கள் என்பது நம் கலாசாரத்தின் பண் பாட்டின் உயிர்நாடியாக இருக்கிறது.





மேலும் ஆணை மைய மாகக்கொண்டே பெண் பேசப்படுகிறாள், மதிப் பிடப்படுகிறாள், வரை யறுக்கப்படுகிறாள். இதனால் அவள் கவர்ச்சிப்பொருளாக் கப்படுகிறாள்.

சோகம் என்ன வென்றால், பெண் களே பெண்களை பார்க்கப்படும் பொருளாக நினை க்கிறார்கள். அவ ளுக்கு சிவப்பழகு அவசியமாக்கப் படுகிறது. முகப் பரு பிரச்சினை யாக்கப்படுகி றது. தனது கூந் தலைமென்மை யாகவும் ஆரோ க்கியமாகவும் பார்த்துக் கொள்ள



வேண்டியவளாகிறள்.

மேனி எழில் அதிமுக்கியமாகிறது. ஆடை அணிகலன்கள் எல்லாம் விதவிதமாய்க் கண்டு பிடிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணை மையமாகக் கொண்டு கட்டமைக் கப்படும் (பெண்ணின்) அழகு என்பது இயற்கை யானதாக இருந்தால் போதாது. அவளுக்கு விதவிதமான அலங்காரப் பொருட்களை உற் பத்தி செய்து சந்தைக்குக் கொண்டுவந்தாக வேண்டும். அவைகளை அணிந்து அலங்கார மாக அவளைக் காட்சிப்படுத்துவதும் அவசிய மாகிறது.

விளம்பரத்தில் வரும் அணி கலன்களை அணிந்த பெண் களை எல்லோரும் ஆசையு டனும் ஏக்கத்துடனும் பார்க் கிறார்கள் என்பது நிறுவப்படு வதால் அந்தப் பொருட்களின் விற்பனையையும், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் பார் வையாளர்களையும் ஒருசேர அதிகரிக்க வைக்கும் உத்தி யாக இது அமைகிறது.

உலக அழகி என்ற உச்சி யைத் தொட ஆரம்பம் இந்த ∴பாஷன் ஷோக்களும், விளம் பர மொடலிங்கும்தான் என அந்தப் பாதையைத் தேர்வு செய்ய விரும்பும் பெண்கள் நம்புகிறார்கள்.

இந்தியாவின் ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா சென் போன் றோரெல்லாம் இவ்வாறுதான் அவர்களது உச்சிக்கு வந்தார் கள். ∴பாஷன் ஷோ என்றால் ரூபா ஐயாயிரமும், விளம்பர மொடலிங் என்றால் ரூபா இரு பதினாயிர மும் வாங்கிக் கொண்டிருந்த இவர்களது ரேட், உலக அழகிகளாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரே நாளிலேயே பத்துப் பதினைந்து மடங்காக எகிறிவிட்டது.

பெண்களுக்கான ஒரு தொழிற்துறையாக உருவாகியிருப்பது மட்டுமல்லாமல், சர்வதேசச் சந்தைகளை உருவாக்கவும் ∴பாஷன் ஷோக் கள் உதவுகின் றன. சர்வதேச அளவிலான போட்டி, செயற் கைக்கோள் ரி.வி. போன்ற தொழில்நுட்பங்கள் மூலமான புதிய சந்தைகளை உருவாக்குதல் இன் றைய உலகின் போக்காக இருக் கிறது.





Courtesy Alliance Francaise



வணிகமும் அது சார்ந்த தேவை களும் உலகின் அனைத்து நடப் புக்களையும் தீர்மானிக்கும் சக்தி யாக இன்று உருப்பெற்று வருகின் றன. வணிகவியல் கலாசாரத்தின் உயிர்நாடியாக இருப்பவை விளம் பரம், ஆடம்பரம் போன்றன. இந்த ∴பாஷன் ஷோக்கள் அதற்காக உருவானவையே.

விளம்பரப்படுத்துதல் மூலம் எவ் வளவு மோசமான சரக்குகளையும் அமோகமாக விற்றுவிடலாம் என்ப தும், விளம்பரமில்லாவிட்டால் எத் தனை நல்ல சரக்காக இருந்தாலும் விற்க முடியாது என்பதும் இன்றைய உலகின் உண்மைகள்.

விற்பனைக்காகச் செய்யப்படும் இந்த சர்வதேச ரீதியிலான விளம்ப ரங்களால் மூன்றாம் உலக நாடுக ளில் வாழும் நாங்கள் குறைபாடு டையமனிதர்களாகவும், நமதுபழக்க வழக்கங்கள் நாகரிகமற்றவை என்ற குற்றவுணர்வும் ஏற்படுத்தப்பட்டு, நமது பொருட்களை விட்டு நாம் பாவிப்பதற்கு உரிய பொருட்களை யெல்லாம் மேற்குச் சந்தைகளே தீர்மானிப்பதாக இருக்கிறது.

மிகப்பெரிய கேடு என்னவென் றால் நமது குழந்தைகள் இந்த விளம்பரங்களைத்தான் பார்க்கிறார் கள், அதனால் உருவாக்கப்படுகி றார்கள், வளர்கிறார்கள்.

இந்தப் ∴பாஷன் பெருவெள்ளத்தின் ஆதிமூலம் என்ன? நதிமூலம் காண முடியாதது போல்த்தான் இதுவும் எனினும் ∴பாஷனின் உலக மையம் என்று கூறக்கூடிய இடம் என்பது பிரான்ஸ்தான். ∴பாஷன் பற்றிய ஒரு பேரெழுச்சியை அந்த நாளிலேயே ஏற்படுத்திய பெருமைக்குரியவர் 18ம் நூற்றாண்டின் பிரான்ஸ் நாட்டு மாமன்னர் 16ம் லூயியின் அன்புக்குரிய மனைவி **மாரி அன்ரொனொயிட்** அம்மையார். (அன்று - அவர் கண்வெட்டத் தோன்றாத அழகு வனிதையார்.)

அம்மையாரின் ஆடம்பரத்தையோ, அகம்பாவத்தையோ, அரசகுடும்பத்தின் ஆதிக்கத்தையும் ஆட்சியையுமோ வெறுத்துக் குமுறிய அன்றைய பிரான்ஸியர்கள் கூட அவள் ஏற்படுத்திய ∴பாஷன் பெருமோகத்தை மட்டும் விரும்பிச் சுவீகரித்துக் கொண்டனர். அன்று ஏற்பட்ட பிரான்சுப் புரட்சி அரச, நிலவுடைமைப் பாரம்பரியங்களைத் தூக்கி வீசி முதலாளித்துவ உற்பத்தி முறையைப் பிறப்பித்த போதும் இந்த ∴பாஷன் பாரம்பரித்தை மட்டும் அப்படியே தொடர்ந்து அதே ஈடுபாட்டுடன் வளர்த்தெடுக்கத் தவறவில்லை.

அரசியின் மாளிகையான **வேர்ஸைஸல் பலஸ்**தான் இன்றும் பிரான்ஸின் அதிகூடிய ∴பாஷன் பொருட்களின் சேகரிப்பைக் கொண்ட உலகப்புகழ் பெற்ற மியூஸியமாகத் திகழ்கிறது.

அன்று பிரான்ஸியர்களுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே ∴பாஷன் முன் மாதிரியாகத் திகழ்ந்தது பிரான்ஸே. ரஷ்யர்களோ ஐரோப்பியர்களோ யாவரும் பிரான்ஸை வழிபார்த்தே தமது ∴பாஷன்களை அமைத்துக் கொண்டனர்.

இன்றும் பல ∴பாஷன் ஷோக்கள் உலக நாடுகளெங்கும் நடத்தப்பட்டு வந்தாலும் கூட பிரான்ஸே இதில் முதன்மை வகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**'டாக்டர் ஆப்பரேஷநாதர்'** தமிழ் எழுத்துக்களைக் கண்டால் அவைகளைத் தனித்தனியாக அறுத்து வேறு வேறு அறைகளில் போட்டுப் பூட்டிவிடுவார். அதுபோதாதென்று ஆஸ்பத்திரியை விட்டு வேறெங்காவது போயும்விடுவதுண்டு. சில எழுத்துக்கள் அவ்வப்போது அதிக சேதமின்றித் தப்பித்துக் கொள்வதுமுண்டு. இந்தப் பரிதாப நிலையிலுள்ள எழுத்துக்களின் பகுதிகளைச் சரியாகப் பொருத்தி, அவைகளுக்குரிய சரியான அறைகளில் வைத்தீர்களென்றால்..... அநேக புண்ணியம் உங்களுக்கு!

அவ்வாறு எழுத்தின் பகுதிகளைச் சரியான அறைகளில் வைக்கும்போது, மறைந்துள்ள ஒரு வார்த்தையையும் கண்டு கொள்வீர்கள்.

சென்ற தடவை உங்கள் உதவியால் தப்பியவர்களைப் பற்றி அறிந்துகொண்ட டாக்டர் இம்முறை வெட்டோ வெட்டென்று துண்டாடிவிட்டு பெருமிதப் புன்னகை பூக்கிறார். டாக்டரா, நீங்களா, ஒரு கை பாருங்கள்.

கண்டுபிடித்த அந்த வார்த்தையை இங்குள்ள கட்டங்களுக்குள் எழுதி, கூப்பனை ஒரு தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்.

முகவரி: 'அமுது'
டாக்டர் ஒப்பரேஷநாதர் - 5
இல: 35 டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தை
கொழும்பு 10.



**ஒப்பரேஷநாதர் போட்டியில் சரியான விடை எழுதிய மூவர்களின் பெயர்களை அமுது சஞ்சிகைகளில் நாம் ஏற்கனவே பிரசுரித்திருந்தோம் இவர்களுக்கான புத்தக பரிசில்களை மாதாந்தம் வழங்குவதற்கு பூபாலசிங்கம் புத்தக நிலையத்தினர் முன் வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**

### ஒப்பரேஷநாதர் - 1

நக்ஷத் ஷெரின்
516/A2, உதயா
மாவத்தை
அனுராதபுரம்

ஏ. மகேந்திரன்
இல. 115, கோவில் வீதி
ஹாவாஎலிய
நுவரேலிய

எம். எ. எப். ரிஸ்னியா
இல. 236B
பொல்கஹாதன்ன
நாம்புலுவ, பஸ்யால

### ஒப்பரேஷநாதர் - 2

எ. மொஹமட் ருகுல்லா
பைதுல் ஹக்.
குருகொட
அக்குறனை

எஸ். எச். எம். றம்ஷி
குருநாகல் றோட்
குளியாப்பிட்டி

பி. சிவானந்தராஜா
2/A சென்றல் றோட்
பெரிய நீலாவணை-2
கல்முனை

### ஒப்பரேஷநாதர் - 3

பாத்திமா சானாஸ் வபா
ஹஸன் இஸ்தான்
நாங்கல்ல,
துல்கிரிய.

செ. கனகரெத்தினம்,
975, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

செல்வி மா. மலர்விழி
தபாலக வீதி,
கன்னன்குடா-2,
மட்டக்களப்பு.

உங்கள் பரிசுகளுக்கான **வவுச்சர்கள்** தபாலில் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் அதில் உங்கள் பிரதேசத்தில் உள்ள எமது முகவரின் பெயர் முகவரி என்பன குறிக்கப்பட்டிருக்கும். அவர்களிடம் உங்கள் **வவுச்சர்களை** ஒப்படைத்து பரிசுப் பார்சல்களை பெற்றுக் கொள்ளுங்கள்

டாக்டர் ஒப்பரேஷநாதர் - 4 க்கு பதில்:

## தித்திப்பு, அபஸ்வரம், மத்தியஸ்தம், தத்தளிப்பு

**சரியான விடைகளை அனுப்பிய 21 வாசகர்களுள் குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரின் பெயர்கள் வருமாறு**

எஸ். பிரசாந்தன்
பிரவுண்ஸ்விக்
எஸ்டேட்
மஸ்கெலியா

எம். பீ. எஸ். ஹமீட்
இல. 01,
தம்புள்ள வீதி
நாவுலை

தேன்மலர் கனகராஜ்
இல. 5/114, P.W.D.
றோட்
உடபுஸல்லாவை

பூபாலசிங்கம்
புத்தகசாலை
POOBALASINGHAM
BOOK DEPOT
340, செட்டியார் தெரு. கொழும்பு -11
தொலைபேசி: 422321, 337313,
∴பக்ஸ் 330349
257/1, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு -6
04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான தேர்வு



சரியான தேர்விற்குத்
தெளிவான கண்கள் தேவை

தெளிவான கண்கள் கொண்டு
மகாவலி மெரீன் சீமெந்தைத்
தேர்ந்தெடுத்தால் நீங்கள்
புத்திசாலிகள்.

ISO 9002




**MAHAWELI MARINE CEMENT**

நிர்மாணத்தின் நிலையான அடித்தளம்

69, புதிய களனிப் பாலம் வீதி, கொழும்பு 14.
தொலைபேசி: 451212 பக்ஸ்: 451049 டெலெக்ஸ்: 21655

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற....



# குடல் கான்சரால் முடங்கி விடாதிருக்க...

டொக்டர்
எம். கே. முருகானந்தன்

மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு ஏனையவர்களைவிட பெருங்குடல் (*Colon*) புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு நான்கு மடங்கு அதிகம் என அண்மைய ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது. பிரட் ஹட்சிசன் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தைச்சேர்ந்தடொக்டர்எரிக்ஜக்கோபும்வாஷிங்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டொக்டர் எமிலிவைட் ஆகியஇருவரும்பெருங்குடல்புற்றுநோயுள்ள 424 பேரையும் நோயற்ற 414 பேரையும் ஆராய்ந்து பார்த்ததிலேயே இம் முடிவுக்கு வந்தார்கள்.

வாரத்தில் ஒருமுறையாவது மலச்சிக்கலுக்கு ஆளாகி கடைகளில் கிடைக்கும் மலமிளக்கி மருந்துகளை அடிக்கடி உபயோகிக்க வேண்டிய நிலையிலுள்ளவர்களே இப் புற்றுநோய்க்கு ஆளாவது அதிகமாம்.

இதற்குக் காரணம் என்ன?

மலச்சிக்கலின்போது பெருங்குடலினூடாக மலம் பயணம் செய்யும் நேரம் அதிகரிக்கிறது. அப்பொழுது மேலதிக நீரும், நார்ப் பொருளின் சிதைவுகளும் பெருங்குடலினால் உறிஞ்சப்படுகின்றன. இதனால் மலத்தின் எடை குறைந்து மலம் இறுக்கமடைவதுடன் புற்றுநோயை ஊக்குவிக்கக்கூடிய நச்சுப் பொருட்களின் செறிவும் அதிகரிக்கிறது.

கீழை நாடுகளில் வாழும் நாங்கள் அதிகளவு நார்ப் பொருளை உட்கொள்கிறோம். எனவே எங்களுக்கு இப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு குறைவு என்கிறீர்களா?

உண்மைதான். மேலை நாடுகளோடு ஒப்பிடும்போது எமது நாடுகளில் பெருங்குடல் புற்றுநோய் மிகவும் குறைவுதான். ஆனால் ஆராய்ச்சியின்போது மலச்சிக்கல் உள்ளவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் வழமைக்கு அதிகமான நார்ப்பொருளை உட்கொள்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே போதிய நார்ப்பொருள் உட்கொண்டாலும்கூட மலச் சிக்கல் உள்ளவர்களுக்குப் பெருங்குடல் புற்றுநோய் வரலாம் என அவர்கள் விளக்குகிறார்கள்.



இதன் அர்த்தம் நார்ப் பொருள்களால் பிரயோசனம் இல்லைஎன்பதல்ல. நார்ப்பொருள் அதிகம் எடுத்தால் பெருங்குடல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு குறைவுதான். ஆனால் கடுமையான மலச்சிக்கல் உள்ளவர்கள் மேலதிக நார்ப்பொருளை எடுத்தாலும்கூட தமக்கு அந்நோய் இல்லை என நம்பியிருக்க முடியாது. அவசியமானால் மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.

## ஒரு வாசகியின் கேள்வி:

# கருத்தடை மாத்திரையை எப்போ நிறுத்தலாம்?

கடந்த பதினைந்து வருடங்களாக கருத்தடை மாத்திரைகளைப் பாவித்து வருகிறேன். இப்பொழுது வயது 45 ஆகிவிட்டது. மாத்திரையை நிறுத்து என கணவர் கூறுகிறார். ஆயினும் பிள்ளைகள் வளர்ந்துவிட்ட இந்த வயதில் தற்செயலாகக் கருத் தங்கிவிட்டால் எனப் பயமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. உங்கள் ஆலோசனை என்ன?

**பதில்:** கருத்தடை மாத்திரைகளை நிறுத்துவதற்கென எந்த ஒரு குறிப்பட்ட வயதும் கிடையாது. மாதவிடாய் நிற்கும் பருவத்தை (*Menapause*) அடைந்தால் மாத்திரமே அதனை நிறுத்தலாம். ஆயினும் கருத்தடை மாத்திரைகளை உபயோகிக்கும் உங்களைப் போன்றோர் இப் பருவத்தை அடைந்தாலும் கூட மாதாமாதம் மாதவிடாய் போல தீட்டுப்படவே (*Withdrawal Bleeding*) செய்யும். இதனால் உண்மையாக மாதவிடாய் நின்றுவிட்டதா இல்லையா என அறிய முடியாமல் இருக்கும்.

ஆயினும் 50 வயதை அடைந்தால் மாத்திரையை நிறுத்தலாம். அப்பொழுதும் கூட மாதவிடாய் நின்றுவிட்டதை நிச்சயப்படுத்த ஒரு சில மாதங்கள் செல்லலாம். அதுவரை ஆணுறை, லூப் போன்ற வேறொரு முறையைக் கடைப்பிடித்தால் மாத்திரமே கருத் தங்காமல் இருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

மாற்று முறையாக *Follicular stimulating hormone-FHS* என்ற ஹோர்மோனின் அளவை ஆறு வார இடைவெளியில் இரண்டுதடவைகள் பார்த்து, இரண்டு தடவைகளும் அவை வழமைக்கு மாறாக அதிக அளவில் இருந்தாலும் மாதவிடாய் நின்றதை உறுதிப்படுத்தலாம்.

தற்காலிக கருத்தடை சாதனங்களில் முக்கியமானது *Condom* எனப்படும் ஆணுறை! ஆண்களுக்கு *Condom* போல பெண்களுக்கு *Diaphragm*. சின்னஞ்சிறிய கப் போல சற்றே குவிந்து இருக்கும் இந்த சாதனத்தை வஜினா வழியாக உள்ளே செலுத்திக் கொள்வார்கள். பலமுறைகளுக்கு இதை சுத்தப்படுத்தி உபயோகிக்கலாம். 'லூப்' எனப்படும் மற்றொரு வகை. ஆங்கில எழுத்து *T* வடிவில் இருக்கும் இந்த சாதனத்தை வஜினா வழியாக உள்ளே செலுத்தி கருப்பைக்குள் நுழைத்து விடுவார்கள். தீட்டு நிறைய வரும் பிரச்சினையுள்ள பெண்களுக்கு 'லூப்' சரிப்பட்டு வராது. வாய் வழியாக சாப்பிடும் மாத்திரைகள் இன்னொரு வகை. குழந்தைக்குப் பாலூட்டும் வரைக்கும் இந்த மாத்திரை சாப்பிடக் கூடாது. நீரிழிவு நோய்க்காரர்களுக்கும் இது சரிப்படாது! 'ஸ்பெர்மிஸைடல்' கிரீம் கூட ஒருவகை கருத்தடை சாதனம்தான். பெண்களுக்குரியது. வஜினாவின் உள்பகுதியில் இந்த கிரீமை தடவிக் கொண்டால், அது உள்ளே நுழையும் விந்துவிலிருக்கும் உயிரணுக்களை அழிக்கிறது.

## இனிப்புச் செய்தி

சுக்கிரலோஸ் (*Sucrolose*) என்பது ஒருவகை இனிப்பு. இது சீனியைவிட 600 மடங்கு இனிப்பானது. ஆனால் இனிப்புச் சக்தி (*Calorie*) பெறுமானம் சிறிதும் கிடையாது. எனவே இது நீரிழிவாளர்களுக்கு இனிப்பான செய்தி என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. கோப்பி, தேனீர், பழச்சாறு எதனுடனும் கலந்து குடிக்கலாம். அத்துடன் இது கடும் சூட்டினாலும் சேதமடையாது. எனவே இதனைச் சமையலிலும், இனிப்புச் சிற்றுண்டிகளிலும், பேக்கரித் தயாரிப்புகளிலும் கூட சேர்க்கலாம்.

அதைவிட இனிப்பான செய்தி அமெரிக்காவின் உணவு, மருந்து அதிகார சபை (*U.S.F.D.A.*) இதனை உணவுகளில் கலந்து தயாரிப்பதற்கான அனுமதியையும் கொடுத்து விட்டது. பேக்கரி உணவுகள், குளிர்பானங்கள், சூயிங்கம், கோப்பி, தேநீர், சொக்கிளேட் போன்ற இனிப்பு வகைகள், பழச்சாறுகள், ஜாம், ஜெலி, பாற்பொருட்கள், புடிங், பதனிடப்பட்ட பழங்கள், பழச்சாறு, சோஸ், மருந்துகளில் சேர்க்கும் சிரப் போன்ற 15 வகை பொருட்களில் கலந்து தயாரிப்பதற்கான அனுமதியை அது வழங்கியுள்ளது. உருவத்தில் இது சீனியைப் போலவே வெண்ணிறப் பளிங்குகளாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடல் காணீரோ...!



யதார்த்ததைப் பிரதிபலிப்பதாகக் காட்டி கதை நகர்ந்து கொண்டிருக்கும் சமயம், ஏன் திடீரென்று மரத்தைச் சுற்றி, மண்ணில் உருண்டு, பனியில் சறுக்கியெல்லாம் ஒருவரை ஒருவர் துரத்திப் பாட ஆரம்பித்துவிடுகிறார்கள் என்கிற ஆச்சரியம் தமிழ்ப் படங்களைப் பார்க்கிறவர்களுக்குத் தொடர்ந்து இருந்து வரும்.

கதாநாயகனும் கதாநாயகியும் ஊமைகளாக இருந்தால்கூட, அவர்கள் கனவு காண்பதாகவாவது நாலு பாடல் வைத்துவிட வேண்டும். நாலு என்ற கணக்குக் கூட இப்போதுதான். நாற்பது வருடங்களுக்கு முன்பென்றால் பாடல்களுக்கிடையில் மூச்சு வாங்கும் நேரங்களில்தான் 'சுவாமி' என்றோ 'மோகனாங்கி' என்றோ ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவார்கள். மற்றபடி பாட்டு பாட்டு பாட்டுத்தான்.

இது, மருத்துவம் சோதிடம் உள்ளிட்ட புராணங்கள் வரலாறுகள் கதைகள் எல்லாமே பாட்டுகளாகவே நமக்குக் கடத்தப்பட்டு வந்ததன் தாக்கமாக இருக்க வேண்டும். பாட்டாலே பக்திசெய்தோம், பாட்டாலேபுத்திசொன்னோம், பாட்டிலேயே வாழ்க்கையைச் சொல்லி வந்திருக்கிறோம். தமிழோடிசை பாட மறந்தறியாதவர்கள் நாம்.....

காதல், சோகம், விரக்தி, வெறுமை போன்ற உணர்வுகளையெல்லாம் பாட்டில் சொல்லிவிடுவது வசனத்தை விடச் சுலபம் என்று நம்பப்படுகிறது. தவிரவும் இறுக்கமாகக் கதை நகர்ந்து கொண்டிருக்கும் கட்டங்களில் இடையே ஒரு பாடல் வருவது பார்வையாளர்களுக்கு ரிலாக்ஸாக இருக்கும் என்பதால் பாடல் காட்சிகள் அங்கங்கே புகுத்தப்படுகின்றன.

கதை வசனகர்த்தா, கமெரா மேன், இசையமைப்பாளர், எடிட்டர் போன்றோருடன் டான்ஸ் மாஸ்டர் என்றும் ஒருவர் அவசியம் தேவைப்படுவது பொதுவாக நம் படங்களில்தான். பாடல் காட்சிகளுக்கு எழுந்து வெளியே சிகரட் பிடிக்கப் போகிறவர்களை எழும்பவிடாமல் இழுத்து உட்கார வைக்க வேண்டிய சவாலை இந்த நடன இயக்குநர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

மனதினுள் காதல் புகுந்துவிட்டால், காதலர்கள் பாடி ஆடியாக வேண்டும் என்பது பார்வையாளர்களும் எதிர்ப்பார்க்கிற தமிழ்ப்பட விதி. இவர்கள் காதலிக்கிறார்கள் என்றால் உடனே சொர்க்கத்துக்குச் செய்தி போய்விடுகிறது. எங்கிருந்து எப்போது முளைத்தார்கள் என்பது தெரியாமல் கும்பலாக வரிசையாக காதல் தேவதைகள் இறங்கி வந்துவிடுகிறார்கள். பின்னணியில் ஒரு பெரிய கும்பல் இல்லாவிட்டால் நம்மவர்களுக்குக் காதல் வராதோ என்னும்படியாகிவிட்டது.

எஸ்.வி. சேகர் ஒருபடத்தில் தன் காதலியைப் பார்த்துக் கேட்பார்: "நமக்குத்தான் காதல் வந்துவிட்டதே.... பின்னால் வந்து ஆடுவதற்குப் பெண்களை இன்னும் காணவில்லையே...."

அப்போது நாலு பெண்கள் ஆடியபடியே வருவார்கள். அவர்களிடம் சேகர் கேட்பார்: "அதென்ன மற்றவர்களுக்குக் கும்பல் கும்பலாக வந்து ஆடுவீர்கள்.... எங்களுக்கு வெறும் நாலு பேர் மட்டும்தானா?"

அந்தத் தேவதைகள் சொல்வார்கள்: "உங்கள் மூஞ்சிக்கு நாலு பேர் போதும், சும்மா பாடுங்கள்...."

பாடல் காட்சிகளின் பின்னணியில் வெள்ளை உடையில் பல பெண்களை ஓடவிட்டு, இந்தக் காதல் தேவதைகள் சமாச்சாரத்தைப் பிரதானமாக்கிவிட்டவர் பாரதிராஜாதான் என்று சொல்கிறார்கள். இன்று பாடல் காட்சிகளில் ஃபிரேமுக்குள் இந்த ஆட்டம் போடும் கூட்டம் எவ்வளவு நிறைந்திருக்கிறதோ அவ்வளவுக்கு அந்தப் படம் 'றிச்' (Rich) ஆகப் பார்க்கப்படுகிறது.

புதிது புதிதாகக் கிளர்ச்சியூட்டும் அங்க அசைவுகளைச் சொல்லித் தந்து அவர்களை ஆட்டுவிக்கும் நடன இயக்குநர்கள், பாடல் காட்சிகளுக்கு யாரும் எழும்பி வெளியே சென்றுவிடாமல் பார்த்துக் கொள்வதற்குப் புதுப் புது உத்திகளைக் கையாள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

கதாநாயகியாகிவிடும் கனவுகளோடு, அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்படியாக நினைத்து ஓரிரண்டு காட்சிகளில் ஆட வருபவர்கள்தான் குரூப்டான்சர்கள் எனப்படும் இந்த நடனப் பெண்மணிகள். ஆனால் அவர்களில்பலர் கடைசிவரை "எக்ஸ்ட்ரா"க்கள் எனப்படும் கோடம்பாக்கக் குலப் பெயருடன் அவமானப்படுவதும் தமிழில் திரைப்படம் ஆரம்பித்த காலத்திலிருந்து தொடர்கிறது. இருந்தும் பலரது நம்பிக்கைக்குக் காரணம் இப்படிக் குழு நடனமணிகளாக வந்த ஒரு சிலர் கதாநாயகிகளாகவும் வெற்றிக்கொடி நாட்டியிருப்பதுதான்.

இன்றும்கூட பிரமிப்போடு சிலாகிக்கப்படும் 'சந்திரலேகா' பட ட்ரம் டான்ஸில் ஆடியவர்கள்தான் லலிதா, பத்மினி, வி. என். ஜானகி, சுந்தரிபாய், ஹீராலால் மாஸ்டர், தங்கப்பன் மாஸ்டர் போன்றவர்கள். இவர்கள் பிற்காலத்தில் நடிகைகளாகவும், டான்ஸ் மாஸ்டர்களாகவும் பிரபலமானது பலருக்கும் நம்பிக்கைக் கனவுகளை அளித்தது.

இன்று குரூப் டான்ஸில் ஆடுகிறவர்களுக்கே நிரந்தரமாக நல்ல வருமானம் கிடைப்பதால், கதாநாயகிக் கவலையை விட்டொழித்துவிட்டுப் பலர் சந்தோஷமாக ஆடிக்கொண்டிருக்கிறார்கள். கதாநாயகிகளாய் வருவதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், கனகா போல, மந்த்ரா போல, வனிதா, ப்ரீதா போல இரண்டொரு படங்கள் தோல்வி கண்டுவிட்டால் ராசியில்லாத நடிகை என்று முத்திரை குத்தி வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். ஆனால் நடனக் கலைஞர்களுக்கோ படத்தின் வெற்றி தோல்வி பற்றிக் கவலை கிடையாது.


கதாநாயகிகளாய் வருவதிலுள்ள கஷ்டம் என்னவென்றால், கனகா போல காணாமல் போய்விட வேண்டி வரலாம்...

சாதாரணமாக ஒரு நாள் ஷூட்டிங்குக்கு 500 ரூபா சம்பளம். அதுவே ஹிந்திப் படத்துக்கு ஆடுவதாக இருந்தால் 1000 ரூபாய். வெளியூர் படப்பிடிப்பு என்றால் போக வர ரிக்கெற், ஹோட்டல் செலவு மற்றும் பேட்டாவும் உண்டு.

பெரும்பாலும் தமிழ் நடன டைரக்டர்களுக்கே ஹிந்தியிலும் மதிப்பு இருப்பதால் எப்போதும் வேலை இருந்துகொண்டிருக்கும். புலியூர் சரோஜா, பிரபுதேவா, ரகுராம், ஜான்பாபு என்று இங்குள்ளவர்களின் ஆட்டத்தைப்பார்த்துத்தான் வடக்கே உள்ளவர்களும் வாய் பிளந்து நிற்கிறார்கள்.

இதனால் பலநூறு தமிழ் நடனமணிகள் மும்பையிலேயே போய்த் தங்கியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இன்றைய நடன டைரக்டர்களும் ஒரு காலத்தில் குரூப் டான்ஸில் ஆடியவர்கள்தான். நடன இயக்குநர் ஆடுவதற்கென்றே தனியாகப் பாட்டுக் கொடுத்ததெல்லாம் பின்புதான். பிரபுதேவா கூட 'அக்னி நட்சத்திரம்' படத்தில் கார்த்திக்குடன் 'ராஜா ராஜாதி ராஜா' பாட்டுக்கு ஆடியவர்தான்.

வில்லனாக நுழைந்து கதாநாகயர்களாகியவர்கள் போல், நடன விற்பன்னர்களாக ஆரம்பித்து நாயகர்களாகிவிட்டவர்கள் உண்டு. இவ்வாறு முதலில் வந்தவர் நாகேஷின் மகன் ஆனந்பாபுதான். "தங்கைக்கோர் கீதம்" படத்தில் முதன் முதலில் ஆடினார். "உதயகீதம்" படத்தில் இவருக்காகவேஒரு பாடல் காட்சி அமைக்கப்பட்டது.

"ஏப்ரல் மேயிலே பசுமையே இல்ல" என்று இதயம் படத்தில் ஒரு பாடலில் தொடங்கிய பிரபுதேவா "வால்டர் வெற்றிவேல்"லில் 'சிற்றெறும்புக் கடி'யுடனும், ஜெண்டில் மேனில் 'சிக்குபுக்கு ரயி'லுடனும் கதாநாயகனாகப் புரமோஷன் பெற்றார்.

இதயம், ரோஜா, ஆசை, ஜீன்ஸ் போன்ற பல படங்களில் பாடல்களுக்கு நடனமாடி இன்று பிரபலமாகியுள்ள இவரது அண்ணன் ராஜு சுந்தரமும் விரைவில் கதாநாயகனாக நடிக்கப் போகிறார்.

கமல்ஹாசன் கூட ஆரம்பத்தில் தங்கப்பன் மாஸ்டரிடம் நடன உதவியாளராக இருந்துதான் நாயகனானார்.

நடனக்கலைஞர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களுக்குள்ளேயே காதலித்துக் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். ரகுராம் - கிரிஜா, லலிதா - மணி, ஜான்பாபு - அவர் மனைவி.... இப்படிப் பலர் ஜோடிகளாகவே நடனக் குழுக்களில் இருக்கிறார்கள்.


'உள்ளத்தை அள்ளித் தா'வில் 'அழகிய லைலா இவளது ஸ்டைலா' என்று அந்த ஆட்டத்தில் அதிர வைத்த நெளிவுகளினாலேயே கலங்கடித்த ரம்பா, 'அழகுக்கு இவள்தான் தாய்நாடா' என்று பார்ப்பவர்கள் பலரையும் பித்தாக அடித்துக் கொண்டிருப்பவர். பாதி உடையோடு இப்படி ஒரு பார்வை.... இதுவே ஆலகால விஷமல்லாமல் வேறென்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியூர் சரோஜா, டைரக்டர் சீனிவாசனைத் திருமணம் செய்து கொண்டது போல, டான்ஸ் மாஸ்டர் ஜீவா, டைரக்டர் 'யார்' கண்ணனை மணந்திருக்கிறார்.

பிரபுதேவாவின் வருகைக்குப் பின்பு திரை நடனத்திற்கு மவுசு கூடியிருக்கிறது. படங்களுக்குத் தேவையான சிறப்புத் தகுதிகளுள் ஒன்றாக நடன இயக்கமும் வெகு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. பல இளைஞர் இளைஞிகள் உடம்பை எத்தனை துண்டுகளாக ஒடித்து நெளிக்க முடியும் என்று பிரமிப்புக் காட்டப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'வால்டர் வெற்றிவேல்' படத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணம் பிரபுதேவா, சுகன்யா ஆடிய 'சித்தெறும்பு கடிக்குது' பாட்டுத்தான் என்று அந்தப் படத்தின் இயக்குநர் பி. வாசுவே சொல்லியிருக்கிறார்.

பாடல்கள் பிரபலமாவது, அது படமாகும் விதத்தைப் பொறுத்ததுதான் என்று பல இசையமைப்பாளர்களும் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'ரோஜா' படருக்குமணியேபாடலைப் போல கிழவிகள் ஆடுதல், குழந்தைகள், கிழவர்கள் ஆடுதல், ஒரு பாடலுக்கென்றே பிரபல நடிகைகள் வந்து ஆடிவிட்டுப் போதல்... என்று ஒவ்வொரு பாடலுக்கும் ஏதாவது புதுமை செய்துவிட வேண்டும் என்று முயல்கிறார்கள் நடன இயக்குனர்கள். டான்ஸ் மாஸ்டர்கள் நடத்தும் நடன வகுப்புகளுக்கும் திரள்கிறது இன்றைய இளைஞர் பட்டாளம். •




பெண்ணுடல்களை நம்பியே பாடல் காட்சிகள் பெரும்பாலும் அமைக்கப்படுகின்றன. கதாநாயகியின் குளோசப்பிலிருந்து கமெரா லோங் ஷொட்டுக்கு நகர்ந்தால் ஃபிரேமை நிரப்புவதற்கு சொடக்குப் போட்டால் வந்துவிடுகிற பெண்கள் கூட்டம் எப்போதும் தயாராக இருக்கும்.

கதாநாயகியின் அங்கங்களையே பெருமளவுக்குக் காண்பித்து, வெற்றிப் படங்களை எடுத்துக் குவித்தவர் ஹிந்தி நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் ராஜ்கபூர். ஆனானப்பட்ட பத்மினியையே தன் படத்தில் மேற்சட்டை இல்லாமல் நடிக்க வைத்தவர். 'பொபி' படத்தில் டிம்பிள் கபாடியாவையும், 'சத்யம் சிவம் சுந்தரம்' படத்தில் ஜீனத் அமானையும், 'ராம் தெரி கங்கா மெயிலி'யில் இன்றைய மந்தாகினியையும் இடுப்புக்கு மேல் ஏறக்குறைய எல்லாவற்றையும் காண்பிக்க வைத்து அந்தக் காலத்திலேயே 'புரட்சி' செய்தவர் அவர்.

இன்றைய நம் படங்களில் கதாநாயகி வேடத்திற்கு நடிக்க வரும் நடிகைக்கு அதுவே முதல் படமாக இருந்தால் நீச்சல் குளத்திலோ மழையிலோ தெப்பலாக நனைந்துதான் ஆகவேண்டும் என்பது எழுதாத விதியாக இருந்து வருகிறது. டெனிஸ் விளையாட்டோ கிட்டிப்புள்ளோ எதுவாக இருந்தாலும் விளையாட்டின் போது கதாநாயகியின் அதிர்வுறும் அங்கங்களையே கமெரா பிரதானமாய்க் கண்டுகொள்ளும். குறிப்பாக எந்த விளையாட்டாக இருந்தாலும் அவளை ஓடவோ குதிக்கவோ விட்டு மார்புப் பிரதேசத்தில் மையம் கொள்ளும் கமெரா.

சமீபத்திய குமுதம் இதழில் வந்த ஜோக் ஒன்றில், படம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் கேட்பார்: "ரெண்டு பேரும் காதலித்துக் கொண்டிருக்கும் போது எதுக்குத் திடீரென்று குகையைக் காட்டுகிறார்கள்?" அதற்கு அடுத்தவர், "அது குகை இல்லை.... கதாநாயகியின் தொப்புளைக் குளோசப்பில் காட்டுகிறார்கள்" என்பார்.

கதாநாயகியின் தொப்புள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது சின்னக் கவுண்டரில் சுகன்யா தொப்புளில் விஜயகாந்த் பம்பரம் விட்டதிலிருந்துதான். 'கதாநாயகிக்கு விசர் நாய் கடிப்பதாய் கதை எடுத்தால் நல்லது. தொப்புளைச் சுற்றிப் பதினான்கு ஊசி போடுவதை விலாவாரியாய்க் காட்டலாம்' என்னுமளவுக்கு அந்த வயிற்றுப் பிரதேசத்தைக் காண்பிப்பதில் கவனமெடுத்துக் கொண்டார்கள்.



சினிமாவில் பெண்ணின் அங்கங்களின் மீதான ஆராய்ச்சி தொடர்கிறது.... ஊர்மிளாவின் கால்களிலிருந்து தொடங்குகிறார் சல்மான்கான்.

ஜென்டில் மேனில் நாயகனின் வாள் நுனி நாயகியின் தொப்புளைத் தொடும். ஒரு கண நேரமாக இருந்தாலும் இந்த பிம்பம் மனதில் தங்கிவிடும்படியான வலிமையைக் கொண்டிருக்கிறது.

இதுபோலவே, கார்த்திகை எண்ணெய் விளக்கெரிப்பதற்கு நிரோஷா தொடையில் திரிகள் சுருட்டுவதை நீண்ட நேரமாய்க் காண்பிப்பார்கள் ஒரு படத்தில்.

மோதலில் துவங்கி, கதாநாயக சாகசங்களில் மயங்கிக் காதலாகி, மனைவியானதும் சேலை உடுத்திக் கொண்டு, புருஷனின் சட்டைக்குப் பொத்தான் தைப்பதும், பின் தூங்கி முன்னெழுந்து தாலியைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு குளித்துக் கோலம் போட்டு கோப்பிடம்ளருடன் அவனை எழுப்புபவளாகவும் காண்பிக்கப்படும் கதாநாயகி, தமிழ்ப் படங்களில் பாலுணர்வுக் கிளர்ச்சியூட்டவே பயன்படுத்தப்பட்டு வருகிறாள்.


தபுவின் மத்தியப் பிரதேசத்தில் நிலைகொள்கிறார் நாகார்ஜுனன்


வினிதாவிடம் ஒருபடி முன்னேறியிருக்கும் ஜெயராம் தலை நிமிர்வது எப்படி?


ரோஜாவின் முகத்துக்கு வந்து விட்டார் பாலகிருஷ்ணா. இது நாடி பிடிப்பா இல்லை, கடிப்பா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகபலன் : கணித்துச் சொல்பவர்



**மேஷம்**: இரகசியம் என்பதை ஒன்றுமறந்துபோய்விடவேண்டும். இல்லை கேட்காமலே இருந்து விடவேண்டும். இரண்டும் இல்லாதது ரகசியமல்ல. உடல்நலக் குறைவு தென்படுகிறது. அதனாலோ என்னவோ குடும்பச் சூழல் கொஞ்சம் கப்சிப். செலவுதான் அதிகம், வரவைவிட. வியாபாரம், தொழில் இரு சாராரும் ஒரு நாட்டமற்ற மனநிலையில் இருப்பீர்கள். பெண்களில் தொழில் செய்வோருக்கு அனாவசிய குறுக்கீடு. குடும்பப் பெண்கள் அச்ச மனோபாவத்துடன் வீண் எண்ணங்களில்தவிப்பார்கள். குழந்தைகள்விதிவிலக்கு. அவதானியுங்கள். சுகமாக இருப்பார்கள். மாணவ மாணவிகள் கல்வியை அடகு வைக்கும் சூழல். பலன் எது எனத் தெரியுந்தானே? *A good thought never fails.*



**ரிஷபம்**: கம்ப்யூட்டர் படித்துவிட்டோமென்று சக மனிதர்களையும் புரோகிராம் பண்ணுகிறேன் என்று கிளம்பிவிட்டால்... கேட்கவே வேண்டாம். உடல் நலத்திற்கு ஊசி, மாத்திரைகள்தான் தஞ்சம். குடும்பநிலை-சுமாராகஇயங்கும். வியாபாரம், தொழில், வீட்டில் சும்மா இருப்போர் அனைவருக்கும் காசு என்று ஏதாவது இருக்கிறதா என்றுஎண்ணத் தோன்றும் காலம். தொழில்புரியும் பெண்கள் ஒருவாறு தலையடித்துக் கொண்டு போனால் நல்லது. குடும்பப் பெண்கள் வாங்கிக் கட்டிக்கொள்ள வரிந்து கட்டிக்கொண்டு நிற்பீர்கள். பொறுமை தேவை. மாணவர்கள் பெரியோரை இனங்கண்டுமதித்து, திருந்திக்கொள்ளவேண்டியது அவசியம். குழந்தைகள் மலச்சிக்கல், சளி போன்ற உபாதைகளால் தொல்லைப் படுவார்கள். *No man allows a chicken to die. Naturally.*



**மிதுனம்**: மிருதுவாகவும், அழகாகவும் தனது குரலை பயிற்றுவித்து, பழகி, ஒருவன் அழகாக ஒரு பாடலைப் பாடிவைக்க, அதைப் பாடுகிறேன் ஸ்வாமி என்று எல்லாரும் அவனைப் போலவே பாடுவது சாதாரண பழக்கம்தான். தப்பில்லை. பாவம் பாடியவன்! உடல் நலத்திற்கு ஒரு ஆறுதல் வார்த்தைகூடத் தென்படவில்லை. குடும்ப நிலை - அணுவளவுகூட உங்களுக்கு மரியாதை இருக்காது. திரும்பக் கிடைக்கிறது - வாங்கியாகத்தான் வேண்டும். தொழில் புரிவோர் தொடர்ந்துதிறமையைவளர்த்துக் கொள்வீர்கள். வியாபாரிகள் காட்டில் நல்ல மழை. குடும்ப, தொழில் புரியும் பெண்களுக்கு ஆசுவாசப்பட்டுக் கொள்ளக்கூடிய நிலை தெரிகிறது. குழந்தைப் பிள்ளைகள் துடிப்போடு, சுட்டித்தனம் அதிகமாக இருக்கும். அனுமதியுங்கள் - அளவோடு. மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுக்கள் குவியும். தொடர்ந்து முன்னேற வாழ்த்துக்கள். *Kind serve makes the food more delisious.*



**கடகம்**: யாரோ ஒருவருடைய வாகனத்தின் முன் ஸீட்டில் உட்கார்ந்து ஒரு கையை ஜன்னலுக்கு மேலே வைத்தவுடனேயே ஒரு "இது" வந்துவிடும். என்ன செய்ய? நடப்பு அப்படி! உடல் நலத்தில் அவ்வளவு பாதிப்புகள் இருக்காது. குடும்ப நிலை கன்னா பின்னா என்றாகுமுன்னரே கண்காணியுங்கள். தொழில் புரிவோர் மேலிடத்தாரால் அலைக்கழிய வாய்ப்புண்டு. வியாபாரிகள் கமிஷன் விஷயத்தில் சிக்கித் திண்டாட நேரிடும். குடும்பப் பெண்களுக்கு தொல்லைகள் இருக்காது. பணப் புழக்கம் சுமார். தொழில் புரியும் பெண்களுக்கு மேலதிக ஆதாயம் கிடைக்கும். குழந்தைகள் சுறுசுறுப்பாகத் திரிவார்கள். ஊக்கப்படுத்துங்கள். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் ஏற்பட்டு முன்னேறும் தருணம். பரிபூரண ஆசிகள். *The horse take us a real ride, if it's a horse race.*



**சிம்மம்**: சிரிக்காமலேஇருப்பதுதான் தங்களின் தனித்தகைமை. மற்றவர்கள் மதிப்பார்கள் என்றெல்லாம் நினைத்துக்கொண்டு முகத்தை வைத்துக் கொள்ளும் விவகாரம் கொஞ்சம்.... சரி விடுங்கள். உடல்நலம் பிரச்சினை தராது. தற்போதைக்கு குடும்பச் சூழல் அமைதியாக இருக்கும். அனுமதியுங்கள். தொழில் செய்வோர், வியாபாரிகள் இரு சாரார்க்கும் இரண்டும் கெட்டான் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. அவதானம். குடும்பப் பெண்கள் அக்கடா என்று இருக்கலாம். தொழில் புரிவோர் கவனக்குறைவால் குட்டுப்பட வேண்டிவரும். சிறுவர்கள் சோர்ந்த நிலைக்கு தள்ளப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டிய நேரம். மாணவமாணவியர் துடுக்குத்தனத்தைக் கைவிட வேண்டும். மீண்டும் கற்க காலம் திரும்பாது. *Do not try to give violin music through your nose.*



**கன்னி**: நட்புக்காக உயிரையும் தருவேன் என்றுகூறினால் கொடுத்த நாலாயிரத்தை மட்டும் திரும்பக் கேளுங்கள். உயிர் வேண்டாம். பாவம் உடல் நலம் விட்டு விட்டு வரும் தலைவலி மாதிரி, ஒவ்வொரு ரூபத்தில் தொல்லை தரும். வைத்தியரை நாடுங்கள். குடும்பச் சூழல் அமைதியாக இருக்கும். வியாபாரிகள் லாபம் பெறவும், தொழில்புரிவோர் முன்னேற்றத்திற்கான மாற்றங்கள் பெறவும் சகல குறிகளும் தென்படுகிறது. தொழில் புரியும் பெண்கள், பிரயாணங்களில் கவனம். மற்றபடி பாதிப்பில்லை. குடும்பப் பெண்கள் மற்றவர்களோடு புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சியுங்கள். பிள்ளைகள் ஷேமமாக இருப்பார்கள். மாணவ மாணவிகள் உற்சாகத்தோடு கற்கலாம். சகல துறைகளிலும் கவனத்தை செலுத்துங்கள். *Always respect the instinct and first impression.*



**துலாம்**: சகலதையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, விட்ட இடத்திலிருந்து தூங்க ஆரம்பித்தால் கனவுகூட தொடர்ந்து வராது மற்றவைஎப்படி...? உடல்நிலையில் வெளிப்புறம் சரியாக இருக்கும். எதற்கும் ஒரு பூரண செக்கப் போட்டால் நல்லது. குடும்பச் சூழல் ஜடநிலை என்பார்களே அப்படி இருக்கும். நீங்களே புரிந்து கொள்ளலாம். வியாபாரிகள் புதிய முதலீடுகளில் அகப்பட்டதை அனுபவிக்கும் நேரம். தொழில் புரிவோர் தப்பித்து சுமாராக ஓட்டலாம். பெண்களில் குடும்பத்தார் நிலையில் பாதிப்புக்கள் இருக்காது. தொழில் புரிவோருக்கு வரவு நன்றென்றாலும் ஓயாத வேலையில் பாதிப்படைவீர்கள். ஆபீஸை வீட்டுக்குக் கொண்டுபோகாதீர்கள். பிள்ளைகள் சாதுவாக இருப்பார்கள். கவனித்துக் கொள்ளுங்கள். மாணவருக்கு அவ்வப்போது அசதி உண்டாகும். முகத்தைக் கழுவிக் கொண்டு தொடர்ந்து படியுங்கள் பின்னர் ஓய்வெடுக்கலாம். *If you can drive do not use for that for anything else but to travel.*



**விருச்சிகம்**: மற்றவர்களுக்கு அறிவுரை, பிறருக்கு உதவுதல், மேம்பட்ட சிந்தனைப் போக்கு நன்றாகத்தான் இருக்கிறது. தலைமயிரைவெட்டவும். கொஞ்சம்நினைவையும்நேரத்தையும் வைத்துக்கொள்ளவேண்டும். வைத்தியரிடம்போகாமல்இருக்க ஆவனசெய்வது உங்கள் கடமை. குடும்பநிலை ஒற்றுமையாகவும் அமைதியுடனும் இருக்கும். வியாபாரம் தொழில்செய்யும் இருசாராரும் சோம்பலை ஒதுக்கி கவனமாக நேரத்தை மதியுங்கள். பணக்கஷ்டம் வராது. குடும்ப, தொழில் புரியும் மங்கையர் திருப்தியாக புன்னகைக்கலாம். ஆனால் வீண் செலவு அதிகம். பிள்ளைகள் காயப்படுத்திக் கொள்ளப் பார்ப்பார்கள். கவனம். மாணவ மாணவிகள் அசட்டுத்தனமான காரியங்களை அறவே மறக்க வேண்டிய தருணம். அவதானமாக படியுங்கள். *While admiring a printing do not analize the painter.*



**தனுசு**: நினைவால் வியாபாரம் தொடங்கி வாயால் செய்து கனவில் கோடீஸ்வரனாகி முடிந்தது. கடைசியில் கடன்காரன் கழுத்தைப் பிடிக்க மாலையோடா வருவான்? குடும்பச் சூழ்நிலை வெளியே சொல்லுமளவுக்கு இருக்காதென்றால் விளங்கிக் கொள்ளுங்கள். உடல் நிலையும் அதேதான். தொழில் செய்கிறீர்களா? சம்பளத்தை எடுக்குமுன்னே கடன். வியாபாரமோ அத்திவாரம் நன்றாயிருந்தால் நகரும். மற்றும்படி மந்தம். தொழில் புரியும் பெண்களுக்கு பிரச்சினைகள் பாரதூரமிருக்காது. ஓயாத வேலை. மற்றபடி பாதகமில்லை. பிள்ளைகள் தானுண்டு - பாருண்டு என்றிருப்பார்கள். மாணவமாணவிகள் ஆசிரியர்களோடு சுமுகமான முறையில் மதிப்பையும் அறிவையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். அடங்காத்தனம் என்று பெயர் எடுத்துவிடக் கூடாது. *If somebody neglects you - recall the past and you'll find why?*



**மகரம்**: அங்கே நியூக்ளியர் அடமிக் என்று ஏதேதோ நடக்கிறது. அடுப்படியிலிருந்து சர்சர்ரென்று தேங்காய் துருவிக்கொண்டு நெருப்பைத் தொட்டால் சுடாமலிருக்க வழி தேடினால்......தலைவிதி! உடல் நலம் சுமார். குடும்பநலம் பாதகமில்லை. பொருளாதாரம் வியாபாரிகளுக்கு சொல்லத் தேவையில்லை. அந்தளவுக்கு நாலா பக்க இடி. தொழில் செய்வோர் ஓரளவுக்குத் தப்பிப்பீர்கள். தொழில் புரியும் பெண்கள் சில சலுகைகள் பெறுவீர்கள். குடும்பப் பெண்கள் நிலையில் பெரிய மாற்றங்கள் தென்படவில்லை. சிறார்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படும். அப்படியே கையாளுங்கள். மாணவ மாணவியர் வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி கல்வியில் தேர்ச்சி பெறக்கூடிய குறிகளுண்டு. பயன்படுத்துங்கள். வாழ்த்துக்கள். *If kindness fails apply none.*



**கும்பம்**: அதிகமாக கிடைக்கும்போது ஒரு அச்சம் ஏற்படும். அதைப் போக்க சில மாற்று வழிகள் பழக்கங்கள் ஏற்படும். அந்தப் பழக்கங்களால் கிடைத்தவை போய்விடும். பழக்கங்கள் போகாது... உடல்நலம் குறைவிருக்காது. குடும்பம் சீராகி நல்ல நிலைக்கு வர வாய்ப்புண்டு. வியாபாரிகள், தொழில் புரிவோர் இருசாராருக்கும் இம்மாதம் நல்ல பல வாய்ப்புகள் ஏற்படும். குடும்பப் பெண்கள் சுற்றத்தாரோடு மகிழ சந்தர்ப்பங்களும், தொழில்புரியும் பெண்கள் சலுகைகள் பெறவும் அறிகுறியுண்டு. பிள்ளைகள் துடிப்பாக இருப்பார்கள். மாணவ மாணவியர் உற்சாகமாக கல்வியில் கருத்தைப் பதிக்க உகந்த காலம். ஆசிகள். *Apicture gets its final touch when framed.*



**மீனம்**: நம்மைப் பற்றி அவதூறு பேசிவிட்டாரென்பதற்காக கோபிப்பது, ஒன்றுமே பேசவில்லை என்பதற்காக கோபிப்பது ஒரு முறை. வேறு யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறாரென்று கோபிப்பது ஒரு முறை. எல்லாவற்றிலுமே கடைசி கோபம்தான். உடல்நலம் வைத்தியரிடம் கட்டாயம் போகவைக்கும். குடும்பத்தில் பாதிப்புக்கள் இருக்காது. வியாபாரிகள் இழந்ததில் சிலதை மீட்கலாம். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் வெறுப்பு தோன்றும். வளர விடாதீர்கள். தொழில் பார்க்கும் மற்றும் குடும்பப் பெண்கள் சுமாரான பலனடைவார்கள். நோய்வாய்ப்பட வாய்ப்பிருக்கிறது. தண்ணீர் விடயங்களில் கவனமாயிருங்கள். மாணவ மாணவியர் முன்னேறக்கூடிய அறிகுறிகள் உள்ளது. *After the jorney remember to pay the fare.*

**கிரகாச்சாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்




**தோட்டத்து கதாநாயகர்கள்**
**கே. கோவிந்தராஜ்**
**துரைவி பதிப்பகம்,**
**85, இ. சரவணமுத்து மாவத்தை, கொழும்பு 13.**
**விலை: 120 ரூபா. பக்கம்: 186.**

கதையுமல்லாத, கட்டுரையுமல்லாத ஆனால் இரண்டின் ஜீவநாடி களையும் உள்வாங்கியிருக்கும் விவரண எழுத்துமுறையை 'நடைச்சித்திரம்' என அழைக்கின்றனர். பாத்திரச் சித்தரிப்பும், சூழல் விவரணங்களும் சிறுகதையினுடையதைப் போலவே அமைந்தாலும், சிறுகதைக்குத் தேவையான 'கதையம்சம்' நடைச்சித்திரத்தில் கிடையாது. அதேவேளை கட்டுரைகளை விட வாசிப்புச் சுவையூட்டக்கூடிய விவரிப்புகளைக் கொண்டிருப்பவை.

1968 முதல் எழுதிவரும் கே. கோவிந்தராஜ் மலையக எழுத்தாளர்களில் முக்கியமானவர். தினகரன் வாரமஞ்சரியில் 'கங்குலன் பக்கம்' எழுதிவருபவர். மலையக வாழ்வின் மறக்க முடியாத மனிதர்களையும், அந்த வாழ்க்கை முறையையும் உரைநடை ஓவியங்களாகத் தீட்டியிருக்கிறார் இந்நூலில்.

மட்டக்கொழுந்து மாரியாத்தா, சிலம்படி பால்சாமி, மருத்துவச்சி சீனியாத்தாள், பெட்டிக்கடை பெரிய சாமி, செக்றோல் சின்னையா, கந்தையா கங்காணி, தோட்டத்து வாத்தியார், ஆயம்மா அலமேலு..... என்றவாறு மொத்தம் 39 பாத்திரங்களை விவரிக்கும் பின்னணியில் மலையக வாழ்வை கவிதாநயம் பொங்க அறிமுகப்படுத்துகிறார் கோவிந்தராஜ்.

நூலை அழகிய முறையில் தயாரித்திருக்கிறது துரைவி பதிப்பகம். உள்ளே ஒவ்வொரு பாத்திரத்திற்கும் தூரிகையால் உயிர் தந்திருக்கிறார் 'சந்ரா'.

**நூலிலிருந்து...**

'அதை ஏன் கேக்குறீங்க. வரவர எனக்கு இந்த வேலையே வேணானு போச்சிங்க. ஒரு ரூபா அம்பது சதம் செக்றோல்ல புடிக்குறாங்கன்னுட்டு வீட்டுக்கு ஐம்பது உடுப்புக்கு மேல அழுக்கு போடுறாங்க. புள்ளங்கவூட்டு பீத்துணியைக்கோட போடுறாங்கன்னா பாருங்க.... அதுலயும் இப்ப சங்கத்துல மாசத்துக்கு ரெண்டு வெள்ளை குடுக்கணும்னு பேசுறாங்களாம்' - வீராச்சாமி மேஸ்திரி.

............

'தலையில் நூலினால் குஞ்சங்கள் வைத்துப் பின்னப்பட்ட மப்ளர், கலர் பெனியன், கோடு போட்ட இந்தியா சாரத்தை மடித்துக் கட்டி, மஞ்சள் பொக்கட் வைத்த கறுப்பு பெல்ட்டைக் கட்டிக்கொண்டு, கையில் வெற்றுக் கயிற்றுச் சாக்குடனும், 112 றாத்தல் தூக்குத் தராசுடனும் போகிறாரே அவர்தான மரக்கறி அரமானிஸ். சிங்களம்தான் என்றாலும் நன்றகத் தமிழ் வரும். இடையிடையே வாறாங், போறாங், கவனிக்கிறாங், அடிக்கிறாங் போன்ற "றாங்"கான வார்த்தைகள் மட்டுமே அவரை சிங்களம் எனக் காட்டிக் கொடுக்கும்....'




**காலங்கள்**
**கிருஷாந்தி ரட்ணராஜா**
**கூடல் பதிப்பகம்**
**198/2, கீழை வீதி,**
**உவர்மலை, திருமலை.**
**விலை: 40 ரூபா.**
**பக்கம்: 47.**

பெண்களுக்காகவும் ஆண்களே சிந்தித்த, பேசிய, எழுதிய நீண்ட நெடுங்கால வரலாறு நம்முடையது. அவளது கனவுகளையும் ஆணே கண்டு சொன்னான். தேவைகளையும் அவனே தீர்மானித்தான். ஆண்டாள், ஔவை, காரைக்காலம்மை யாவரையும் துற விகளாக்கி விட்டோம்.

பெண்ணின் மொழியை பெண்ணிடமிருந்தே நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தருணமிது. தமிழிலும் ஆங்காங்கே சில வரவுகள். திருகோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட கிருஷாந்தி ரட்ணராஜாவின் கவிதைகளையும், நாட்குறிப்புகளையும் உடைய இச்சிறு நூலைப் பார்க்கும்பொழுது, மிக இளவயதிலேயே மரணமாகிவிட்ட கிருஷாந்தி பற்றிய கவலை பிரமாண்டமாய் அழுத்துவதை எவரும் உணராமலிருக்க முடியாது.

திருகோணமலை தள வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றி, கடும் நோய்வாய்ப்பட்டு கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் காலமான கிருஷாந்தியின் தேர்ந்த ரசனையும், வாசிப்பும், மக்களிடமான நேசிப்பும், சுதந்திர எண்ணமும், சிறுமைகள் கண்டு பொங்கும் உள்ளமும் நூலில் வெளிப்படுகின்றன. "இங்கே என்னுடைய இயற்கை ரசிப்பும், இனிமையான ஒரு மாலைக்காட்சியும், எதிர்காலத்தின் வாழ்க்கைப் போக்கைப் பற்றிய கற்பனையும் எழுதப்படாமல் போய்விட்டன...." என்கிறார் 93.02.11ந் திகதி நாட்குறிப்பில்.

**நூலிலுள்ள 'ஆண்மனிதனின் வெற்றி' என்ற கவிதை:**


அருமையான பொழுதுபோக்கு
கையில் பத்து ரூபாய்
இருந்தால் 'பெற்றா'விலிருந்து
முதலில் வரும் பஸ்ஸில் தொற்றல்
பிறைவேற் பஸ்ஸோ
இன்னும் கொஞ்சம் ஸ்பெஷல்
சேலையுடுத்த பெண்களின்
இறுகிய முதுகு தடவி
பேதைகளின்
உருண்டு திரண்ட மார்புகள்
அவைகள் விழுந்துவிடாது
தாங்கிப் பிடித்து
நிலைதடுமாறி விழுகின்ற
பெண்களின் கரங்களுக்கு
உதவிக் கரம் நீட்டி
இத்தனையும் அனுபவிக்கலாம் -
நாக்கிளிப் புழுக்களாக நெளியும்
பெண்கள்
இருக்கும் வரையில்.



**கண்டி இராச்சிய முஸ்லிம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள்**
**ஏ. எம். நஜிமுதீன்**
**77, போல் றோட், மாத்தளை.**
**விலை: 150 ரூபா.பக்கம்: 165.**

'கண்டி இராச்சியத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தவர்களுக்கு, கண்டி இராச்சிய குல அமைப்புப்படி வம்சாவளிப் பெயர்கள் வழங்கப்பட்டிருப்பதுடன், இதில் மிகவும் அதிசயப்படக்கூடிய விடயம் என்னவெனில், இஸ்லாமியர்கள் மத்தியில் உலகில் எவ்விடத்திலும் அவ்வாறான குல அமைப்பு காணப்படுவதில்லை என்பதாகும். "முதலி", "முதியான்சே" ஆகிய வம்சாவளிப் பெயர்களைப் பெற்ற முஸ்லிம் சமூகத்தவர்கள் கண்டி இராச்சியத்தில் வாழ்ந்துள்ளனர். இவ்வாறான வம்சாவளிப் பெயரைப் பெற்றவர்கள் உயர்ந்த விவசாயக் கோத்திரத்தைச் (கொவிகுல) சேர்ந்தோர் என அக்காலத்தில் கருதப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் கண்டி இராச்சிய முஸ்லிம் சமூகத்தவர்கள் தமது சிங்கள வம்சாவளிப் பெயர்களை மிகக் கௌரவமாக மதிக்கின்றனர்....'

- கே. சுனில் பெரேரா அவர்களின் அணிந்துரையில்.....



**விழியோரத்துக் கனவுகள்**
**திருமலை சுந்தா**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வெளியீடு**
**திருகோணமலை.**
**விலை: 75 ரூபா. பக்கம்: 148.**

ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி இது. இதில் 18 கதைகள் அடங்கியுள்ளன.




**அம்மா (கவிதைகள்)**
**தொகுப்பாளர்: திருமலை சுந்தா**
**அம்மா பதிப்பகம்**
**172, பிரதான வீதி,**
**திருகோணமலை.**
**விலை: இல்லை. பக்.: 20.**

பதினைந்து கவிஞர்கள் 'அம்மா' குறித்து எழுதிய பதினைந்து கவிதைகளின் தொகுப்பு.

**நூலாய்வு : மாணிக்கவாசகன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு
சேமிப்புக் கணக்கின் மூலம்
பெறுமதியான ஏராளம்
பரிசுகளை வெல்ல
இப்பொழுது
அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**
10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**
100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**
10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்



ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று ஆகக்குறைந்த கணக்கு மீதியாக 3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும் ரண்கெகுளு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

**ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.**

FIRST & FORWARD

**இலங்கை வங்கி**

ලංකා බැංකුව Bank of Ceylon

புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளிவிளக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org